www.gnanam.info
www.gnanam.lk


ஏப்ரல் 2024

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை **287**

விலை :
ரூபா 100/=

22 APR 2024



## இலக்கிய உள்ளங்களை இணைக்கும் அன்பான உறவுப்பாலம்

## கலாபூஷணம் கே.பொன்னுத்துரை



24 APR 2024

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் நாணயங்கள்... 16 ஞா.பா.

தற்காலத்திலே ‘கள்ள’ நாணயத்தாள்களை அதிகாரமற்றவர்கள் உருவாக்குவதைத் தடுப்பதற்குத் தனித்துவமான பல அமைப்புகள் நாணயத்தாள்களில் உள்ளடக்கப்பெற்றுள்ளன. இதனால் நாணயத் தாள்களைச் சாதாரணமாக மீளுருவாக்கம் செய்து ‘கள்ளப் பணம்’ உருவாக்குதல் சிரமமாகின்றது. பயன்படுத்தும் அச்சுத்தாளின் தரம், செதுக்கப்பட்ட அச்சு (Intaglio Printing), கோடுகளும் – புள்ளிகளும் (Tactile Bars and Dots), நீர்வரிக்குறி (Watermark), பாதுகாப்பு இழை என்பன அவற்றில் சிலவாகும்.






1942ஆம் ஆண்டு ஒரு ரூபாய் சிங்க நீர்வரிக்குறி






1954ஆம் ஆண்டு ஒரு ரூபாய் சிங்க நீர்வரிக்குறி






1962ஆம் ஆண்டு ஒரு ரூபாய் சிங்க நீர்வரிக்குறி

1987ஆம் ஆண்டு 1000 ரூபாய்






1000, 20 தாள்களில் ஒரேமாதிரி இருப்பினும் 20 ரூபாய் தாளிலுள்ள சிங்கத்தின் வாள் வித்தியாசமானது



1995ஆம் ஆண்டு 20 ரூபாய்




இங்கு காட்டப்பட்ட சிங்க நீர்வரிக்குறிகள் (WaterMarks) அனைத்தும் காலத்துடன் சற்று மாறுபட்டுள்ளதைக் காணலாம்.






1979ஆம் ஆண்டு இரண்டு ரூபாய் நாணயத்தாளை வெளிச்சத்தில் பார்க்கும் போது (வலது படம்) சிங்க நீர்வரிக்குறியையும் நீள் வாட்டு பாதுகாப்பு இழை யையும் காணலாம்.

2006ஆம் ஆண்டு வெளியான இரண்டாயிரம் ரூபாய் நாணயத் தாளிலே மினுமினுப்பான இழை யானது உள்ளே - வெளியே என்னும் அமைப்பிலே உள்ள தோடு இந்த இழையானது எழுத் துக்களைக் கொண்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது.








இந்த அடிப்படையிலே நாணயங்களும் நாணயத்தாள்களும் உருவாக்கும்பொழுது அவை பொலிவுடன் தோன்றமளிப்பது மாத்திரமன்றி அவற்றை அதிகாரமற்ற மீளுருவாக்கத்துக்குச் சிரமமாகவும் அமைதல்வேண்டும் என்பது தெளிவாகின்றது. ‘கள்ளப் பணம்’ உருவாக்குதல் உலகளாவிய ரீதியிலுள்ள ஒரு பிரச்சனையாகும். இலங்கையிலே சில நூற்றாண்டுகளுக்கு முன்னரே ‘கள்ளப் பணம்’ உருவாக்கிய சட்டசீர்கேட்டைப் பதிவுகளில் காணமுடிகின்றது. 1833ஆம் ஆண்டு சின்னத்தம்பி என்பவர், லெப்பை என்பவரிடம் பணத்தைக் கொடுக்க, அந்தப் பணத்தைக் கொண்டு லெப்பை, கோப்பி கொள்வனவு செய்துள்ளார். அந்த நாணயங்களில் சந்தேகம் வரவே விசாரணையை மேற்கொண்ட பொலிஸார், மீன்களின் எலும்புகளைக் கொண்டு ‘கள்ளப் பணத்தை’ சின்னத்தம்பி உருவாக்குவதைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த விபரங்களை The History of the Ceylon Police எனும் நூலிலே காணலாம்.

(குறிப்பு : இக்கட்டுரையில் காட்டப்பட்ட நாணயங்கள் யாவும் ஆசிரியரின் தனிப்பட்ட சேகரிப்பிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளி: 24
சுடர்: 11
287

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

711.2 mm

ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்

நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

ஓவியர்: கிறிஸ்டி நல்லரெத்தினம்

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka
வங்கி விபரம் ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka

| | |
|---|---|
| ஒரு வருடம் | :ரூ 1,000/= |
| ஆறு வருடம் | :ரூ 5,000/= |
| ஆயுள் சந்தா | :ரூ 20,000/= |

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.

## இதழினுள்ளே.....



⊙ **கவிதைகள்**

Dr. ஜலீலா முஸம்மில் 06
ஆவூரான் சி. சின்னராஜன் 13
ஜீவகாருண்யன் 17
பராக்கிரமகொடி துவக்கு /
கலாபூஷணம் எம்.எம். மன்ஸூர் 33
ஆறுமுகம் சந்திரமோகன் 39

⊙ **சிறுகதைகள்**

ரஞ்ஜனி சுப்ரமணியம் 07
வெல்லாவெளி விவேகானந்தம் 18
ஏ.ஏ. ஹெச்.கே. கோரி 24
சுந்தரிமணியன் 34

⊙ **கட்டுரைகள்**

சியாமளாதேவி இராமநாதன் 03
கார்த்திகா கணேசர் 14
ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன் 23
ஞா.பா.

⊙ **விமர்சனம்**

வெலிகம ரிம்ஸா முஹம்மத் 30

⊙ **பத்தி**

பேராசிரியர் துரை மனோகரன் 37

⊙ **சமகால இலக்கிய நிகழ்வுகள்**

கே. பொன்னுத்துரை 39

⊙ **வாசகர் பேசுகிறார்** 40

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

## எமது சிறுவர் இலக்கியம்...

சிறுவர்கள் பற்றிய சிந்தனை சமூக மேம்பாட்டின் ஆரோக்கிய அம்சமாக இன்று கருதப்படுகிறது. சமூகமாற்றம் (Social Transformation) சிறுவர்களிடமிருந்து ஆரம்பிக்க வேண்டுமெனக் கல்வி உளவிய லாளர்கள் வலியுறுத்துகின்றனர். சமூக மாற்றத்திற்கு அத்தியந்த பங்களிக்கும் அலகுகளில் ஒன்றாகிய கலை இலக்கியத்தில், "சிறுவர் இலக்கியம்" பற்றிச் சிந்திப்பது பொருத்தமானது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைப்பட்டயம் சிறுவர்கள் என 18 வயதுக்கு உட்பட்டோரையே குறிப்பிடுகிறது. கல்வி உளவியலாளர்கள் சிறுவர்களின் உடல் உளவளர்ச்சியை மனங்கொண்டு உப பிரிவுகளாக குழந்தைப்பருவம், பிள்ளைப் பருவம், கட்டிளம்பருவம் என வகுத்துக் கூறுவர். ஒவ்வொரு காலகட்டங்களிலும் இவர்களது வளர்ச்சி நிலைகள் வேறானவை. முதல் ஐந்தாண்டுகளில் மனித மூளைவளர்ச்சியின் வேகம் மிகத் துரிதமானது. குழந்தை தன்னை மையமாக வைத்துச் சூழலைப் புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறது. படிப்படியாகச் சிந்தனை வளர்ச்சியடைகிறது. துருவித் துருவி ஆராய்ந்து, சுவைத்து, அனுபவித்து, விநோதங்களைக் கண்டுகளிக்க ஆவல் கொள்கிறது. புதுமையாக எதையும் நோக்குகிறது. அடுத்த படிவளர்ச்சியான கட்டிளம் பருவத்தில் மேற்குறிப்பிட்ட வளர்ச்சியின் அடித்தளத்தின் தொடர்ச்சியில் ஆக்கத்திறனை விருத்தியாக்குகிறது. தலைமைதாங்கும் பண்பு உருவாகிறது. ஆளுமைகளுக்கு அத்திவாரம் இடப்படுகிறது.

ஆகவே சிறுவர் இலக்கியக்களத்தின் பரப்பும் கருவளத்தின் வீரியமும் கனமும் காத்திரமானவை என்பது புலனாகிறது. வெறும் பாப்பாப்பாடல்கள் நீதிக்கதைகள் மட்டும் சிறுவர் இலக்கியமாகிவிடாது. இலக்கியம் மொழியிலானது. சிறுவர் இலக்கியத்தின் மொழி தனித்துவமானது. எளிமையானது. ஓசை நயம்மிக்கதாகவும் கருத்துக் கவர்ச்சியுள்ளதாகவும் அது அமையவேண்டும்.

புதிய சவால்களை இன்று சிறுவர் சமூகம் எதிர்நோக்கியுள்ளது. நிற, இன, மத பாரபட்சம், பாலியல் ரீதியான வன்முறை, வர்க்கரீதியான சுரண்டல், போர்ச்சூழல் உருவாக்கிய பாதிப்புகளான அகதி, அநாதை நிலைமைகள் இவைகள் பற்றிய சிறுவர்களின் சிந்தனை வெளிப்பாடுகள், செயற்பாடுகள் கருப்பொருளாகவேண்டும். மறுபுறம் நவீன துரித விஞ்ஞான முன்னேற்றத்தின் விளைவாலும் பூகோள மயமாதலாலும் சிறுவர் சிந்தனையில் தாக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்தை மட்டுமே நோக்காது எதிர்காலத்தை விஞ்ஞான முன்னேற்றக் கற்பனையில் கண்டுகளிக்கின்ற மனப்பாங்கு உருவாகியுள்ளது. இதனைத் தொலைக் காட்சியில் சிறுவர்கள் காண்கிறார்கள். ஆனால் எமது இலக்கியங்களில் காணமுடிவதில்லை.

நவீன விஞ்ஞான சிந்தனைக்கு வளம் சேர்க்கும் science fiction - விஞ்ஞானப் புனைகதைகள் செய்து தருவோர் சிறுவர் இலக்கியத்திற்கு புதிய உயிர் தருவோராகிறார்கள். சிறுவர் இலக்கிய வடிவங்கள் குழந்தை, பிள்ளை, கட்டிளம் பருவம் ஆகிய நிலைகளுக்குத் தகுந்த வகையிலும், சிறுவர்களைக் கவரும் இசையும் அசைவும் கலந்த நடிப்புடைய நாடகங்களாகவும், சிறுவர் பாடல்களுடைய ஒலி நாடாக்களாகவும் பரிணமிக்கவேண்டும். இதேவேளையில் எமது பாரம்பரிய விழுமியங்கள் பிறழாது காலத்துக்கேற்ற மாற்றங்களை உள்வாங்கிய உயிர்ப்புடன் சிறுவர் சிந்தனைகள் வேர்பதிய வேண்டும்.

இத்துறையில் ஈடுபாடு உள்ளவர்கள் சகலரும் இணைந்து பொறுப்புடனும் ஆழ்ந்த சிந்தனையுடனும் செயற்பட வேண்டும்.

ooo


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலக்கிய உள்ளங்களை இணைக்கும் அன்பான உறவுப்பாலம்

## கலாபூஷணம் நாவல்நகர் கே.பொன்னுத்துரை

**கலாபூஷணம் சியாமளாதேவி இராமநாதன்**

இலங்கையின் மத்திய மலைநாட்டின் முக்கியமான ஒரு சந்தியஸ்தானம் நாவல்நகர். இங்கு பல பெரியார்கள் தோன்றியிருக் கின்றார்கள். இவர்கள் கல்வி, கலாசாரம் ஆன்மீகம், சமூகசேவை, ஊடகத்துறை முதலான பல்வேறு துறைகளில் பெரும் பங்காற்றி யுள்ளார்கள். இந்நகரில் ஆன்மீகமும். இலக்கியமும், சோதிடக்கலையும், பல தொழிற் சங்கப் போராட்டங்களும் நிகழ்ந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் பலவுள்ளன. குறிஞ்சிக் குமரன், கதிரேசன் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட கலாசாலைகள் இன்று நூற்றாண்டை நோக்கி அன்று முதல் இன்று வரை அறிவொளி பரப்பி நிற்கின்றன. இவ்வாறு நாவலப்பிட்டி எனும் நாவல்நகரில் தோன்றிய பெரியார்களும், நல்நெஞ்சங்களும் இந்த நாட்டிற்கே ஒளி விளக்காகத் திகழ்கின்றனர்.

இவர்களில் கிட்னர், பாப்பாத்தியம்மா தம்பதியினரின் ஏகபுத்திரர் நாவல்நகர் கே. பொன்னுத்துரையும் ஒருவராவார், இவர் தனது ஆரம்பக்கல்வியை "ரம்புக்பிட்டிய" கலவன் பாடசாலையிலும் பின்பு டிக்கோயா பட்டல்கல தோட்டப்பாடசாலையிலும், "ஹைலண்ஸ்" கல்லூரியிலும் கற்றார். இவர் பாடசாலைக் காலத்திலேயே கல்வியில் மட்டுமின்றி சமூக சேவையிலும் நாட்டம் கொண்டிருந்தார். எப்போதும் தான் எடுக்கும் எந்தவொரு காரியத்தையும் செவ்வனே செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அதன்படி செயற்படுபவர். எளிமையாகவும், இனிமையாகவும், அன்பாகவும் எல்லோரிடமும் பழகுவார். தன் வார்த்தைகளால் மற்றவர்களின் மனம் புண்பட்டுவிடக்கூடாது என்று மிகவும் அவதானமாக பேசிப்பழகுவார், சிறுவர்கள் முதல் பெரியோர்கள்வரை எல்லோரையும் அன்புடன் வழிநடத்துபவர்.

60இற்குப் பின்னர் மலையகத்தில் தோன்றிய புதிய ஆந்திரப்பரம்பரையினரின் வாரிசாக 70களின் தலைக்கொழுந்தாக விளங்குபவர், சமகால இலக்கிய கர்த்தாவான கே.பொன்னுத்துரை அவர்கள் என்றால் அது மிகையாகாது. கல்வி, கலை, இலக்கியம், ஆன்மீகம், சமூகத்தொண்டு, சமூகசேவை எனப் பல்வேறு துறைகளிலும் ஆர்வம் கொண்டு தடம் பதித்து சாதனை படைத்து வருபவர் கலாபூஷணம் கே.பொன்னுத்துரை அவர்களாவார்.

நாவல் நகரின் பாடசாலைகளின் அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி, அறநெறி பாடசாலை அபிவிருத்தி, கலை, கலாசாரம் என்பவற்றுக்காக உயிர் மூச்சாக செயற்பட்டவர்களில் முதன்மை யானவர் கே. பொன்னுத்துரையாவார். இனிய சுபாவம் கொண்ட இவர் சமூகநலனில் அக்கறை யில்லாத படிப்பாளிகளிடமோ, உத்தியோகத்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடமோ கண்டிப்பாக நடந்துகொள்பவர். முகஸ்த்துதிக்காக புகழும் பழக்கமற்றவர். அதேவேளை சிறிய சேவை எனினும் சமூகத்திற்காக முன்னின்று செயற்பட்டவரை பாராட்டி, தட்டிக்கொடுக்கத் தயங்கமாட்டார்.

இந்து சமய கலாசார திணைக்களம் காலத்திற்குக் காலம் புதிய புதிய அம்சங்களை முன்னெடுத்த பொழுது அதனை வரவேற்று சிரமேற் கொண்டு பணியாற்றிய பகுதியில் நாவல் நகருக்கு தனியான ஓர் இடமுண்டு, இந்த வாய்ப்பைப் பெற்று தான் சார்ந்த பகுதிக்கு உணர்வு பூர்வமாக காத்திரமாக செயலாற்றியவர்களில் நாவல் நகர் கே. பொன்னுத்துரை முதன்மையானவர் என்பதை எனது துணைவர் திரு.மாத்தளை வடிவேலன் அவர்கள் இந்து சமய கலாசார அமைச்சில் பணியாற்றிய காலத்தில் குறிப்பிட்டதை பல சந்தர்ப்பங்களில் நான் கேட்டிருக்கின்றேன்.

அக்காலகட்டத்தில் நாவல் நகர் கூட்டங்களா? கருத்தரங்குகளா? விழாக்களா? என்றால் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் முக்கியமானவர்களை அழைத்தாலும், அழைக்காவிட்டாலும் படை திரண்டு வந்து சிறப்பிப்பார்கள் நாவல நகர் சமூகத்தொண்டர்கள். இதைவிட ஆலய புனருத் தாரணங்கள், கும்பாபிஷேகங்கள், அறநெறி விழாக்கள், இலக்கிய கலந்துரையாடல்கள் என பலவும் கருமேகங்களெனத் திரண்டு நாவல் நகரில் எந்நேரமும் அமுதகானம் ஒலித்துக் கொண்டேயிருக்கும். இவற்றுக்கெல்லாம் ஓய்வின்றி, ஒழிச்சலின்றி, சிரமம் பாராது, முகம் சுழிக்காமல் உழைத்தவர்களில் கே.பொன்னுத் துரையும் ஒருவராவார்.

ஆத்மஜோதி நா.முத்தையா அவர்களின் ஆன்மீக வழிகாட்டலில் தன்னை புடம் போட்டுக் கொண்ட இவருக்கு பேராசிரியர் நந்தி, எழுத்தாளர் ஆப்டீன் ஆகியோரின் இலக்கியப் பங்களிப்பும், வழிகாட்டலும், அவர்களின் செயற்பாடுகளும் இலக்கிய ஈடுபாட்டிலும், சமூக சமய ஈடுபாட்டிலும் பெரும் பங்களிப்பைச் செய்வதற்கு உந்துசக்தியாகின என்பதில் இவர் பெருமை கொள்கிறார். இலக்கியச் செயற்பாடுகளில் இவர் ஆர்வம்கொண்டதால் 90 களில் மலையக ஆன்மீக கலை இலக்கிய மன்றத்தை தொடங்கி அதனூடாக பல செயற்திட்டங்களை செயற்படுத்தினார். இவரால் சேகரிக்கப்பட்ட மலையக எழுத்தாளர்களின் 'முகமும் முகவரியும்' அந்தனிஜீவா அவர்களால் தொகுப்பட்டு மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சினால் வெளியிடப்பட்ட நூல் முக்கியமானது.

அரச திணைக்களம் சார்ந்த விழாக்களில் தனது ஒத்துழைப்பையும், அரிய பங்களிப்பையும் நல்கும் பொன்னுதுரையவர்கள் எழுத்தாளர்களின் நிலையை உணர்ந்து அவர்களை ஊக்குவித்து, உபகாரம் செய்வதிலும் பின்நிற்பதில்லை. மலையகத்தில் பொன்னுத்துரை அவர்கள் தனியொருவராக நின்று எழுத்தாளர்களை ஊக்குவிப்பதை அறியும் போது வியப்பு மேலிடுகின்றது. கவிஞர்."குறிஞ்சி தென்னவன்" அவர்களுக்கு தினகரன் பத்திரிகையின் அனுசரனையுடன் ரூபா ஒரு இலட்சத்தை சேகரித்து அவர்களின் குடும்பத்திற்கு கண்டியில் வைத்து பொற்கிழியாக வழங்கியமை மலையக இலக்கிய வரலாற்றில் பதிவாக இருக்கிறது.

இன்னுமொரு சம்பவம் இரவோடிரவாக கலகா வீசுந்தரமலைக்கு வேன் ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு "கரகாட்டக் கலைஞர்" கலகா பச்சைமுத்து வீட்டுக்குச் சென்று விடிவதற்கு முன்னர் அவருடைய விபரங்களையும், விண்ணப்பத்தையும், புகைப்படத்தையும் கொண்டு வந்து கலாசார திணைக்களத்தில் கொடுத்து கலாபூஷண விருதை பெறச் செய்தவரும் கே.பொன்னுத்துரையாவார்.

சமூகத்தில் கொரானா- 19 நோய் தொற்று காரணமாக கடைகள் மூடப்பட்ட நிலையில் அல்லல்பட்ட கலைஞர்கள், எழுத்தாளர்களுக்கு பொன்னுத்துரை அவர்களின் சார்பில் உணவுப் பொதிகள் சென்றடைந்தமையினை அறியும் போது, அவர் நலிந்த கலைஞர்கள் மீது கொண்டுள்ள பற்றையும், பாசத்தையும், நினைக் கையில் மெய்சிலிர்க்கின்றது.

மூத்த எழுத்தாளர் திரு.அந்தனிஜீவா அவர்கள் நோய் வாய்ப்பட்டிருந்தாலும், அவருக்காக விழா கொண்டாடப்பட்டு "இலண்டன்" இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகத்தின் நிறுவனர் வவுனியூர் இரா. உதயணன் அவர்களின் மூலமாக நிதியுதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கு பேருதவியாக முன்னின்று செயற்பட்டவர் திரு. கே. பொன்னுத்துரையாவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக எழுத்தாளர் திரு. ஜோசப் தனது சேகரிப்பிலுள்ள நூல்களை கொழும்புத் தமிழ்ச்சங்கத்திடம் கையளித்தபோது அவரின் பிறந்ததினத்தை விழாவாக கொண்டாடி ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது. இந்நிகழ்வுக்கும் முன்னின்று உழைத்தவர்களில் பொன்னுத்துரையும் ஒருவர் என்பது மனம் கொள்ளத்தக்கது. புதிய விடயங்கள் மட்டுமன்றி பழம்பெரும் விடயங்களிலும் விடய ஞானம் கொண்டவர் இவர். பத்திரிகைகள், சிறு சஞ்சிகைகள் என்பனபற்றிய விபரங்களைத் தெள்ளத்தெளிவாகக் கூறும் இவரது கருத்துக்களை கேட்டால் வியப்பு மேலிடும். அச்சொட்டாக ஆதியோடு அந்தமாக இவர் எடுத்தியம்பும் பாங்கே தனியானது விழாக்கள், மகாநாடுகள் பற்றி இவரிடம் தகவல் பொக்கிஷமே களஞ்சியமாக வியாபித்துக்கிடக்கின்றது.

இலங்கை மட்டுமின்றி, தமிழக இலக்கிய விடயங்களிலும் ஆழ்ந்த புலமை கொண்டவர். பல தகவல்களை விரல் நுனியில் வைத்திருந்து கேட்டவுடனேயே விபரம் கூறும் ஆற்றலும், அறிவும் மிக்கவர். நாவல் நகரில் கலை, இலக்கிய, கல்வி வரலாற்றை புரட்டிப்பார்த்தால் எங்கோ ஒரு மூலையில் அந்த 90 களில் இவரது பதிவு தடம் பதித்து காணப்படும் எனப் பெருமை கொள்ள முடியும்.

தமிழக அறிஞர்களான பே.சு.மணி, அறிஞர் சிலம்பொலி செல்லப்பானார், அறிஞர் ஔவை நடராஜன், அமரர் கு. சின்னப்பபாரதி, ஆதவன் தீட்சண்யா போன்ற எழுத்தாளர்கள், பத்திரிகைத் துறை சார்ந்தவர்களுடனும் இன்றும் தொடர்பில் இருப்பதுடன், நம் நாட்டு எழுத்தாளர்களான பத்மா சோமகாந்தன், லலிதா நடராஜா, வசந்தா வைத்தியநாதன் அம்மையார் முதலான பெண் எழுத்தாளர்களையும் நாவல் நகருக்கு அறிமுகம் செய்துவைத்த பெருமை கே.பொன்னுத்துரைஅவர்களையே சாரும்.

சிறுகதை, நாவல், சஞ்சிகை ஆசிரியர் "சாகித்யரத்னா" உயர்திரு ஞானசேகரம் அவர்கள் பிரதம ஆசிரியராக இருக்கும் "ஞானம்" கலை இலக்கியச் சஞ்சிகையில் இவர் மாதந்தோரும் பதிவு செய்யும் 'சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்" பொன்னுத்துரை அவர்களின் பெயரை கலை இலக்கியவாதிகளால் பாராட்டு பெற்றதாக கருத முடியும், ஞானம் இலக்கிய பண்ணையின் செயற்பாடுகளிலும் இவரின் பங்கு குறைந்ததுதல்ல. இதே போல் அவர் ஈடுபாடுகொண்டுள்ள பத்திரிகை, தகவல், பொதுப்பணி என்பனவற்றை நம் நாட்டில் மட்டுமின்றி தமிழகம் மட்டும் சர்வதேச தொடர்புகளுக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து வழிகாட்டியாக திகழ்கிறார் என்பதை பொன்னுத்துரை அவர்கள் அடிக்கடி நினைவு கூறுகின்றார்.

இவ்விருவரின் இலக்கிய இணைப்பு எம் போன்றோருக்கு பெரிதும் பேருதவியாக உள்ளது என்பதை நானும் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பத்திரிகையாளர் பொன்னுத்துரை அவர்கள் சோரம் போகாத தன் எழுத்துக்களால் எப்பொழுதுமே நியாயத்தின் பக்கம் நின்று உழைத்து வருகின்றார். சமூகத்தின் தேவை கருதி அவ்வப்போது ஊடகவாயிலாக துணிச்சலுடன் குரல் கொடுத்துவருபவர் இவர் என்பது குறிப்பிடத் தக்கது.



பல எழுத்தாளர்களுக்கு ஆதரவளித்து விழாக்களெடுத்த பெருமை இவருக்கே உரித்தான தனிச்சொத்தாகும். பொன்னுத்துரை அவர்கள் கடும் உழைப்பாளி. எத்தனை சிரமமான வேலை என்றாலும் சலிக்காது தனது கடமையை இன் முகத்தோடு நிறைவேற்றும் பண்பு அவரிடமுண்டு. இவ்வாறு பன்முக ஆற்றலும், மனித நேயமும் கொண்ட கலாபூஷணம் கே. பொன்னுத்துரை அவர்கள் தற்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நிர்வாகக் குழு உறுப்பினராக இணைந்து சேவை யாற்றி வருவது வாசகர்களுக்கும், எழுத்தாளர் களுக்கும் பேருதவியாக அமைந்துள்ளது. இனிய சுபாவம் கொண்ட வாழ்க்கைத் துணைவியார், கல்விமான்களாக மிளிரும் மக்கட் செல்வங்கள் பேரக்குழந்தைகள், இனிமை யும், எளிமையும் ஒருங்கிணைந்த பொன்னுத்துரை அவர்களின் வாழ்வு வளம்பெற இறைவனை வேண்டித் துதிக்கின்றேன்.

"சமூக வளர்ச்சியில் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு ஜீவன்கள் தம்மை அர்ப்பணித்து செல்கிறார்கள். அவர்களை நாம் கண்டு கொள்வதில்லை கவனத்தில் வைப்பதில்லை அவ்வாறான பல முன்னோடிகள், முன்மாதிரிகள் இருக்கதான் செய்கிறார்கள். விளம்பரங் களையும் வேறு தேவைகளையும் இலக்காக கொள்ளாமல் அவ்வாறான பல்லாயிரம் பேரில் பொன்னுத்துரை அங்கிளும் ஒருவர். அவருடன் பேசிக் கொண்டி ருந்தால் நேரம் போவது கூட தெரியாது கடந்து போன காலத்தை இனிமையாக எடுத்துரைப்பார் அத்தனையும் ஆவணப்படுத்த வேண்டிவை". என்று மரபுக் கவிஞர் லுணுகலைஸ்ரீ யின் வாக்கு மூலமாக இருக்கிறது.

பொன்னுத்துரையவர்கள் மலைய கத்திற் கிடைத்த பெரும் பொக்கிஷம். எழுத்தும் இயக்கமுமாக இணைந்து செயற்படும் இவரின் சேவை இந்த (73) வயதிலும் ஓய்வின்றி தொடர மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் அருள்வேண்டித் துதிக்கின்றேன்.

ooo

# உழைக்கும் (சி)கரங்கள்

உழைக்கும் கரங்கள் உன்னத வரமே
ஊரெலாம் அவர்தனை வாழ்த்திடல் தகுமே
பிழைக்கும் வழிதனைப் பேணிடும் கரமே
பேருயர் தியாகம் பொருந்திட்ட திறமே
தளைக்கும் உறுபணி மண்ணின் வளமே
தகைகள் வாழ்விலே புரிந்திடும் தவமே
மலைக்கும் விரிகடல் வெற்றியின் தளமே
மாசிலா தோங்கிடும் உறுதியின் புலமே

ஓய்விலா உழைப்பில் எறும்பினை ஒத்தவர்
ஊக்கத்தின் மறுபேராய் உண்மையாய் வாழ்பவர்
தொய்விலா முயற்சியில் தேனியாய்ச் சுழல்பவர்
தேயாத நிலவெனத் திருப்பணி புரிபவர்
காய்ந்திடும் வெயிலில் கடமை செய்பவர்
கணக்கிலா வியர்வை சிந்திடும் உத்தமர்
மாய்ந்தே போராடும் மிடுக்கான வித்தகர்
மாநிலத்தில் மாதவம் செய்திடத் துடிப்பவர்

மண்ணையும் பொன்னாக்கும்
வித்தையைப் பண்ணுவார்
மானிட வாழ்விற்கோர் அச்சாணி ஆகுவார்
தன்னலம் இன்றியே துன்பங்கள் தாங்குவார்
தாக்கும் வறுமையைத் துச்சமாக எண்ணுவார்
விண்ணதிரும் வெற்றியை விரைவாகப்
பெறுவார்
விளைச்சல் நிலத்தில் மெழுகாக உருகுவார்
நுண்ணிய நரம்புகளும் முறுக்கேற உழைப்பார்
நித்திரை மறந்தே நித்திலத்தைக் காப்பார்

உழைக்கும் (சி)கரங்கள் உலகை இயக்கும்
திளைக்கும் வளங்களை நாட்டிலே குவிக்கும்...

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்
இலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை




# நினைவுக்கனல்

## ரஞ்ஜனி சுப்ரமணியம்



கண்களை மூடி மோனத்தில் மூழ்கியிருந் தாலும் மனதின் ஆர்ப்பரிப்புகளையும் கொந்தளிப்புகளையும் பானுவால் அடக்க முடிய வில்லை. அந்தப் பெண்ணின் மனம் என்ன நிலையில் இருக்கும் என்பதை ஒரு பெண்ணாகவும் வைத்தியராகவும் உணர்வது அவளுக்கு ஒன்றும் கடினமானதாக இல்லை. அவள் கண்கள் லேசாகத் தளும்பின.

சென்றவாரம்தானே வீட்டில் உதவிக்கு வரும் செல்லம்மா ஆச்சியின் பேத்திக்கு நடந்த சம்பவம் ஊர்வதந்தியாகக் காற்றோடு கலந்து வந்தது. அந்தப் பாதிப்பே இன்னும் அகலவில்லை.

இவ்வாறான சம்பவங்களைக் கேட்கும் போதெல்லாம் பானு கண்களைச் சுருக்கி தலையைப் பலமாகக் குலுக்கியபடி, அந்த எண்ணங்களை மனக் கூட்டிலிருந்தும் நினைவுப் புலத்திலிருந்தும் பலவந்தமாக வெளியேற்ற முயற்சிப்பதும் தோற்பதும் நித்திரையின்றி விழித்திருப்பதும் வழமைதான்.

மீண்டும் மீண்டும் அவளது சகவைத்தியரான அனோஜாவின் விகடமும் வெட்கமும் கலந்த சிரிப்பொலி காதுகளில் உறுத்தலாகக் கேட்டுக் கொண்டே இருந்தது.

“பானு, எனக்கு உங்களிடம் ஒரு ஆலோசனை வேணும்”

“சொல்லுங்கோ அனோஜா”

அனோஜா சேவைக்கு மிகவும் புதியவள். உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்தபின் அவளது முதல் நியமனம் இது. சில நடைமுறைச் சிக்கல்களை சீனியரான பானுவிடம் தான் கேட்பது வழக்கம்.

“கதை தெரியுமா உங்களுக்கு. நான் இரவு டியூட்டியில் இருந்தபோது sexual abuse கேஸ் ஒண்டு வந்தது. வயசை சொன்னா நம்ப மாட்டீங்க. பொலிசுக்கு அப்பவே தகவல் சொல்லி விட்டேன். ஆனா வந்த உடன என்ன செய்ய வேணும் என்று எனக்கு ஒரே பதற்றமாயிட்டுது. அந்தப் பெண் தமிழில் சொன்னதை சரியானபடி விளங்குவதிலும் கொஞ்சம் சிக்கல் இருந்தது. இப்பவும் வாட்டிலை தான் இருக்கிறா”.

தலையை உயர்த்தி முகட்டைப் பார்த்துச் சிரித்தாள் அனோஜா. சம்பவத்தை அவள் ரசிப்புடன் கூறினாளா அல்லது பெரிது படுத்துவதற்கு இதெல்லாம் ஒரு விஷயமே இல்லை என்கிற அசட்டை மனநிலையில் பேசினாளா என்று எண்ணியபோது மனதினுள் வலியொன்று தோன்றிக் கணநேரம் நிலைத்தது.

உணர்வுகளை வெளிப்படுத்தாது அந்தச் சம்பவத்தைக் கேட்டுக் கொண்டு இருப்பதற்கே, பானுவுக்கு பெரும் பிரயத்தனம் தேவையாக இருந்தது. அவள் கேட்ட ஆலோசனைகளைக் கூறியபின்,

“இது சிரிக்கிற மாதிரி விஷயம் எண்டு நினைக்கிறீங்களா அனோஜா”?

“இல்லை பானு. உடல் என்பதில் எதுவும் இல்லையே” என வருத்தம் தெரிவிக்கும் பாவனையில் கூறினாள்.

அறுபது வயதுடைய ஒரு பெண் வன்புணர்வு செய்யப்பட்டிருக்கிறாள். இளமை யில் அந்தப் பெண்ணின் பின்னால் சுற்றியவனாம். வைத்தியசாலையில் இரவுப் பணியில் அனோஜா இருந்தபோது அதிகாலை ஐந்து மணியளவில் அப்பெண் அயலவரான ஒரு பெண்ணின் துணையுடன் வந்திருக்கிறாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவம் பற்றி எந்தவிதமான அனுதாபமோ கருணையோ சமுதாயக் கோபமோ அனோஜா விடம் வெளிப்படவில்லை என்பது பானுவுக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. "ஐயோ அவள் பாவம்" என்று கூடச் சொல்லவில்லையே. ஒரு நகைச்சுவைக் கதையொன்றை சொல்வது போல் அல்லவா கூறினாள். தனக்குத் தனக்கென்று வரும்போது மட்டும்தான் வலிக்குமா என பானு நினைத்துக் கொண்டாள்.

மேல்தட்டு வர்க்கத் தோற்றம். நுனி நாக்கு ஆங்கிலம். பகட்டான நடையுடை பாவனை. வேலை நேரம் தவிர்ந்த வேறு நேரங்களில் ஓரளவு கவர்ச்சிகரமான உடை.

மேற்குலக நாடொன்றில் மருத்துவக் கல்வி முடித்தவள். இங்கு ERPM பரீட்சையில் பல தடவைகள் கோட்டை விட்டு, உள்ளகப் பயிற்சி முடிந்து சேவைக்கு வந்தபோது வயது முப்பத்தைந்தைக் கடந்திருந்தது. தமிழ் கொஞ்சம் கதைப்பாள். இதுதான் அனோஜா.

திருமணம் முடிக்கவில்லை. மருத்துவம் படிக்கும் காலத்திலேயே இணைந்து வாழ்தல் உறவில் இருந்ததையும், இங்கு வந்த பிறகு தற்போது மூன்றாவது காதலரைச் சேர்த்திருப்பது பற்றியும் எந்தச் சஞ்சலமும் அவளுக்கு இருந்ததில்லை. தனது நவநாகரிகத்தினையும் சுயத்தினையும் வெளிப்படுத்தும் வழியாக இதை நினைக்கிறாளோ எனவும் பானு சந்தேகிப்பதுண்டு.

வைத்தியசேவையில் உள்ளவர்கள் சேவைக்குரிய அறவிழுமியங்களைக் காப்பவர்களாக வாழ்ந்தால் நல்லதுதான். ஆனால் தனி மனித குணாதிசயங்கள் சிக்கல் மிகுந்தவை. வரையறைகளும் வேறு பட்டவை என்பதையும் பானு உணர்வாள்.

அனோஜா விரும்பத்தக்க பல பண்புகளும் கொண்டவள். அவளின் வெளிப்படையான குணம் பானுவுக்குப் பிடிக்கும். தன்னை நல்லவளாகக் காட்டிக்கொள்ள வேண்டுமென்று அவள் ஒருபோதும் நடிப்பதில்லை.

வடக்கின் யுத்த சூழ்நிலைகளுக்கு மத்தியில் மிகவும் பின்தங்கிய கிராமம் ஒன்றிலிருந்து தேர்வாகிக் கொழும்பில் மருத்துவம் படித்து, தற்போது வடக்கிற்கு வெளியே பணிபுரியும் பானுவிடம் தன் அந்தஸ்து நிமித்தம் எந்தப் பாகுபாட்டையோ அல்லது இனவன்மத்தையோ அனோஜா காட்டுவதில்லை என்பது ஆறுதலான விடயம்தான்.

நோயாளருக்கு உண்மையான நேர்மையான சேவையை வழங்குவாள். ஆனால் எதையும் சீரியசாக எடுத்துக் கொள்ள மாட்டாள்.

இதுபோன்ற நிகழ்வுகள் எந்த சமூகக் களங்கத்தையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்படுத்தாது. ஒழுக்கம் என்பது உடலால் நிர்ணயிக்கப்படுவதில்லை என்பது அனோஜாவின் மேல்தட்டு வர்க்கத்தின் எண்ணப்பாடாக இருக்கலாம்.

உடலின் காயங்கள் பற்றிய எண்ணங்கள் சரியெனக் கொண்டாலும், மனதின் காயங்கள் பற்றிப் புரியாத தன்மையை நியாயம் எனக் கொள்ள பானுவின் மனது இடம் தரவில்லை. ஒரு பெண்ணின் துயரைத் தனதாக உணர்ந்து நோக்கும் பக்குவம் அனோஜாவிடம் இருந்திருக்க வேண்டுமென நினைத்தாள்.

மனம் மிகவும் கனதியாகவும் சஞ்சலமாகவும் உணர்ந்ததால் கான்டீனை நோக்கி நடந்தாள். அங்கும் பிரதான பேசுபொருள் அதுவாகவே இருந்தது. பாதிக்கப்பட்ட பெண்ணின் வயது அறுபதை அண்மித்தது என்பதும் அவள் அழகி என்பதும் மேலதிக அவல்.

ஓரளவு வளர்ச்சியடைந்த சிறுநகரத்தின், நடுத்தர வசதிகள் கொண்ட பிரதேச வைத்தியசாலை அது. வித்தியாசமாக எது நடந்தாலும் எப்படியோ பரகசியமாகி விடும்.

"புருசன் மண்டைய போட்ட பிறகு அவ அப்பிடி இப்பிடித்தான். ஒழுங்கு மரியாதயா இருக்கிறவங்களுக்கு இப்பிடி நடக்குமா? புருசன் செத்த பிறகும் இரவு பகல் எல்லா நேரமும் மினுக்கிக் கொண்டு தானே ரோட்டில திரிஞ்சவ..."

இது ஒரு பெண்ணின் குரலாக ஒலித்தது பானுவுக்கு மேலும் அதிர்ச்சியைத் தந்தது. பெண்ணுக்குப் பெண்தான் முதல் எதிரி.

பக்கத்தில் இருந்து விளக்குப் பிடித்தவர்கள் போல, கண் காது மூக்கு வைத்து சுவாரசியமாகக் கதையளந்து கொண்டிருந்தவர்களை, பானு நிமிர்ந்து வெறுப்பாக நோக்க, குரலைத் தணித்துக் கொண்டார்கள்.

கடைக்கண்ணால் பானுவைப் பார்த்துக் கொண்டே வேறு என்னவோ விடயத்தை மும்மரமாக ஆராய்வதாகப் பாவனை செய்யத் தொடங்கினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஞ்சித் தேநீரின் வாசனையுடன் அவள் நினைவுகளும் ஊரில் வாழ்ந்த காலத்தில் கலந்தன.

"வறுமையிலும் செம்மையாய் எப்படி வாழ்ந்திருந்தோம். அந்த மகிழ்வான காலம் எங்கே போனது? இன்று இங்கே தன்னந் தனியாக நான்....." ஏங்கியது அவள் மனது.

குடிசை வீடாகவே இருந்தாலும் அங்கிருந்த நிறைவும் நிம்மதியும் இன்றில்லையே. காணாமல் ஆக்கப்பட்ட அப்பா. அவர் இருந்தவரை கண் போல பாதுகாத்தார்.

அவர் இல்லாத குறை தெரியாமல் பாடுபட்டு வளர்த்த அம்மா. பின் வளவு வேப்பமரத்து ஊஞ்சலில் ஆடியபடி, குயில் போல எந்த நேரமும் பாட்டுப் படிக்கும் தங்கச்சி சாந்தி.

"நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ...
சொல்லடி சிவசக்தி...."

அவளது குரல் தேனாக நினைவில் இனிக்க "எத்தனை எத்தனை வீணைகள்" என மனதில் புழுங்கிய நினைவுகளுடன் டீயை பாதியில் வைத்து விட்டு எழுந்தாள்.

தலை வலித்ததால் லீவுக்கு அனுமதி பெற்றபின் தனது விடுதியை நோக்கி நடந்தாள்.

பானுவின் அரசினர் விடுதி, பெண்கள் உள்ளக நோயாளர் பகுதிக்கு அண்மித்தது. அதைக் கடந்துதான் செல்ல வேண்டும். வெளியில் இருந்து உள்ளே பார்வையைச் செலுத்தினாள்.

அந்தப் பெண் கட்டிலில் தலைகுனிந்து அமர்ந்திருந்தாள். கன்னங்களில் கண்ணீர் வடித்துலர்ந்த அடையாளங்கள் .

ஓ!... சித்ரா...

பானு அறிந்தவள் தான். பக்கத்தில் யாருமில்லை. பொலிஸ் விசாரணைகள் நிறைவடையாததால் வந்த கோலத்திலேயே அமர்ந்திருந்தாள்.

கசங்கிய உடைகளும் வாராத தலையும் உதடுகளில் காயங்களுமாகச் சோர்ந்திருந்தாள்.

ஆதரவு கூற யாருமற்ற நிலையில் இருக்கிறாள் என்பது புரிந்தது. ஆசிரியரான அவளது கணவர் கடந்த வருடம்தான் மாரடைப்பால் திடீரென இறந்து போனார். பிள்ளைகள் இல்லாததால் தனிமையின் வெறுமை சூழ்ந்த வாழ்வு . இவளது பழைய கதை எதுவும் பானு அறிந்ததில்லை.

அறுபதை நெருங்கிய போதும் உறுதியான தேகமும் சௌந்தர்யமும் இன்னமும் அவளுடன் கூட இருந்தன. அந்த அழகுதான் அவளுக்கு வினையானதோ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானுவுக்கு உதவியாக வரும் முதிர்ந்த வயதுடைய ஆச்சி செல்லம்மாவும் அவரது மதர்ப்பான பேத்தியும் ஏனோ மீண்டும் நினைவில் வந்தார்கள். வசதியற்றவர்கள் அழகாக இருப்பதும் அனுமதிக்கப் படுவதில்லையா? அதுவும் ஒரு சாபம்தான்.

பானு தன்னைப் பார்ப்பதை சித்ரா உள்ளுணர்வால் அறிந்திருக்கக் கூடும். நிமிர்ந்து நோக்கியவள் மீண்டும் கண்கலங்கி அழத் தயாரானாள். பானு அருகில் சென்று ஆதரவுடன் தோள்களைத் தொட்டாள். இந்த உணர்வுகள் எத்தனை வலிமிகுந்தவை என்பதை அவள் அறிவாள்.

"பாத்தீங்களா டொக்டர்...புருசன் போனபிறகு சொந்தக்காரங்களும் கண்டு கொள்ளுற தில்லை. இப்ப இப்பிடி. இது என்னட குத்தமில்லை. ஆனா, இனி என்னை சொந்தக் காரங்க அறிஞ்சவங்க சீவிய காலத்துக்கும் கேவலமாத்தான் பாப்பாங்க".

பானு மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக்க மீண்டும் தொடர்ந்தாள்.

"இரவு ஆஸ்பத்திரிக்கு வரக்கூட பக்கத்து வீட்டு அக்காவை கெஞ்சிக் கூத்தாடித்தான் கூட்டிக் கொண்டு வந்தன். அவ சொன்னா, இப்ப இதைப் போய் வெளியில சொல்லுறதால உனக்குத்தான் மரியாதை போகும். உனக்கென்ன பிரச்சனை. உன்ரை வயசுக்கு பிள்ளையா தங்கப் போகுது ? குமர்ப்பிள்ள மாதிரிக் கதைக்காதை. பேசாம இரு. உடம்பில ஒரு காயம் வந்த மாதிரி நினைச்சுக் கொள்ளேன். ஒருத்தருக்கும் தெரியாது. அவனும் வெளியில சொல்லவா போறான் எண்டா. வந்து ஆஸ்பத்திரியில சேர்த்ததும் சொல்லாம கொள்ளாம வீட்டை போயிட்டா."

"வீட்டில அந்தநேரம் ஒருத்தரும் இருக்க வில்லையா"

"இல்லை டொக்டர். எனக்குத்தான் பிள்ளைகள் இல்லையே. துணைக்கு இருக்கிற ஆச்சியும் மகனுக்கு சுகமில்லை எண்டு போயிட்டா. தனியத்தான் இருந்தன்"

தோள்களால் வழிந்து தொங்கிய, அளவு பெரிதான அவளது ஹவுஸ் கோட்டைப் பார்த்தாள் பானு.

"இது அடுத்த வீட்டு அக்காவிடம் அவசரத்துக்கு வாங்கிப் போட்டது. அவன் அசந்திருந்த நேரத்தில தொண்டைக் குழியில இறுக்கிப் பிடிச்சு, நசிச்சுத் தள்ளி விழுத்திப் போட்டுத்தான் வெளியிலை தப்பி ஓடினன். அவ்வளவு கோவம் எனக்கு. பிடரி அடிபட விழுந்தான். அவனுக்கு என்ன நடந்ததோ தெரியாது. பிறகு அந்தப் பழியும் எனக்குத்தான் வரும்"

அவமானமும் பயமும் முகத்தில் அப்பட்டமாகத் தெரிய மிகுந்த சங்கடத்துடன் சொன்னாள். பானுவுக்கு சொல்லாமல் சிலது புரிந்தது.

"எனக்கு மனம் கொதிக்குது டொக்டர். அந்த மிருகத்திட்டை நான் பட்ட வேதனையை என்னால சொல்ல முடியேல்லை. ஆனா, இப்பிடி நாங்க வெளியில சொல்லாம மறைச்சு மறைச்சு வைக்கிறதாலதானே இது மாதிரி சில கேடுகெட்ட மிருகங்கள் எந்தப் பயமும் இல்லாம அவிட்டு விட்ட மாடுகள் மாதிரி திரியிதுகள்".

எதிர்த்து நிற்பதற்கும் செலவளிப்பதற்கும் இந்தப் பெண்ணிடம் பலமும் பணமும் இருக்குமா என்ற பானுவின் சிந்தனையை அவள் படித்திருக்கக் கூடும்.

"புருஷன் உசிரோட இருந்த வரைக்கும் ஒரு பூமாதிரி என்னை நல்ல அன்பா வைச்சிருந்தார். எனக்கெண்டு இருக்கிறதெல்லாம் என்ரை மனிசன்ரை பென்சன் காசும் இருக்கிற வீடும் . கொஞ்சம்தான் . எண்டாலும் இந்த அநியாயத்த இப்பிடியே விட என்ரை மனம் கேக்குதில்லை. அதுதான் என்ன ஆனாலும் பரவாயில்லை என்று ஆஸ்பத்திரிக்கு வந்திட்டன்".

உடலின் வலிமை இன்மையை, மனவலிமையால் வெல்லப் போகும் அவளின் மன ஓர்மமும் துணிவும் பானுவுக்கு மிகவும் பிடித்திருந்தன.

மத்தியதர வர்க்கத்தினர் வாழ்நாள் களங்கங்களாக நினைக்கும் இவ்வாறான வன்புணர்வுகளும் பாலியல் துஷ்பிரயோகங்களும், அனோஜா போன்றவர்களைப் பொறுத்தவரை ஒரு உறவு. ஒரு உடல் காயம். சிறிய வலி. அவ்வளவுதான் . பணமும் அந்தஸ்தும் மட்டுமே மேல்தட்டு வர்க்கத்தின் பேசப்படும் கௌரவத்துக்குரிய காரணிகள் போலும் என பானு தனக்குத்தானே சமாதானமும் கூறிக் கொண்டாள்.

சித்ராவின் இதே உணர்வு செல்லம்மா ஆச்சியிடமும் பேத்தியிடமும் காணக்கிடைக்குமா என்ற கேள்வி இப்போது பானுவின் மனதில் எழுந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவன் எங்கை இருக்கிறவன்"

"கொஞ்சம் கிட்டத்தான். அவனை எனக்குத் தெரியும். என்ரை இருபது வயசிலை என்னை விரும்புறதா சொல்லிக் கொண்டு பின்னாலையே சுத்திக் கொண்டு திரிஞ்சான். திருப்பி திருப்பி பல தடவைகள் கேட்டான். நான் சம்மதிக்கவில்லை. அப்ப நான் இன்னொருத்தரை விரும்பி இருந்தன்".

பானு இயல்பாக எழுந்த ஆர்வத்தால் கேட்டு விட்டாள்.

"ஓம். அவரைத்தான் கல்யாணம் முடிச்சனான்" என்றவள் தொடர்ந்தாள்.

"நான் மறுத்தபடியா கோவத்தில இருந்தவன். ஒருநாள், தனியா வர்ர நேரம் ஒழுங்கை முடக்கில கையை பிடிச்சு இழுத்து கொஞ்ச வந்திட்டான். கடப்புளி நாய். நான் வீட்டை அப்பாட்டை சொல்லி, அவனை அப்பா அடிச்சு அவமானப்படுத்தினதையும் பொலிசிலை கம்பிளண்ட் பண்ணி, அவனுக்கு அடிவாங்கிக் குடுத்ததையும் மறக்கேல்லை போல. கொஞ்சநாள் உள்ளையும் இருந்தான்".

மருத்துவ தாதி வந்து சில வில்லைகளைக் கொடுக்க, சிரமத்துடன் விழுங்கினாள்.

"பிறகு நல்லாக் குடிச்சுக் கொண்டு திரிஞ்சான். ஹெரோயின் எல்லாம் அடிப்பானாம். ஒழுங்கான தொழிலும் இல்லை. குணம் சரியில்லை எண்டு அவனுக்கு யாரும் பொம்பிள குடுக்கவும் இல்லை. அப்பவே சொன்னான். பொறடி பொறு, உனக்கு நல்ல பாடமொண்டு படிப்பிக்கிறன் எண்டு. நாப்பது வருசத்துக்குப் பிறகு இப்ப பழிவாங்கி இருக்கிறான்" .

பானு அதிர்ந்தாள். இப்படி ஒரு வக்ர புத்தியா? பழிவாங்கும் எண்ணம் அவனது இயல்பா? போதையின் விளைவா?

அவள் தொடர்ந்தாள்.

"என்ன கவலை எண்டா இங்கை ஆஸ்பத்திரி வாட்டில இருக்கிற சில பொம்பிளைகள் கூட, ஏதோ நான் தான் இந்த வயசிலை பிழை விட்ட மாதிரியும் அவனுக்கு வலை விரிச்ச மாதிரியும் பாக்கிறாங்க. வினோதமா ஒரு மாதிரி நமட்டுச் சிரிப்பு வேற"

கண்களில் நீர் வழியக் கேவலுடன் கூறிக் கொண்டிருந்தாள்.

இந்தக் கேஸ் எவ்வாறு நிரூபிக்கப்படும், அவனுக்கு என்ன தண்டனை கிடைக்கும், எவ்வளவு காலமாகும் என்பதை விட, இவளைப் போன்ற பெண்களை சமூகம் பார்க்கும் விதமே பானுவை மிகவும் பதற்றத் துக்கு உள்ளாக்கும்.

அவளைப் பொறுத்தவரை கொலை கூட இதைவிட வலி குறைந்தது என்பாள். கொலையில் உடல் மட்டும்தான் வதைக்கப்படுகிறது. இங்கு மனதும் சேர்ந்தே வதைக்கப்படுகிறதே. அந்த மனதின் வலியைத் தமது வலியாக உணர்ந்து யாரும் பார்ப்பதில்லையா ?

விரும்பும் கணவன், விரும்பாத நேரமொன்றில் நெருங்கினாலே சங்கடம் கொள்ளும் பெண் மனது பலவந்தமாக நெருங்கினால் நொறுங்கிப் போய்விடாதா?

சிதைக்கப்பட்ட மனதுடன் எத்தனை பெண்களால் போராட முடியும். அவர்களின் மனதை மீட்டுக் கொடுக்க இங்கிருக்கும் மன ஆற்றுப் படுத்தல்கள் போதுமானவைதானா?

சமூகம் மட்டுமல்ல, குடும்பத்துக்குள்ளும் சிலர் அவ்வாறுதானே இருக்கிறார்கள்.

அதுதானே மனப்பிறழ்வு, தற்கொலை எனப் பலரைத் தூண்டுகிறது.

அதிகப்படியான டெஸ்டஸ்டரோன் இந்த வகையிலும் சில ஆண்களை அக்கிரமம் செய்யத் தூண்டுகிறதா என நினைக்கும் போது, படைப்பின் வினோதம் அவளை சங்கடத்தில் ஆழ்த்தியது.

இதற்கு படைப்பின் வினோதம் மட்டும் காரணமல்லவே. ஆண் உயர்ந்தவன் என்ற குடும்ப வளர்ப்பு முறையும், ஒழுக்கக் கல்வியின் போதாமையும், சட்டத்தின் ஓட்டைகளும் கூட காரணம்தானே என பானு நினைத்துக் கொண்டாள் .

அடுத்த இரண்டு கிழமைகளில் இந்தக் சம்பவத்தின் தீவிரம் படிப்படியாக அடங்கிப் போனது. மறக்கவும் பட்டது. அவன் பெரியாஸ்பத்திரியில் கோமாவில் கிடப்பதாகப் பேசிக் கொண்டார்கள்.

◆◆◆◆◆

மூன்று கிழமைகளாக வராத செல்லம்மா ஆச்சி அன்று வந்திருந்தார். பேத்தியும் கூடவே. அவளுக்கு வயது பன்னிரண்டு என்றாலும் பதினான்கின் பூரிப்பு அவளிடம் தெரிந்தது.

ஆச்சியின் பேத்தி பற்றிக் காற்றோடு கலந்து வந்த சேதிகள் பேரதிர்ச்சியைத் தந்திருந்தாலும், ஆச்சியே சொல்லட்டும் என பானு காத்திருந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவனோபாயத்திற்காக களப்போரம் வலையில் மீன் தெரியச் சென்ற ஆச்சியின் பேத்தியை யாரோ ஓரங்கட்டி விட்டார்களாம்.

ஆஸ்பத்திரிக்கோ பொலிசுக்கோ போனனீங்களா ஆச்சி ?

இல்லம்மா ...

ஆச்சி கலக்கத்துடன் பேத்தியைப் பார்த்தார். எதுவும் நடக்காத மாதிரி பேத்தி லேசாகச் சிரித்தாள். அவளது சிரிப்பில் அப்பாவித்தனம் இருந்ததா அன்றி வயதை மீறிய சாகசமும் முதிர்ச்சியும் இருந்ததா என்பதை பானுவால் சரியாக அனுமானிக்க முடியவில்லை.

பணம் எங்கோ பேசியிருக்கிறது எனப் புரிந்து கொள்ள நேரமாகவில்லை. ஏழைகளின் கௌரவம் பணத்தால் விலைபேசப்படுவது இந்த சமுதாயத்தில் புதியதும் அல்லவே.

"கொஞ்சம் தண்ணி தாங்கம்மா களைக்குது"

ஆச்சி தொடர்ந்தார்.

"அம்மா, நாம எளிய மனிசங்க . காசுபணம் கையில இல்ல. ஒட்டிக்கிட்டு இருக்கிறதே அந்த படுபாவி சின்ன மொதலாளியோட அப்பனோட காணிலதான். இது ஒண்ணும் அறியாத புள்ள".

முந்தானையால் மூக்கைச் சீறி கண்களையும் அழுத்தித் துடைத்துக் கொண்டு தொடர்ந்தார்.

"இவங்க அம்மா வெளிநாட்டில வேலைக்கின்னு போயி, அங்க அந்த வீட்டில வேல செய்யிற ட்ரைவரு ஒருத்தனய சேத்துக்கிட்டு வாழுறா. அவங்கப்பன் வேற பொம்பிளையை வச்சிக்கிட்டு தூரத்தில இருக்கான். இதோடை சேத்து மூணு புள்ளங்க என்னோட இருக்குதுங்க. இவ மூத்தவ. இந்தப் புள்ள, வயசான ஏன்ரை கஸ்டத்த பாத்து வயித்துப்பாட்டுக்கு ஏதாச்சும் தேடப் போச்சி"

ஆச்சிக்கு கதைக்க முடியாமல் குரல் உடைந்தது.

"காசு கொஞ்சம் தந்தாங்கம்மா. மூச்சு காட்டக் கூடாது. பொறவு றோட்ல தான் நிக்க வரும்ண்ணு பயங்காட்டினாங்கம்மா. இந்த மூணு பிஞ்சுங்கள வெச்சிக்கிட்டு நானு எங்க போவேன் .இதுக்கு மிஞ்சி கதைக்கிறதுக்கு நமக்கு வாயில்ல. பொலிசுக்கு போனாலும் அங்கை என்ன நடக்குமின்னு தெரியும்மா.."

உண்மைதான். எதையும் மறைப்பதற்கும் மறுப்பதற்கும் பணமும் அந்தஸ்தும் போதுமானது. எதையும் எதிர்ப்பதற்கும் அவைதானே தேவைப்படுகின்றன. சட்டம் பெண்களுக்கு சார்பானதுதான். ஆனால் சமூகம் அல்ல என எங்கேயோ வாசித்தது மனதிற்குள் எதிரொலித்தது.

ஆச்சி போய் விட்டார்.

குழப்பமான எண்ணங்கள் பானுவின் மனமெங்கும் வியாபித்தன. நினைவுத் தகடுகள் ஒன்றுடன் ஒன்று பலத்துடன் மோத ஆக்ரோஷமான அலைகள் இதயமெங்கும் அறைந்தன. மீண்டும் மீண்டும் பிரளயம் நடப்பதான உணர்வு.

தாடைகளை இறுக்கி, பற்களை ஒன்றோடு ஒன்று இறுகக் கடித்து உணர்வுகளை சமநிலைப் படுத்த முயன்று வழமைபோல் தோற்றாள்.

**"நசையரு மனம் கேட்டேன் – நித்தம்**
**நவமெனச் சுடர் தரும் உயிர் கேட்டேன்....**
**அசைவறு மதி கேட்டேன் – இவை**
**அருள்வதில் உனக்கெதும் தடையுள்ளதோ...."**

தங்கச்சி சாந்தியின் சோகக் குரல் அறை எங்கும் எதிரொலித்தது.

இந்த அந்தரநிலையும் பதற்றமும் எப்போதிருந்து ஆரம்பித்தன என்பது பானுவுக்கு நன்றாகவே ஞாபகம் இருக்கிறது. மறக்க முடியுமா?

1996 செப்டம்பர் 7. அவளால் மறக்க முடியாத மிகக் கொடூரமான நாள்.

மனச் சிறையில் இறுகிக் கிடந்த நினைவுகள் அந்நாட்களை நோக்கி வேகமாக நழுவத் தொடங்கின.

அன்று பின்னேரம் A/L ட்யூஷனுக்குப் போய்விட்டு, இரவு அழுது கொண்டே வந்து மூலையில் முடங்கி இருந்த தங்கை சாந்தி, மூன்றாம் நாள் குடிசையின் பின் வளவு வேப்பமரத்து ஊஞ்சல் கயிற்றில் தூக்குப் போட்டு செத்துத் தொங்கிய காட்சி நினைவில் வர, மனது எரிமலையாகிச் சிதறியது.

பானு தலையைப் பலமாக உலுப்பி சுவரில் மோதியபடி, அடிவயிற்றிலிருந்து வீரியமாக எழுந்த கேவலுடன் உரத்துக் கத்தி அழத் தொடங்கினாள்.

ooo


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவரவியல் பூங்கா

711.2 mm

–ஆவூரான் சி. சின்னராஜன்

இங்கே..!
நீலவானம் பச்சை ஆடை
கட்டிக் கொள்கிறது !
குறிஞ்சி நிலம்
தன் மேனியைப்
பசுமைப் போர்வைக்குள்
மறைத்துக் கொள்கிறது
விண் நோக்கி வளரும்
நெடிதுயர்ந்த தாவரங்கள்
நிழற்குடை விரிக்கின்றன.
ஈழமகள் தன் ஓவியத்தை
தரையில் வரைந்து விட்டு
அல்லி மலர்களைத்
தலையில் சூடிக்
கொள்கிறாள் !
புல்லாங் குழல் வாசிக்கும்
மஞ்சள் வண்ண மூங்கில்கள்
மாவலிக் கங்கை ஓரம்
நர்த்தனம் ஆடுகின்றன
இளந் தென்றலில் முத்தமிட்டு
அழகிய தொங்குபாலம்
ஜில்! ஜில்..! என
சலங்கைச் சத்தமிட்டு
ஜதி சேர்க்கிறது..!
ராகம்.. தாளம் "இசைத்து"!
இங்கே
மாவலி கங்கைக் காதலன்
தன் காதல் தலைவிக்கு
வட்டமாய்ச் சுற்றிவந்து
தாலிகட்டி
வேலி போடுகிறான்
பூங்காவிற்குள்
ஓர் தெய்வீகக் காதல்..!
அதோ - இலங்கையின்
குறோட்டன் அழகு ராணிகள்
அணி வகுத்து நிற்கின்றனர்
இனி போட்டியை நடாத்துங்கள்
பட்டப் பகல் வேளையில்
வானுயர்ந்த சோலையிலே
ஆயிர மாயிரம்
வௌவால்கள்
துயில் கொள்கின்றனவே
என்ன! இரவு நேரப்
படையெடுப்பால் வந்த
கும்பகர்ணத் தூக்கமா..?
இங்கே மலர்கள்கூட
குலுங்கிச் சிரிக்கின்றன.
ஓர் அழகிய குழந்தை போல
இந்து சமுத்திரத்தின்
முத்தாய்
நம் ஈழம் இலங்கிறது.
அதற்குள் மரகதப்
பசுமையாய்
மிளிர்கிறதே
பேராதனை தாவரவியல்
பூங்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பாட்டிற்று அழிவில்லை



ஔவையார் மன்னர்களையும் பொது மக்களையும் ஏற்றத்தாழ்வில்லாமல் கருதி பொதுமக்களின் வாழ்விலும் ஏழை மக்களுக்காகவும் பாடுபவர். பாசம் காட்டியவரை பரிவுடன் தன்பாடலால் போற்றியவர்.

ஒரு குறவன் குடிசையில் ஔவையார் ஒருநாள் வெயிலுக்கு ஒதுங்குகிறார். குறவனோ குறத்தியோ அந்தச்சமயத்தில் அங்கில்லை. அவர்களது பிள்ளைகள்தான் அங்கு இருந்தார்கள். ஔவையாரை அந்தச் சிறுவர்கள் அன்போடு வரவேற்று இருக்கச் சொன்னார்கள். குடிசைக்கு முன்னாலிருந்த பலாமரம் வெட்டுண்டு கிடந்தது. அதைப்பார்த்த ஔவையார் ஏன் இதனை வெட்டியிருக்கிறீகள்? எனக்கேட்க சிறுவர் “பாட்டி இதனை யாரோ இரவில் வெட்டி விட்டார்கள்” எனக் கவலையுடன் கூறினார்கள். அருமையாக நட்டுவளர்த்த மரத்தை இப்படியா வெட்டுவார்கள் எடபாவமே, ஏழைக்குறவனுக்கும் இப்படியான எதிரிகள் இருப்பார்களா என எண்ணி பெருமூச்சு விட்டார். சிறுவரோ “பாட்டி நீங்கள் பாட்டுப் பாடினால் இது மறுபடி தளைக்குமல்லவா என நம்பிக்கையுடன் கேட்டார்கள். ஔவையாரும் அந்தப் பலா முழு மரமாகத்தழைக்க வேண்டும் எனப்பாட்டுப் பாடினார். சிறுவரும் மகிழ்ந்து ஆளுக்கொரு உழக்குத் தினையை கைகளால் அள்ளிவந்து கொடுத்தார்கள். அதை அவர்களிடம் வாங்கிய ஔவையார் அதையொரு பழைய துணியில் கட்டியெடுத்துப் போனார்.


அதை அவர்களிடம் பெற்ற ஔவையார் நேராகச் சோழ மன்னன் அரண்மனைக்குச் சென்றார். மன்னனோ தக்க மரியாதைகளுடன் மூதாட்டியை வரவேற்றான். அவர்கையிலே இருந்த மூடையைப் பார்த்து அது என்ன எனக்கேட்டான். “குற சிறாருக்காக வெட்டுண்ட பலா தழைக்கப்பாடியதற்காக குற சிறார் கொடுத்த நாலு உழக்கு தினை” என்றார்.

மன்னர்களால் வரவேற்று மரியாதை செய்யப்படும் ஒரு பெரிய புலவரான ஔவையார் குற சிறாருக்காகப்பாடி அவர்கள் கொடுத்த தினையைக்கட்டி கொண்டு வருகிறாரே என எண்ணும்போது அவன் உதட்டில் ஒரு சிரிப்பு. அவன் என்ன எண்ணுகிறான் என்பதைப்புரியாதவரா ஔவையார்.!

சோழா கேள், நல்ல மனம் படைத்த ஏழைகளிடத்தில் உப்பு வாங்கிக் கொண்டும் நான் பாடுவேன். புளிக்கு கவிதை பாடுவேன். அவர்கள் தரும் பரிசு, அவற்றைவிடச் சிறந்த பரிசை யாராலும் தர முடியாது” என்றார்.

ஔவையார் அவனுக்கு அளித்த பதில் அவர் சாதாரண ஏழைகளிடத்தில் கொண்ட அன்பையே வெளிப்படுத்திற்று. நல்ல மனம் படைத்த ஏழைகளிடம் உப்பு வாங்கிக் கொண்டும் பாடுவேன், புளிக்கும்கூட ஒரு கவிதை புனைவேன். அவர்கள் கொடுக்கும் பரிசில்களைவிட வேறொரு சிறந்த சன்மானத்தை என் கவிதைக்கு யாராலும் அளிக்க முடியாது என்கிறார், அவர்கவிதை அன்பு உள்ளத்திலிருந்து வந்தது. இப்பாடல் மூலம் அவர்மனம் எத்துணை மென்மையானது என்பதை உணர முடிகிறது.

**கூழைப் பலாத்தழைய**
**பாடக் குறச் சிறார்**
**மூழக்(கு) உழக்குத்**
**தினைதந்தார் – சோழா**
**கேள்**
**உப்புக்கும் பாடிப்**
**புளிக்கும் ஒரு கவிதை**
**ஒப்பிக்கும் என்றன்**
**உள்ளம்**



**நாட்டிய கலாநிதி**
**கார்த்திகா கணேசர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறிதொரு சமயம் சோழமன்னன் அரண் மனைக்கு ஒளவையார் சென்றிருக்கிறார். அவன் "வாருங்கோ" எனச் சொன்ன போதும், அவனது முழுக் கவனமும் எங்கோ ஒரு இடத்தில் லயித்திருந்தது. அவனோ புதிதாகக் கட்டியிருந்த திரைச் சீலையைப் பார்த்தபடி இருந்தான். அது விலையுயர்ந்த அழகிய திரைச்சீலை. அற்புதமான வேலைப்பாடுகளுடன் அமைந்தது. சோழனின் கவனத்தையெல்லாம் கவர்ந்தது. அவனால் ஒளவையாரைக்கூட முறையாக வரவேற்கத் தோன்றவில்லை.

செல்வந்தர் புத்திசாலிகளாக இருந்து புத்திசாலிகளை மதித்தாலும் செல்வத்தில் அவர்களது ஈடுபாடோ அலாதியானது. அவர்கள் தம் அறிவையும் மழுங்கடிப்பது. இதனை நன்கு அறிந்தவர் ஒளவையார். மன்னனுக்குப் புத்தி பகட்டுவதுடன் அவர் நின்று விடவில்லை. அவரது கவிதையின் மகிமை அதனால் அவருக்கு இருக்கும் கவிதைச் செருக்கை நாம் இங்கு கண்டு வியக்கலாம்.

"சோழ மன்னனே கேள் இந்தத் திரைச்சீலை பத்து லட்சம் பொன் பெறுமதியானதாகவும் இருக்கலாம். ஆனால் இதுவோ நான்கு மாதங்களில் கிழிந்துவிடக் கூடியது. உன்னிடம் இருக்கும் செல்வமும் இப்படித்தான். அதுவும் என்றும் அழியாது இருப்பது அல்ல. ஆனால் என் செல்வமோ, அதுதான் என்பாட்டு இருக்கிறதே என்றும் எந்தக்காலத்திலும் கிழியாது. அவ்வாறான அழியாச் செல்வம் படைக்கும் என்னைவிட உனக்கு அந்தத் திரைச்சீலை பெரிதாகப்போய்விட்டதா?" என்று கம்பீரமாகக் கேட்கிறார் ஒளவையார். அன்புள்ளம் கொண்ட சிறுவருக்குப் பாடினாலும் தன் கவிதா கர்வமும் தலைகாட்ட தன்சிறப்பையும் மகிமையையும் கூற சரியான சந்தர்ப்பம் என எண்ணினாரோ

**நூற்றுப் பத்தாயிரம்**
**பொன் பெறினும் நூல் சேலை**
**நாற்றிங்கள் நாளுக்குள்**
**நைந்துவிடும் –மாற்றவரைப்**
**போன்(று) அப் புறம்கண்ட**
**போர்வேல் அளங்கா**
**என்றும் கிழியா(து) என்**
**பாட்டு.**

ஒளவையார் பல ஊர்களுக்குச் செல்பவர். வழியிலே பல சாதாரண கிராமவாசிகளைக் காண்பார். இந்த சூதுவாது அறியாக் குடியான வர்கள் நகர்ப்புற நாகரிகமோ போலி நாகுக்கோ அறியாதவர்கள். ஒளவையாரையும் தங்களில் ஒருவராக எண்ணி அன்பு செலுத்துபவர்கள். ஒளவையாரோ அவர்கள் அன்பை அனுபவித்து எமக்குப் பாடலாகத்தந்துள்ளார்.

பாரி என்ற ஆடு மேய்ப்பவன் ஒளவையார் பாட்டில் மிகுந்த விருப்புடையவன். காட்டு வழியிலே ஒளவையார் போவதைப் பார்த்து விட்டான். உடனே ஓடிவந்து பாட்டு ஒன்று சொல்லு கேட்க" என்றான். ஒளவையார் "அவசரமாகப் போகின்றேன். இப்போ நெரமில்லை" என்று கூறி போய்க் கொண்டே இருந்தார். ஆனால் பாரியோ ஒளவையாரின் புடவை முந்தானையை பிடித்து இழுத்து அவரை நிறுத்தினான். அவனது அப்பாவித்தனத்தைக் கண்ட ஒளவை மனம் மகிழ்ந்தார்.

ஒரு சமயம் காரி என்பவன் வீட்டிற்கு ஒளவையார் போகின்றார். அவன் சாதரண குடியானவன். ஒளவையார் வரும்போது அவன் தனது வீட்டின் பின் கொல்லையில் களை எடுத்துக் கொண்டிருந்தான். ஒளயாரைக் கண்டதும் அவர்கையிலும் ஒரு களை எடுக்கும் குச்சியைக் கொடுத்து தன்னுடன் களையெடுக்கச் சொல்கிறான். ஒளவையார் களை எடுக்கும் போது பாட்டுப் பாடம்படி கேட்கிறான். ஒளவையாரை களை எடுக்கும்படி சொல்லலாமா என்ற சம்பிரதாயங்களை அறியாத குடியானவன் அவன்.

சேரமான் பெருமாள் நாயனார் ஒளவையில் மிக விருப்புடையவர். சேரமான் பெருமாள் கைலாயத்துக்குச் சென்று தரிசிப்பவர். அவரும் ஒளவையாரில் பெரு விருப்புடையவர். தான் கைலாயம் போகும் போதெல்லாம் ஒளவையிடம் வந்து உரிமையுடன் சொந்தப் பாட்டியை அழைப்பது போல "வாபாட்டி போகலாம்" என அழைப்பார். இவர்கள் எல்லோரும் தம்மிடம் கொண்ட அன்பு பாசத்தை உணர்ந்து உருகியவர் ஒளவை.

பாரி புடவையைப் பிடித்து இழுத்து உரிமையுடன் தடுத்ததற்கும். சேரமான் பெருமாள் நாயனார் " வா பாட்டி" என உரிமையுடன் ஏக வசனத்தில் அழைத்தும் போன்ற அன்புக்கு இணையாக வேறு ஒருவர் அன்பு கொண்டு செய்த செயலையும் குறிக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருசமயம் ஔவைப்பாட்டி குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த பொழுது ஒரு ஏழைப்பெண் தன்னிடமிருந்த ஒரே நீல நிறச் சேலையை ஔவையாரிடம் கொடுத்து "பாட்டி போர்த்திக்கொள் இதையே நீ வைத்துக் கொள்" என்று கொடுத்து விட்டார். ஒரு மாற்றுத் துணிவாங்க சக்தியில்லாத ஏழைச் சிறுமிக்கு எத்தனை சிறந்த குணம். இவள் செயல் எந்தப் பெரும் கொடைக்கும் இணையாகுமா!

வியந்தார் ஔவையார்

**பாரி பறித்த**
**பறியும் பழையனூர்க்**
**காரி கொடுத்த**
**களை கொட்டும் – சேரமான்**
**"வாராய்" என அழைத்த**
**வாய்மையும் – இம்மூன்றும்**
**நீலச் சிற்றாடைக்கு**
**நேர்**

ஔவையோ நாடு பூராகவும் சுற்றி அலைபவர். மக்களை நன்கு அறிந்தவர். தேவைப்படும்போது மன்னனுக்கும் அறிவுரை கூறுபவர்.

ஔவை வாழ்ந்த காலமோ குறிப்பிட்ட வருணத்தாருக்கு, குறிப்பிட்ட தொழில் என வகுக்கப்பட்டு, குறிப்பிட்ட வருணத்தார் தமக்குக் குறிப்பிடப்பட்ட தொழிலைச் செய்தார்கள். இது ஒரு சமூக அமைப்பாகவும் இருந்தது. மந்திரிப் பதவிக்கு எவர் ஏற்றவர் என மன்னனுக்கு ஆலோசனை வழங்கும் மன்னனின் பாடல்

**நூல் எனிலோ கோல் சாயும்**
**நும்தமரேல் வெஞ்சமராம்**
**கோல் எனிலோ ஆங்கே**
**குடிசாயும் –நாலாவான்**
**மந்திரியும் ஆவான்,**
**வழிக்குத் துணையாவான்**
**அந்த அரசே**
**அரசு.**

மன்னா பூணூல் தரித்த பிராமணனை நீ மந்திரி ஆக்கினால், உன் செங்கோல் கோணிவிடும். நீதி தவறிவிடும். உன் சத்திரிய சாதியை சேர்ந்தவனை மந்திரி ஆக்கினால் தன் குலத்துக்கேற்ப எப்போதும் போர் செய்யவே துடிப்பான். நாட்டில் அமைதி நிலவாது. தராசு பிடிக்கும் வைசிகனாகிய வியாபாரி மந்திரி யானால் குடிமக்கள் அழிவார்கள். அவனோ சொந்த லாபத்திலேயே குறியாயிருப்பான். மக்கள் நன்மை கருத மாட்டான். நான்காமவன் உடலுழைப்பால் உலகத்திற்கு உதவும் சூத்திரனை மந்திரியாக வைத்துக் கொள்ளும் இராஜாங்கமே நன்றாக நடைபெறும். அவன் நல்ல மந்திரியாகவும் இருப்பான். ஆபத்துக் காலத்தில உயிரையும் உனக்காகக் கொடுத்தும் காப்பாற்றுவான். எப்பொழுதும் மற்றவர் நன்மைக்காக உழைப்பைக் கொடுத்து பழகியவன் அல்லவா?

தமிழ் நாட்டில் பற்பல காலங்களில் ஔவையார் என்ற பெயரில் வெவ்வேறு புலவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இங்கு காணும் பாடல்களை இயற்றியவர் கடைசி ஔவையாராக இருத்தல் வேண்டும் என அறிஞர் கருதுகின்றனர்.

இவர்பாடல் மூலம் இவர் தனியொரு பெண்ணாகப் பல இடங்களில் சுற்றியவர் என அறிய முடிகிறது. இவர் மூதாட்டியல்ல. இவர் உடல்வலு அற்றவரானால் இவ்வாறு அலைய முடியுமா! அவ்வாறானால் பெண் தனிய சுதந்திரமாகச் சுற்றித்திரியுமளவுக்கு பாதுகாப்பு சமூகத்தில் இருந்ததா? அதற்குமேல் அரசனுக்கும் ஆலோசகராகிறார். நால்வருண கருத்திற்கு எதிராக தாழ்த்தப்பட்டவனாகக் கருதும் ஒருவனை மந்திரி ஆக்கு என்கிறார். இவர் வாழ்ந்த சமூகத்தில் நால்வர்ண கோட்பாட்டை எதிர்த்த கருத்துடையவராக இருந்தார்.

இன்னும் பெண்ணுரிமை கோரவேண்டி யுள்ளது. பெண்கள் சமூகத்தில் பாதிக்கப் படுகிறார்கள் அதற்கு விடிவு வேண்டும் என்பதை 'ஐக்கிய நாடுகள் சபை" அங்கீகரித்தே சர்வதேச பெண்கள் தினம் அனுட்டிக்கப்படுகிறது. அன்று ஔவை வாழ்ந்த சமூக அமைப்பு எவ்வாறனது என்பதே என்மனதில் தோன்றிய கேள்விகள்!

○○○

யாழ் மாநகர சபை
22 APR 2024
தாபனப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல் தொடர்கிறது...

முதலும் முடியுமற்ற (infinite)
புரிந்து கொள்ள முடியாத
சூக்குமமான
பேர் சக்திகளை
உள்ளுறையாகக் கொண்டது
பேரியற்கை.

பரிணாமம்.
சடத்திலிருந்து
உயிர், என
இப்போது வந்திருக்கும்
எடைவு மட்டம் - கட்டம்
விலங்குமனம்.
Highly evolved animal
நரசிம்மம்.

இயற்கை
தான் நிகழ்த்திய நகர்வுகளை
இப்போது
மனிதனிடமே
ஒப்படைத்து விட்டது.
மேல் நகரும் பொருட்டாக

பரீட்சார்த்தமாக...

பகுத்தறிவும்
விஞ்ஞானமும்
தொடர்புற்ற
பல கண்டு பிடிப்புகள்.

போக்குவரத்து வசதிகள்
விண்வெளிப் பயணங்கள்
பௌதீக, உயிரியல், மருத்துவ
கண்டுபிடிப்புகள்,
தொழில் நுட்ப வசதிகள்
கணனிகள்
செயற்கை நுண்ணறிவு
Artificial Intelligence
என
எத்தனையோ....

அனைத்தையும்
அழிவுக்காக
திருப்பிவிடுபவன்
மனிதன் மட்டுமே.
வேறு ஜீவராசிகளுக்கு
தெரியாது
இந்தக் கலை.

குழந்தைகள்
பெண்கள்
அப்பாவிப் பொது மக்கள்
போன்றோரை
கொப்பும் குலையுமாக
குண்டு வீசிக்
கொலை செய்யும்
புத்திசாலிகள்.
Cultured Barberians;
நாகரிகமுற்ற காட்டு மிராண்டிகள்
எத்தனையோ தத்துவங்கள்
எவ்வளவோ முயன்றும்
எதுவும் நடக்கவில்லை.

ஒரு தேக்கம்.
ஒரு ஸ்தம்பிதம்.

இனி
ஒன்றில்
தங்களுக்குள்ளேயே
அடித்துக் கொண்டு
அணுகுண்டு வீசி
அழிந்து போவார்கள்.
பஸ்மாசுரன்
போல.

அல்லது
வெற்றிடத்தை நிரப்பி
தேகத்தை
உடைத்துக் கொண்டு
மேல் நோக்கி
நகரவேண்டும்.

அதற்கு
அவர்களுக்குத்
தேவை

புத்திக்கும்
பகுத்தறிவுக்கும்
விஞ்ஞானத்துக்கும்
மேலான
மனம் கடந்த
பேர் அனுபவம்
பேர் அறிவு
ஞானம்
Wisdom

தேடல் தொடர்கிறது....

– ஜீவகாருண்யன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# பாதை மாறிய பயணங்கள்

வெல்லாவெளி விவேகானந்தம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களுக்கும் தெரிவான New Batch அவர்கள். "ராக்கிங்" கெடுபிடிகளுக்குள்ளும் வெள்ளை உடையில் அவரவர் பீடங்களுக்கு விடுதிகளில் இருந்து விரிவுரைகளுக்கு விரைந்து கொண்டிருந்தனர். மழையும் குளிரும் மகிழ்ந்து குலவும் அழகிய சூழல். மந்திகள் கொஞ்சிக் குலவி மரங்களில் தாவும் அழகும், பூத்துக் குலுங்கும் மரங்களின் எழிலும், அற்புதமாக இருக்கும் காலை வேளையது. அவற்றை எல்லாம் ரசித்தபடி கில்டா விடுதியில் இருந்து கலைப்பீட மாணவர்களான முகுந்தன் கூடவே குணாளன், தயாபரன், இனியனும் விரிவுரைக்குப் போய்க் கொண்டு இருந்தனர்.

"மச்சான் தயா இந்த மரத்தின் பூக்கள் எவ்வளவு அழகாக இருக்கு பார்டா"

"குணா எல்லா மரத்தினதும் பூக்களுமே அழகுதான்". இருவரும் இயற்கையை ரசித்து வர.. முகுந்தனும் இனியனும் தங்களுக்கு அருகாக வந்து கொண்டிருந்த சிங்கள மாணவிகளிடம் "நம மொகத" "கம கொயத" ராகிங் காலத்தில் தாங்கள் அறிந்த சிங்களத்தில் கதைத்து சிரித்துக் கொண்டு வந்தனர். Ragging Period முடிந்தவுடன் சீனியர், யூனியர் சங்கமிக்கும் get together பல மட்டங்களில் நடைபெறுவது வழமை. அவ்வாறான மாவட்டரீதியான அறிமுக get together ஒன்று நடைபெற்றது. அன்று.. ஆளாள் அறிமுகம் செய்து கொண்டனர்.

"நீங்க New Batch தானே உங்கள நான் இப்பதான் பார்க்கிறன்.. நீங்க..."

"நானும் New Batch தான்.. நான் கோமதி".

"அழகான பெயர்தான்.. நான் முகுந்தன் Arts faculty".

"நான் Science faculty".

"ஓ.. அதுதான் உங்கள காணமுடியல்ல". "ராக்கிங் பயத்தில் ஒளிந்து திரிந்தோம்..எப்படி காண முடியும்". "நீங்க சொல்வதும் சரிதான்". அன்று கோமதியின் அழகிலும் அவளது பேச்சிலும் மயங்கித்தான் போனான். நிகழ்வுகள் அரங்கேறிக்கொண்டு இருந்தன.

கோமதியின் குழி விழும் கன்னங்கள், கதைகள் பல பேசும் அவளது கரிய விழிகள் முகுந்தனை என்னவோ செய்தன. அவள் சங்குக் கழுத்தில் மின்னும் மெல்லிய தங்க செயின் இன்னும் அழகு தந்தது. அன்று கோமதியோடு கதைத்த மகிழ்ச்சியில் .."கோமதி நீங்க..சங்கமித்தா Hall தானே".

"இல்லை.. நான் ராமநாதன் Hall..ஏன்.. கோமதி நீங்க கதைப்பது கூட அழகுதான். கேட்க இனிமையாக இருக்கு".

புன்னகைத்த கோமதி 'சும்மா..பேச்சுக்காக சொல்ல வேணாம்".

"உண்மையத்தான் நான் சொன்னன்.. அதுசரி Hallல் இருந்து நீங்க தனியாகவா வந்தீர்கள்".

"இல்லையே.. வாசுகியும் என்னோடு வந்தவள். அதோ இருக்கிறாள்".

"ஓ..அப்படியா நாம் Hall போக இரவு ஒன்பது மணியாகும் நானே கொண்டுவந்து விடுறன் கோமதி".

"சரி போகும்போது பார்ப்பம்".

முகுந்தனும் அழகானவன். சுருண்ட அவனது முடி, அவன் புன்னகையும் வசீகரமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சும் அவனுக்கு அழகினைக் கொடுத்தன. கோமதிக்கு முகுந்தனின் சரளமான பேச்சும், புன்னகையும் பிடித்துப் போனது. ஒன்றுகூடல் முடிவடைந்த பின் கோமதி, வாசுகி இருவரையும் பாதுகாப்பாக அழைத்துச்சென்றான் முகுந்தன். இராமநாதன் விடுதியை அண்மிக்க..

'Thanks முகுந்தன் நாங்க இனி போவம்.. good night'

'Ok..good night..'' விடை பெற்றுக் கொண்டான்.

“என்னடா மச்சான் முகுந்தன் எப்படி get together சாப்பிட்டயா''. றூமேற் குணாளன் கேட்டான்.

“ஓம்..மச்சான். எங்கள் பிரதேச எல்லா faculty studentsம் வந்திருந்தார்கள். மச்சான் இன்னும் ஒரு மகிழ்வான சம்பவமும் நடந்தது''.

“என்னடா அதை முதலில் சொல்லன்''.

“மச்சான் 1st year கோமதி வந்திருந்தாள்''.

“ஆர்டா அது”

“அவள் Science faculty உனக்கு தெரியாது நல்லவடிவான பிள்ளை”

“ஓஹோ அப்படியா''.

“மச்சான் நன்றாக என்னுடன் கதைத்தாள். எனக்கும் நல்லா பிடிச்சுப் போச்சு''.

“டேய் உனக்கு பிடிச்சா போதுமா அவளுக்கு உன்னை பிடிக்க வேணுமே.. என்னடா Love தானா''.

“love என்று இல்லடா மச்சான். எனக்கு பிடிச்சிருக்கு.. கோமதியோட கதைச்ச பிறகு மனதுக்குள் ஒரு குதூகலம்..”

“சரிடா இப்ப நீ தூங்குடா எனக்கு தூக்கம் வருது''.

அடுத்த நாள் Lectureக்கு போகும் பாதையில் கோமதியைக் கண்டான்.

'Good morning கோமதி.. என் Roommate குணாளன்'' அவனை அறிமுகப்படுத்தி வைத்தான்.

நாட்களும் நகர்ந்தன. இராமநாதன் விடுதிக்கு அடிக்கடி மாலை வேளையில் போய் கோமதியை சந்தித்து கதைத்தும் வருவான் முகுந்தன். முதலாம் வருட Vacation நெருங்கியது. அன்று, கம்பஸ் “arts theatre”ல் தமிழ் படம் ஒன்று. “arts theatre” பேராதனை பல்கலைக் கழகத்தின் அற்புத கலைவடிவம். எழிலுடன் அதன் முகப்பு..உள்ளே பல நூறு மாணவர்களை உள்வாங்கும்.. அற்புதமான அமைப்பது அது. “நாளை மாலை arts theatreல் பாசமலர் படம் இருக்கு. நீங்களும் வாங்க பாக்கலாம்''. கோமதியை விடுதியில் சந்தித்து கூடவே இருந்த புவனாவையும் முகுந்தன் அழைத்தான்.

“எத்தனை மணிக்கு.. என்னடி புவனா போவமா''.

“எனக்கு ஓகே தான்''.

“அப்போ நீங்க ஆறரை மணிக்கு வாங்க. நாங்களும் வாறம். சேர்ந்து போகலாம்''. சொல்லிவிட்டு விடைபெற்றான் முகுந்தன்.

அன்று கோமதி உள்ளிட்ட நண்பிகளுடன் அந்த மாலை வேளையில் படம் பார்க்கப் போய், படம் முடிந்த பின் மங்கியதோர் நிலவினில் சிரித்து மகிழ்ந்து.. “மலர்ந்தும் மலராத..”பாடலை முணு முணுத்தவாறு வந்து சேர்ந்தனர். முகுந்தன் கோமதி இருவருக்கும்.. நட்பும் ஆழமான காதலும் இருந்தது. அவர்கள் காதலை ஒருவருக்கு ஒருவர் சொல்லவேயில்லை.

“மச்சான் கோமதி என்னடா சொல்றா.. அவள் Science faculty என்பதால் நீ காதல சொல்ல யோசிப்பது எனக்கு தெரியுது''.

“அப்படி இல்ல..மச்சான் எனக்கும் விருப்பம் கோமதிக்கும் விருப்பம் இருக்கு இருந்தாலும் நட்புடன் பழகுவது நல்லதுதானே''.

‘அப்போ என்னடா உன் எண்ணம்..”

'அது ஒன்றுமில்லை.. நான் என் காதலை அவளிடம் கட்டாயம் சொல்லுவன்.. இன்னும் காலம் இருக்கு பாப்போம் விடுடா''.

“அதுதான் எப்படா''.

“காலம் வரும் எனக்கு கோமதி மேல் நம்பிக்கை இருக்கு''.

அதேவேளை இராமநாதன் விடுதியில்..

“முகுந்தனோடு நீ நல்ல நட்பாக இருக்கா. முகுந்தனுடன் நீ பழகுவதை பார்க்க முகுந்தனை love பண்ணுவது போல தெரியுது”

விரிவுரை முடிந்து வரும் போது.. புவனாவின் கேள்வி கோமதிக்கு வேதனையை தந்தது. “கோமதி நீ முகுந்தனை love பண்ணுவதை மறைக்கிறாய். என்னை கூட நீ நம்பல்ல''.

“ஏன்டி புவனா..என் மன நிலை உனக்குத் தெரியாதா முகுந்தன் நட்பாக பழகிறான். நான் மெய்யாகவே முகுந்தனை விரும்புகிறன். அது முகுந்தனுக்கும் தெரியும். இருந்தும் அவனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் விருப்பம் கேக்கல்ல. நானாக.. எப்படிக் கேக்க முடியும். நீயே சொல்லு. முகுந்தனை நான் ஒன்று கூடலில் கண்ட நாள் முதல் விரும்புறன். முகுந்தன் விருப்பம் கேட்டா நானும் ஓம்..சொல்லுவன். இன்னும் உனக்கு சந்தேகம் இருக்கா புவனா.."

"சரிடி..வருத்தப்படாத கோமதி. Advance வாழ்த்துக்கள். கண்டிப்பாக கல்யாணத்துக்கு எனக்கும் சொல்லுடி. இப்போதுதான் என் மனசு நிறைஞ்சிருக்கு."

அன்றைய விரிவுரை முடிய கோமதி, புவனா, முகுந்தன், குணாளன் நால்வரும் "வூஸ்" கன்ரீனை அடைந்தனர். அன்று அங்கும் கூட்டம் அதிகமாக இருந்தது.

"சரி..நீங்க பேசிக்கொண்டிருங்க நான் டீ எடுத்து வாறன்".

சரிடா முகுந்தா நீ அவசரப்படாம எடுத்து வா".

"கோமதி..உங்களிடம் கொஞ்சம் நான் கதைக்க வேணும். புவனாவும் கூடவே இருப்பது நல்லதுதான். நாலு வருடமாக முகுந்தன் உங்கள விரும்புவது எனக்கும் தெரியும். ஆனால் தன் காதல சொல்ல தடுமாறுகிறான் அவன் தன் காதல சொல்லப்போய் நட்பும் போய் விடுமோ என பயப்படுகிறான்".

"இதுதான் குணாளன் பிரச்சனையே. முகுந்தன் போலவே கோமதியும் மனதில் இருக்கும் காதலை சொல்லாமல் இருக்கிறாள். இருவரும் படிப்பு முடிய காதலையும் தொலைத்து விடுவார்கள்". இருவர் சொன்னதையும் அமைதியோடு புன்னகை தவழ கேட்டுக் கொண்டு இருந்தாள் கோமதி.

முகுந்தன் டீ.. சிற்றுண்டி..சகிதம் வந்து சேர்ந்தான். "முகுந்தா.. இனி நீ பெரிய பார்ட்டிதான் வைக்க வேணும். உங்க..ஆளின்ர வெக்கத்த பார்".

முகுந்தன் காதலுடன் கோமதிய பார்த்தான். புதிதாகப் பார்ப்பது போல.. "போதுமடா முகுந்தா நாங்களும் இருக்கிறம்". வெட்கத்தில் தலை குனிந்தாள் கோமதி.

"போதும் போதும்.."

"சீ..போடி" புவனாவை செல்லமாய் கோபித்தாள்.

கண்ணால் காதல் மொழி பேசியவாறு கன்ரீனில் இருந்து புறப்படமுன் முகுந்தன் கோமதியிடம் தன் காதலைச் சொன்னான். அனைவரும் மகிழ்வோடு அன்று விடுதிகளுக்கு போயினர். இறுதிப் பரீட்சைக்கு இரு வாரம் இருக்கும் நிலையில் study leave என்பதால் வீடு போய் வர ஆயத்தமானான் முகுந்தன்.

'மச்சான் குணா..நான் வீட்டுக்கு போய் வந்தால்தான் நல்லது போல் இருக்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா அவசரம் Exam நெருங்குது".

'அவசரமில்லைத் தான் ஆனா.. போய் வந்தால் நல்லா இருக்கும்".

"சரிடா உன் விருப்பம் அது".

"நான் கோமதியையும் சந்திக்க வேணும் நான் வாறன்".

விடுதியில் கோமதியை சந்தித்து "நம் காதல.. வீட்டில் தெரியப்படுத்தி நல்ல முடிவுடன் வருவன் கோமதி".

"சரி.. எனக்கும் மகிழ்ச்சிதான்.. கவனமாக போய்வாங்க". விடை பெற்றுக்கொண்டான்.

திடீரென வீடு வந்த முகுந்தனை கண்டதும் குதூகலம் அடைந்தனர். "முகுந்தா.. என்ன அவசரம் பரீட்சை இருக்கு படிக்க வேணுமென்றாய்.."

"அதுதான் அம்மா உங்கள பார்த்து விட்டு போனா.. நல்லா Exam எழுதலாம்"

"சரிடா முதலில் நீ குளி..சாப்பாடு எடுத்து வைக்கிறன்".

வெளியில் போய் வந்த தகப்பனார் மாணிக்கம் "முகுந்தா நீ எப்ப வந்த..என்னடா காசுப் பிரச்சனையா.."

"அதுவுந்தான் அப்பா இரண்டு நாளில் நான் போக வேணும்.." "சரி..சரி வந்து சாப்பிடு" சாப்பிட்டு வெளியில் போய்விட்டான்.

முகுந்தன் வீடு வந்திருப்பதை அறிந்த அவன் தாய் மாமன் கனகசபை வீட்டுக்கு வந்திருந்தார். "அக்கா..தம்பி முகுந்தன் வந்ததை கேள்விப்பட்டன்"

"தம்பி வாடா இரு.. முகுந்தன் வந்தவன்.. வெளியில் போய் இருக்கான்".

'அதுதான் அக்கா நான் அவசரமாக வந்தன்..எங்க மச்சானை காணல்ல". 'இதோ இங்கதான் இருக்கன் என்ன.. கனகசபை". 'மச்சான் நான் நேரே விசயத்துக்கு வாரன். முகுந்தனுக்கும் படிப்பு முடியுது. அதுதான் ஒரு கால்கட்ட போட்டா என்ன".

"என்னடா தம்பி நீ சொல்ல வாறா". "அக்கா முகுந்தன் வந்ததோட குமுதினிக்கு Registration செய்து வைப்பம்".

"நீ வேற..அவனுக்கு பரீட்சை முடியட்டும் கொஞ்சம் பொறு கனகசபை".

"மச்சான் நாம கலியாணமா செய்யப் போறம்..? பிறகு வருத்தப்படக் கூடாது. நாளைக்கு நல்ல நாள் இருக்கு".

"இதுக்கு முகுந்தன் சம்மதிக்க மாட்டான்".

"அக்கா நீங்கதான் எடுத்து சொல்லுங்க. நல்ல காரியத்தை இனிதள்ளிப் போடக் கூடாது.. எனக்கும் பல வேலைகள் இருக்கு. நான் வாறன்".

நண்பர்களோடு சுற்றி விட்டு வீட்டுக்கு வந்திருந்தான் முகுந்தன்.

"மகன்..மாமா வந்து போகிறார்'."

என்னவாம்..அம்மா".

"எல்லாம் நல்ல விசயந்தான்".

"என்ன அப்பா நீங்க சொல்லுங்க".

'மாமா கனகசபை மகள் குமுதினிக்கு Registration செய்து வைக்கப்பார்க்கிறார்".

அதிர்ச்சியடைந்த.. முகுந்தன் "என்னப்பா விசர்க் கதை கதைக்கிறிங்க".

"தம்பி நல்லதுதானே எங்களுக்கும் இதில் பூரண சம்மதம்".

"அம்மா எனக்கு இதில் எள்ளளவும் விருப்பமில்ல. நான் கம்பஸில ஒரு பிள்ளைய விரும்புறன். எவரும் என்னை கட்டாயப் படுத்த வேணாம்". முகுந்தனின் சொன்னதை கேட்டு இருவரும் தடுமாறிப்போனார்கள்.. இப்போது முகுந்தன் தாயும் தகப்பனாரும் உண்மையாக பயந்தனர். "எப்படியும் நாளைக்கு பதிவு வைப்பதே நல்லது" என எண்ணினர்.

"மகன் நீ குளித்து விட்டு சாப்பிடு" என்றவர்.. கனகசபை வீடு போய் கலந்து பேசி நாளைய ஏற்பாடுகளை செய்து விட்டு வீடு வந்து சேர்ந்தார்.

"அம்மா நான் மாமா வீட்ட போய் வாறன்". "சரிடா"

மாமாவின் கல்யாணப் பேச்சுக்கு ஒரு முடிவு கட்டும் நினைப்போடுதான் அடுத்த நாள் காலை போயிருந்தான்.

அன்று Registration ஏற்பாடு இருப்பது அவனுக்கு எதுவும் தெரியாது. வழமையை விட சற்று விசேடமான ஏற்பாடுகள் மாமா வீட்டில் செய்யப்பட்டு இருந்தன. மிக நெருங்கிய உறவுகள் மட்டும் கூடியிருந்தனர். முகுந்தனின் தந்தை மாணிக்கத்தார் அவனுக்கு முன்னமே அங்கு வந்து விட்டார். சற்றுநேரத்தில் தாயும் தங்கையும் வந்து விட்டனர். அங்கு முகுந்தன் குமுதினி பதிவுத்திருமண ஏற்பாடுகள் துரிதமாக நடக்க.. முகுந்தன் ஆடிப்போனான். அவன் முணுமுணுப்பு அடக்கிப் போனது. அவன்மனதில் கோமதி ஒரு கணம் வந்து போனாள். உறவுகளின் முன்னால் எதுவுமே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனால் செய்ய முடியவில்லை. அவர்கள் செய்யும் ஏற்பாடுகள் எதையுமே அவனால் மறுக்கவும் முடியல்ல.

முகுந்தனின் மாமா புதிதாக வாங்கி வைத்திருந்த.. ரவுசர், சேட் அணிந்து மாப்பிள்ளை யானான். உரிய நேரத்தில் Registration நடந்தது. விருந்து முடிய வீடு வந்தவன் அன்றே உடனடியாக புறப்பட்டான் பேராதனைக்கு.

பலவிதமான மன உழைச்சல்களோடு இரவு ஒன்பது மணிக்கு விடுதிக்கு வந்தவன். குணாளனைக் கட்டிப் பிடித்து ஒப்பாரி வைத்து அழத் தொடங்கிவிட்டான். "மச்சான் என்னை.. மன்னித்துக் கொள்ளடா. நான் கோமதிக்கு துரோகம் செய்து போட்டனடா. கோமதி என்னை மன்னிக்கவே மாட்டாளே மச்சான்".

"டேய்..டேய்..உன் அழுகையை முதலில நிறுத்தடா. என்னடா நடந்து அத முதலில் சொல்லு அப்புறம் அழு. என்ன துரோகம் எனக்கு புரியல்ல".

"மச்சான் குணா" என்றவன் ஊரில் நடந்த அத்தனையும் சொல்லி முடித்தான்.

"நீ விரும்பி செய்திருக்கிறாய். இது துரோகமில்ல பச்சைத் துரோகம். இதுக்கு மன்னிப்பே கிடையாது.. நான் கூட உன்ன மன்னிக்கமாட்டன்".

"இல்லை மச்சான் நீயாவது நம்புடா..".

"நான் எதை நம்புவது..அவள் கோமதி பாவமடா. நல்ல பண்பான பிள்ளை."

டேய் மாமன்மகள் இருந்தா ஏண்டா கோமதியை நீ லவ் பண்ணினா. உனக்கு கேவலமாக தெரியல்லையா ஒருத்தியை கடைசி நேரம் வரை நம்ப வைத்து ஏமாற்ற உனக்கு எப்படியடா மனசு வந்தது போடா".

"மச்சான் நான் கோமதியை சந்திக்க வேணும். உண்மையச் சொல்லி அழ வேணும் மச்சான்".

"எந்த முகத்தோடு கோமதிய நீ சந்திப்பாடா உனக்கு வெட்கமாக இல்லையா". ஆத்திரத்தில் குணாளன் சத்தம் போட்டான். குணாளனுக்கு கோமதியை நினைக்க நினைக்க பாவமாக இருந்தது. அவனும் தானே முகுந்தன் காதலுக்கு பக்கபலமாக இருந்தவன். விடிந்ததும் முதல் வேலையாக கோமதியை சந்தித்தான் குணாளன்.

இரவு முகுந்தன் வீட்டிலிருந்து வந்தது தொடக்கம் நடந்தவற்றை சொல்லி முடித்தான். கோமதி அழுது ஆர்ப்பரிக்கவில்லை.

"விடுங்க குணாளன். நான் முகுந்தன விரும்பினது உண்மைதான். ஆனால் நான் கவலைப்படவில்லை.. இப்படிப்பட்ட ஆண்களை திருமணம் செய்வதே பாவம். சரி..கடவுள் என்னைக் காப்பாற்றி உள்ளார். உறுதியற்ற சுயநல வாதியான ஆண்களை ஒருபோதும் நம்பக்கூடாது குணாளன். இனி எக் காரணம் கொண்டும் என் கண் எதிரில் கூட முகுந்தனை வர வேண்டாம் என சொல்லி விடுங்க, அது போதும் நன்றி குணாளன்". அவ்விடத்தை விட்டு போய்விட்டாள்.

ஒரு நொடியிலேயே முகுந்தனையும் அவன் காதலையும் தூக்கி எறிந்தவள் பாரதியின் புதுமைப் பெண்ணாக தெரிந்தாள். அன்று பிற்பகல்..ஊரில் இருந்து கோமதியின் தகப்பனார் விடுதிக்கு அவசரமாக வந்திருந்தார்.

"அப்பா என்னப்பா சொல்லாமலே.. வீட்டில் ஏதும் பிரச்சனையாக அப்பா". உண்மையிலே கோமதி பயந்து போனாள்.

"ஒண்ணும் இல்லை மகள்.. ஆனால் அவசரந்தான். அதுதான் மகள் நான் வந்தன். நல்லதொரு சம்பந்தம் வந்திருக்கு உனக்கு. அவங்க நமது தூரத்து உறவுக்காரங்க உன்ன விரும்பிக் கேட்காங்க. நல்ல பண்பான குணமான தெரிந்த தம்பி. அந்த தம்பியும் என்ஜினியர். உனக்கு விருப்பம் இருந்தா மகள் நாளைக்கே Registration வைத்துக் கொள்ளலாம். என்று அவர்கள் விரும்புகிறார்கள். பிள்ளைக்கு விருப்பம் இருந்தா கையோட அழைத்து வருமாறு அம்மாதான் என்னை அனுப்பி வைத்தா. என்ன மகள்.. யோசிக்கிறா விருப்பம் இல்லாவிட்டால் சொல்லு மகள்".

"அப்படி ஒண்ணுமில்ல அப்பா. உங்கள் விருப்பம் தான் அப்பா.. என் விருப்பமும். எனக்கு பூரண சம்மதம். நாம் உடனேயே போவோம். நான் றூமேற் புவனாவிடம் சொல்லி போட்டு ஆயத்தமாக வாறன் அப்பா இருங்க..". தந்தையுடன் வீட்டுக்கு புறப்பட்டவள் Registration முடிந்த மகிழ்ச்சியோடு புதுப் பெண்ணாக தன் வருங்காலக் கணவன் அழைத்து வர பேராதனை வந்து சேர்ந்தாள்.

ⵔⵔⵔ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனையைத்தூண்டிய சிறுவர் பாடல்கள் (2)

இணுவையூர் கலாபூஷணம் ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன்

மார்ச் 2024 ஞானம் சஞ்சிகையில் (286) வெளிவந்த மேற்படி தலைப்பிலான எனது கட்டுரையின் தொடர்ச்சியாக மேலும் சில சிறுவர் பாடல்களைப் பார்ப்பதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

முதலில் ஒரு சிறுவனின் ஆராயும் திறனை அல்வாயூர் கவிஞர் மு. செல்லையா 'வளர்பிறை' என்ற தலைப்பில் படைத்துள்ள கவிதையைப் பார்ப்போம்.

**அம்மா வெளியே வா அம்மா!**
**அழகாய் மேலே பாரம்மா!**
**சும்மா இருந்த சந்திரனைத்**
**துண்டாய் வெட்டினதாரம்மா?**

**வட்டத் தோசை சுட்டது போல்**
**வானிலிருந்த சந்திரனைத்**
**துட்டச் சிறுவன் யாருடைத்தான்?**
**சொல்வாய் உண்மை தோன்றிடவே!**

**மட்டிப் பயலவன் வெட்டிவிட்டு**
**மற்றப் பாதியை எங்கெறிந்தான்!**
**கிட்ட மினுங்கும் கட்டியெல்லாம்**
**வெட்டிய மிச்சத் துண்டுகளோ?"**

தோசை என்றால் யாருக்குத்தான் பிடிக்காது? அடுத்து மஹாகவியின் தோசைபற்றிய பாடல் ஒன்றைப் பார்ப்போம்:

**தோசை**

**" அம்மா தோசை சுடுகின்றாள்**
**அருகில் ஓடிச் செல்கின்றோம்**
**சும்மா இருங்கள் என்கின்றாள்**
**சுட்டுச் சுளகில் இடுகின்றாள்**

**அடுப்பை நன்றாய் எரிக்கின்றாள்**
**அகப்பையில் மா எடுக்கின்றாள்**
**தடுக்கை நாங்கள் விரிக்கின்றோம்**
**தருவேன் பொறுங்கள் என்கின்றாள்**

**தட்டை கரண்டி பிடிக்கின்றாள்**
**சரியாயப் பெரிய நிலவைப்போல்**
**வட்டத்தோசை சுடுகின்றாள்**
**வடிவாய்த் தின்பீர் என்கின்றாள்**

**சம்பல் அரைத்துத் தாளித்துச்**
**சட்டி நிறைய இருக்கிறது**
**தம்பி உண்ணத் தொடங்கோமோ?**
**சாப்பாடென்றால் விடுவோமோ?**

"நொறுக்குத்தீன்" என்றால் வயதுவந்த பெரியவர்களே "ஒரு கை" பார்ப்பார்கள் -பிறகு சிறுவர்கள் எம்மாத்திரம்? "முறுக்கு" பற்றி ஒரு பாடலையும் "லட்டு" பற்றி ஒரு பாடலையும் அடுத்துப் பார்ப்போம், சுவைப்போம்!

"முறுக்கு;

**முறுக்கு நல்ல முறுக்கு**
**மொர மொரத்த முறுக்கு**
**நறுக்கு நொறுக்கு என்றே**
**நாங்கள் தின்னும் முறுக்கு**

**சிறுத்த சிறுத்த கம்பியாய்ப்**
**பிழிந்து கொதித்த எண்ணெயில்**
**முறுக விட்டுச் சுட்டதால்**
**முறுக்கு வந்த முறுக்கிது**

**வட்ட வட்ட முறுக்குகள்**
**அத்தை சுட்டு வைத்தனள்**
**தொட்டுக் கேட்ட போதவள்**
**தூக்கி இரண்டு தந்தனள்**

**உழுத்தம் மாவில் செய்தது**
**உள்ளே கிடந்து கடிபட**
**வறுத்த எள்ளும் போட்டது!**
**வாய்க்கு நல்லாய் இருக்குது.**

**கடித்துக் கடித்துப் பார்க்கிறேன்**
**பொடித்துப் பொடித்துப் போகுது**
**பொடித்த முறுக்கை நாவிலே**
**சுவைத்துச் சுவைத்துத்**
**தின்கிறேன்"**


"லட்டும் தட்டும்"

**"வட்டமான தட்டு**
**தட்டு நிறைய லட்டு**
**லட்டு மொத்தம் எட்டு**

**எட்டில்பாதி விட்டு**
**எடுத்தான் மீதம் கிட்டு**

**மீதம் உள்ள லட்டு**
**முழுதும் தங்கை பட்டு**
**போட்டாள் வாயில் பிட்டு**

**கிட்டு நான்கு லட்டு,**
**பட்டு நான்கு லட்டு**
**மொத்தம் தீர்ந்ததெட்டு**
**மீதம் காலித்தட்டு!...**



○○○




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# சோதனை மேல் சாதனை

ஏ. ஏ. ஹெச்.கே. கோரி



முச்சக்கர வண்டி மூண்டு மணிக்கு வரும். அதில் ஏறிக்கொண்டு தான் எஸ்.எல்.பி.ஸி க்கும் போய்ச் சேர வேண்டும்.

ஏறிக்கொண்டு போவதாய்ச் சொல்வது வலு ஈஸி, ஆனால் ஏற முயல்கிறபோது தான் வருத்தம் தெரிகிறது. இப்போதெல்லாம் ஆட்டோவுக்குள்ளே காலைத் தூக்கி வைப்ப தற்கே சிரமப்பட வேண்டியிருக்கிறது சிரமப்படத் தான் வேண்டும், காலைத் தூக்கி வைக்கத்தான் வேண்டும், இலங்கை வானொலி நிலையத்துக்குப் போய்ச்சேரத்தான் வேண்டும்.

ஜெயந்தி ஜெய்சங்சர் காத்துக் கொண்டி ருப்பாள்.

இன்னும் எத்தனை நாளைக்கு? உடம்பில் தெம்பு இருக்கிற வரைக்கும், மனதில் உறுதி இருக்கிற வரைக்கும், மேலேயிருந்து இவளுடைய அவன் ஆசீர்வாதம் வழங்கிக் கொண்டிருக்கிற வரைக்கும்.

மணி பதினொண்டு. நேரம் நிறைய இருக்கிறது. இவளுடைய ஆஸ்தான விசிறி, நேற்று சாயங்காலம் வந்திருந்தவன், கையளித்த அந்தப் புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தா லென்ன?

ஆஸ்தான விசிறி, ஓர் எழுத்தாளனுமாவான்.

அட, எழுத்தாளனா! பேர் என்ன ?

அவனுடைய பெயரைச் சொன்னால் வாசகர் களுக்குத் தெரியாது. யாருக்குமே தெரியாது. அவனுடைய பெயரைப் போட்டு, எழுத்தாளர் - கவிஞர் என்று அச்சடித்து, விஸிட்டிங் கார்டுகளைப் பொக்கெற்றில் வைத்திருக்கிறான். அவனைப் பற்றி விவரம் கேட்கிறவர்களிடம், தான் ஓர் எழுத்தாளன் என்று கொலரைத் தூக்கி விட்டுக்கொண்டு, பொக் கெற்றிலிருந்து ஒருவிஸிட் டிங் கார்டையெடுத்து நீட்டுவானாம். அதைப் பெற்றுக்கொண்டவன், அவனுடைய பெயரை வாசித்து விட்டு, "சேர், நீங்க என்னப் பேர்ல எழுதுறீங்க" என்று கேட்பானாம். நம்ம ஆள் கொலரை மடக்கி விட்டுக்கொள்வானாம். ஆகையால், அவனுடைய பெயர் வேண்டாம். விசிறி என்றே கொள்ளலாம்.

அந்த ஆஸ்தான விசிறி, சென்னையிலிருந்து, ஒவ்வொரு முறை வருகிறபோதும் அவனுடைய சமீபத்திய புத்தகமொன்றை இவளுக்கு அன்பளிப்பான். ஆனால், நேற்று வந்தவன், அவனுடைய புத்தகமெதையும் எடுத்து வரவில்லை. இவளுக்குக் கனகாலமாய் உடன்பிறவா சகோதரனாயிருக்கிற சக வானொலி யாளரொருவருடைய புத்தகத்தைக் கொண்டு வந்து தந்தான்.

"வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" என்று அந்தப் புத்தகத்துக்குத் தலைப்பு இருந்தது. அகில உலக அறிவிப்பாளர் பி.ஹெச்.அப்துல் ஹமீத் எழுதியது.

கே.எஸ்.ராஜா இப்போது இருந்திருந்தால், அவரும் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டிருப்பார், "வான்பரப்பில் ஓர் ஒலிப்பித்தன்" என்று.

கே.எஸ்.ராஜா போய் விட்டார், வான் பரப்பைத்தாண்டி.

புத்தகத்தைக் கையிலெடுத்துப் புரட்ட ஆரம்பித்தாள். "கடந்து வந்த பாதையைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி நோக்கவைத்த நிகழ்வு"என்கிற, முதல் அத்தியாயத்தின் தலைப்பை வாசித்ததுமே இவளுக்கு, இவள் நடந்து வந்த பாதையைத் திரும்பி நோக்கவைத்த நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன.

பிரித்த புத்தகத்தை மார்பின் மேலே கவிழ்த்து வைத்தபடி, கட்டிலில் சரிந்தபடி, கண்களை மூடி, ஐம்பது ஆண்டுகளைக் கடந்து பின்னோக்கிப் போய், மலரும் நினைவுகளை மனத்திரையில் ஓட விட்டாள்.

அம்மாவின் ஏச்சும் பேச்சும் ஒருபுறம், திரைக்கதை வசனப் பயிற்சி மறுபுறம். அம்மா வின் ஏச்சும் அனார்க்கலி வசனப் பயிற்சியும் இப்படித்தான் மிக சுவாரஸ்யமாக இருக்கும்.

"காலையிலே இருந்து நானும் கவனிச் சுட்டுத்தான் வாறன். பாடப் புத்தகத்தை தொட்டுப் பார்க்கிறதில்லை".

"வருக வருக, இளம் மனதை ஏங்க விட்ட ஏந்தலே, வருக".

"அடி செருப்பால. எங்கிட்டயே வசனம் பேசறியா?"

"குறித்த நேரத்துக்கு வரவில்லையே என்று கோபிக்கிறாயா அனார்?"

"இப்படியே போனால், பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் போக வேண்டி வரும்."

"கொலுமண்டபத்து மனிதர்களுக்கு நேரமாவது நினைப்பாவது!"

"நான் பேசுறது ஏதாவது காதில எடுக்கிறியா?"

"கொலுமண்டபத்து மனிதன்! அப்பப்பா, கோபத்தில் என் அந்தஸ்தைக்கூட உயர்த்தி விட்டாயே!"

"இங்கை பார், இதுக்கு மேலே என்னால ஏலாது உன்னை சமாளிக்க."

"தெரியும் எனக்கு. தென்றல் நடைபோடும் தீரரே, டில்லி ஏகாதிபத்தியத்தின் எதிர்காலக் காவலரே, என்ன விழிக்கிறீர்? போர் வீரனல்ல என் காதலர், புவியாளும் பாதுஷாவின் புதல்வர் என்பது புரிந்து விட்டது. நீங்கள் மூட்டிய புகை மண்டலம் மறைந்து விட்டது."

"புகை மண்டலமா, இந்தா வாறன் கொள்ளிக் கட்டை எடுத்துக்கிட்டு" என்று அடுப்படிக்கு ஓடுவாள்.

"அம்மா அம்மா, சும்மா தமாசுக்குத்தானே" என்று அம்மாவை சமாதானப்படுத்துவாள்.

பத்தே வயதாயிருந்த பால பருவத்தில், இவள் பங்கு கொண்ட வானொலி நாடகத்துக்கு முப்பது ரூபாய் சன்மானம் கிடைத்தபோது திக்குமுக்காடிப்போனாள்.

ஒரு சவரன் தங்கம் அப்போது ஐம்பது ரூபாய்!

வானொலி நாடகங்களில் தொடர்ச்சியாய் நடித்துக்கொண்டு, எஸ்.எஸ்.ஸி பரீட்சையில் விசேட சித்தியுடன் பெறுபேறுகள் பெற்று, பெற்றோரை சந்தோஷப்படுத்தியது, ஒரு சரித்திர சாதனை!

இவளுடைய வாழ்க்கையின் முதல் சாதனை.



பொதுசன நூல
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு, காதல் புரிகிற பருவத்துக்கு உயர்ந்த பிறகு, மேடை நாடகங்களில் நடித்தபோது சந்தித்தாள், அந்த, உழைக்கும் கரங்களுக்கு சொந்தக்காரனை.

சின்ன வயசிலேயே தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்குப் புலம் பெயர்ந்து வந்து, பகலில் ஒரு வேலையும் இரவில் வேறு வேலையும் என்று உழைக்கிறவனாய் மட்டுமல்லாமல், ஒரு மனிதநேய மாமன்னனாயுமிருந்தான் அவன்.

அதோடு, தீவிரமான இலக்கிய வாசகனாயும். கையில் எப்போதும் புத்தகமொன்றை வைத்திருக் கிறவனாயிருந்தான்.

அவன் கையில் வைத்திருந்த 'குறிஞ்சி மலர்' நாவல் இவளுடைய கண்ணில் பட்டதுதான் அவர்களுடைய உறவுக்குப் பிள்ளையார் சுழி அல்லது, அவர்களுடைய உறவுக்கு ஒரு பிஸ்மில்லா.

குறிஞ்சி மலரை அவனிடமிருந்து இரவல் வாங்கி வாசித்துவிட்டுத் திருப்பித் தருகிறபோது, "அந்தப் பூரணி கேரக்டர் எனக்கு ரொம்ப புடிச்சிருக்கு. ஒங்களுக்கு?" என்று இவள் கேள்வி யொன்றை வைக்க, "எனக்கும் தான்" என்று மறுமொழியளித்த அவன், தொடர்ந்து, இவளை நாணமுறச் செய்கிற வாக்கியமொன்றை எடுத்து விட்டான் :

"நீங்கதானம்மா எனக்குப் பூரணி."

அடுத்த சந்திப்பின்போது, "ஒங்கட்ட ஒரு விடயம் சொல்ல விட்டுப்போச்சு" என்று இழுத்தான் அவன்.

"எல்லா விடயத்தையும் தான் ஒரே வாக்கியத்ல சொல்லிட்டீங்களே" என்று சிரித்தாள் இவள்.

"இதுக்கு மேல என்ன சொல்லிரப் போறீங்க?"

"அதில்லம்மா, நீங்க யோசிக்க வேண்டிய விடயம் இருக்கு."

"யோசிக்க எதுவுமே இல்லை."

"நா சொல்றதக் கொஞ்சம் கேளுங்களேன்."

"ம். சொல்லுங்க தலைவரே."

"நா இந்தியா. தமிழ் நாடு."

"நான் கூட இந்தியா தான். சேர நன்னாட் டிளம் பெண்."

"நா முஸ்லிம்."

"தெரியும். காதலுக்கு ஜாதியில்லை மதமுமில்லையேன்னு கண்ணதாசன் பாடினத ஏத்துக்கிற முஸ்லிம் நீங்க. அதையே ஏத்துக்கிட்ட இந்துப் பெட்டை நான்."

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவையும் இலங்கையையும் ஒரு சேர ஆட்சி புரிந்து கொண்டிருந்த காலத்தில் தான் தமிழ் நாட்டிலி ருந்து வறுமைக்கோட்டுத் தொழிலாளிகள் கப்பல்களிலடைக்கப்பட்டு, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாய் இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டார்கள்.

இரு நாடுகளிலும் ஒரே அரசாங்கம் என்பதால், இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கடவுச் சீட்டும் இல்லை, இலங்கைக் குடியுரிமை யும் இல்லை. பிற்காலத்தில், சிரிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தில் தான் அந்த ரெண்டுமே அவர்க ளுக்குக் கிட்டின.

நம்ம ஆள், அதாவது, இவளுடைய ஆள், கப்பலில் வந்தவனில்லை, கள்ளத் தோணியில் வந்தவன், கடவுச்சீட்டு இல்லாதவன் என்று எவனோ பொலிஸில் போட்டுக்கொடுக்க, பிடித்துக்கொண்டு போய் உள்ளே போட்டு விட்டார்கள். கொம்பினித் தெரு சிறையிலிருந்து அவனை இவள் மீட்டுக்கொண்டு வந்தது, இவள் எஸ்.எஸ்.ஸி பரீட்சையில் சித்தியடைந்த சாதனையைக் காட்டிலும் பாரிய சாதனை. சாதனை எண் ரெண்டு.

பதிவுத் திருமணம் இனிதே நடந்தது. பிறகுதான் புயல் கரையைக் கடந்தது.

எதிர்பார்த்த மாதிரியே, இவளுடைய குடும்பத்தில் கரச்சல். அவனுக்குக் குடும்பமே இல்லை என்பதால் கரச்சலும் இல்லை. குடும்பம் இல்லவே இல்லை என்பதில்லை. குடும்பமொன்று இருந்தது, முத்துப்பேட்டையில். இப்போது, இந்த இருவர் தான் குடும்பம்.

சுகவீனமுற்றிருந்த தந்தை காலமான பிறகு, இவர்களுக்கு ரெண்டு குழந்தைகளும் பிறந்த பிறகு, அம்மாவும் வந்து இவர்களோடு இணைந்து, இவளுக்கு மட்டுமல்லாமல், இவளுடைய கணவனுக்கும் தாயானாள்.

கணவனுடைய ஆலோசனையின் பேரில், கும்பகோணத்திலிருக்கிற ஒரு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் அஞ்சல் வழிக் கல்வி மூலம் இவள் ஒரு ஹோமியோபதி டொக்டரானது, மூண்டாவது சாதனை.

மருத்துவக் கல்லூரிப் பரீட்சை எடுக்க, இவள் கும்பகோணத்துக்குப் பயணமான போது, திருச்சி விமான நிலையத்தில் இவளை வரவேற்க வந்த இவளுடைய மாமனார், அவருடைய மகனைப் போலவே இனிமையான


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனிதராயிருந்ததைப் பார்க்க, இவளுக்கு வலுசந்தோஷமாயிருந்தது.

தேசம் ஞானம் கல்வி ஈசன் பூசை எல்லாம் காசு முன் செல்லாது என்பதால், சல்லி சம்பாதித்து, பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டிய அவசியமும் அவசரமும் இருந்தது. கடனுக்குப் பணம் திரட்டி இரும்புக் கடையொன்று கோலாகாலமாய்த் தொடங்கப்பட்டது.

இதற்கிடையே, இலங்கை வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளர் வேலைக்கு இவள் விண்ணப்பிக்க, இவளுடைய குரலினிமையும், தெளிவான உச்சரிப்பும், தமிழறிவும், திரையிசையில் இவளுக்கிருந்த ஞானமும் கூட்டாய்க் கை கொடுக்க, பகுதிநேர ஒலிபரப்பாளர் வேலை கிடைத்து, இலங்கையில் மட்டுமல்லாமல், தமிழ் நாட்டிலும், மற்றும் தமிழ் கூறு நல்லுலகமெங்கும் இவளுடைய குரலும், பெயரும் கொடிகட்டிப் பறந்த அந்த வசந்த காலம் வந்து சேர்ந்தது. ஆயிரக் கணக்கில் நேயர்கள், அங்கிங்கெனாதபடி எங்கும் ரசிகர்கள், வருஷத்துக்கு ரெண்டு முறை இவளை தரிசிக்க வருகிற இந்த ஆஸ்தான விசிறியைப் போல எத்தனையோ விசிறிகள்.

ரெண்டு வருடத்துக்கு முன்பு அவன் வந்திருந்தபோது, சனிக்கிழமை சாயங் காலங்களில் இவள் நெறிப்படுத்தி வழங்குகிற "இன்னிசைச் சுவடுகள்" நிகழ்ச்சியின் ஒலிப்பதிவுக்காக அடுத்த நாள் வானொலி நிலையத்துக்குப் போக வேண்டியிருப்பதை அவனிடம் சொன்னபோது, "நாளக்கி சாயங் காலம் நா வர்றேன் மேடம், நானே கார்ல போய் ஒங்கள எஸ்.எல்.பி.ஸி ல டிராப் பண்ணிர்றேன்" என்றான். சொன்ன மாதிரியே அடுத்த நாள் வந்தான். ஆனால், காரில் வரவில்லை. கால்நடையாகவே வந்தான்.

"என்னாச்சி தம்பி, கார் இல்லியா?"

"கார் இருக்கு மேடம், லைஸன்ஸ் தான் இல்ல."

"ஸ்ரீலங்கா டிரைவிங் லைஸன்ஸ் ஒங்கட்ட இருக்கு தானே?"

"இருந்தது, ஆனா இல்ல."

"என்னத்த சுன்னையா சொல்ற மாதிரி சொல்றீங்க."

"விவரமா சொல்றேன் மேடம்." விவரமாய்ச் சொன்னான்.

இலங்கைப் புகையிரதங்களின் மேலே மயக்கம் கொண்டிருந்தவன் அவன். கோட்டைப் புகையிரத நிலையத்தில் ரயிலேறி, வெள்ளவத்தை ஸ்ரேஷன் வரைக்கும் கடலோரத் தண்டவாளங் களின் மேலே பயணிக்கிறபோது, கடலலைகள் கடலோரப் பாறைகளின் மேலே மோதி, ஜன்ன லோரத்தில், முகத்தில் சாரலடிக்குமே, அந்த சுகமான அனுபவத்துக்காகவே திரும்பத் திரும்பப் பயணிக்கிறவனாயிருந்தவன். கொள்ளுப்பிட்டி பர்கர்கிங் வாசலில் இருந்த நலிந்த குழந்தைகளுக்கு இவன் ஐஸ்க்ரீம் வாங்கித்தந்ததற்கு அந்தக் குழந்தைகள் முகமலர்ந்து சிரித்த சிரிப்பையும், இந்தக் கடல் நீர்ச் சாரலையும் தொடர்பு படுத்தி, "மனச் சிலிர்ப்பும் மழலைச் சிரிப்பும்" என்று அவன் எழுதியிருந்த சிறுகதையொன்றை இவளுக்கு வாசிக்கக் கொடுத்தான். அந்த மனச் சிலிர்ப்பை மீண்டும் அனுபவிக்க, அன்று காலை ரயிலில் போனபோது, ஒரு பணச் சிலிர்ப்பு ஏற்பட்டுப் போனதாம். பத்தாயிரம் ரூபாய் பணமும் இலங்கை சாரதி அட்டையும் வைத்திருந்த வாலெட், ரயிலின் நெரிசலில் பிக்பொக்கெற் ஆகிவிட்டதாம்.

அப்புறமென்ன, அண்டைக்கும் முச்சக்கர வண்டிதான்.

நெஞ்சுக்கு மேலே விரிந்து கிடந்த பி.ஹெச் அப்துல் ஹமீதுடைய புத்தகம் விரித்த படியே தான் கிடந்தது. பக்கங்கள் புரண்டி ருக்கவேயில்லை. இவள் தான் கட்டிலில் புரண்டு படுத்தாள்.

மணி ஒண்டு.

மதிய உணவுக்குப் பேத்தி வந்த அழைத்த போது, பசியில்லை, வேண்டாம் என்று மறுத்து விட்டாள்.

நினைவுகளால் நெஞ்சம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறபோது, வயிற்றின் வெற்றிடம் எப்படி உணரப்படும்!

பகுதி நேர அறிவிப்பாளராய் இவள் பதவியேற்ற முதல் நாள் இவளுக்கு நன்றாய் நினைவிலிருக்கிறது. "இன்றைய நட்சத்திரம்" நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க வேண்டும். அன்றைய நட்சத்திரம், பி.பானுமதி. பி.பானுமதி யுடைய ஐந்து பாடல்களை ஒலிபரப்ப வேண்டும். நான்கு இசைத்தட்டுகளைத் தேடி எடுத்து வைத்து விட்டு, ஐந்தாவது இசைத்தட்டைத் தேடி எடுத்துக்கொண்டு பார்த்தால், முந்தைய நான்கு இசைத்தட்டுகளும் காணோம். இவள் பரிதவித்துப்போன பின்னால்தான் தெரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது, அது, மூத்த அறிவிப்பாளர்களுடைய பகிடிவதை என்று.

பின்னாட்களில், ஒலிபரப்புக் கலையில் ஒரு விற்பன்னியாகி, ஆயிரக் கணக்கில் நேயர்கள், ரசிகர்கள், விசிறிகளையெல்லாம் சம்பாதித்ததோடு, ஒலிபரப்புக் காலைஞரான இவள், ஒரு பாடகியாயுமிருந்ததால், எஸ். கே. பரராஜசிங்கம், (சங்கர்)கணேஷ் போன்ற ஆளுமைகளோடு இணைந்து பாடுகிற சந்தர்ப்பம் வாய்த்ததெல்லாம் இவளுடைய கலைப் பயணத்தின் இனிமையான தருணங்கள். சிறிய சாதனை போல மாயத்தோற்றமளித்தாலும், அதுவும் கூட ஓர் அரிய சாதனைதான். சாதனை எண் நான்கு.

இலங்கை வானொலியில் இவள் பதவியேற்ற காலத்தில், இந்தியாவிலும் இலங்கையிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்து, இந்தியாவிலும் இலங்கையிலும் ரேடியோ சிலோன் ஏகாதிபத்தியத்தின் சர்வாதிகார ஆட்சி நடந்துகொண்டிருந்தது!

அந்த சர்வாதிகார அரசாட்சியில் ஓர் வசீகர இளவரசியாய்க் கொலுவீற்றிருந்தது, இவளுடைய ஐந்தாவது சாதனை.

அந்த, அறிவிப்பாளரின் ஆசனம், இவளுக்கு ஓர் அரியாசனமாகவே காட்சியளித்தது.

இசையால் வேயப்பட்டிருந்த அந்த இனிமையான வசந்த காலத்தில், இந்தியாவில், கடைகளில் வானொலிப்பெட்டி வாங்குபவர்கள் முதலில் கேட்பது, "சிலோன் ரேடியோ பிடிக்குமா இதுலே" என்று கேட்டு, அந்த அலைவரிசையைப் பிடித்துக் காண்பித்தால் தான் அந்த வானொலிப்பெட்டி விற்பனையாகும்!

"நான் கண்ட சொர்க்கம்" படத்தில், கதாநாயகன் கே.ஏ.தங்கவேலு, அகால மரணமடைந்து சொர்க்கத்துக்குப் போய், அங்கே இந்திர சபையில் வைத்து அவருடைய பொக்கெற் ரேடியோவை ஆன் செய்கிற போது, அந்த ரேடியோவில் ஒலிக்கிற முதல் வசனம், இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பு!

இந்திர சபையிலும் ஒலிக்கிற அந்த மந்திரக் குரலுக்கு சொந்தக்காரர், ஒலிபரப்புக் கலையின் பிதாமகர் எஸ். பி. மயில்வாகனம்.

திருமணத்துக்கு முன்பு, இவள் பிறந்த மண்ணான கேரளாவுக்குப் போய் மலையாளம் கற்றுக்கொண்டு வந்ததோடு, மலையாளத் திரைப்படங்களோடும் மலையாளப் பாடல்களோடும் பரிச்சயம் ஏற்படுத்திக் கொண்டதால், இலங்கை வானொலியில் மலையான நிகழ்ச்சிகள் நிகழ்த்துகிற வாய்ப்பும் கிடைத்தது.

அந்த வாய்ப்பிலும் ஒரு ஏய்ப்பு இருந்தது என்பதை இவள் அப்போது அறிந்திருக்கவில்லை.

இவளுடைய மலையாள நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை வழங்கிய கேரளத்து நிறுவனம், மாதாமாதம் இவளுக்கு சன்மானமாய் வழங்கிய *2700* அமெரிக்க டொலர்கள், இலங்கை வானொலியின் இடைத்தரகர்களால் திருடப்பட்ட விடயம், நெடு நாட்களுக்குப் பிறகு தான் இவளுடைய கவனத்துக்கு வந்தது.

முதல் நாள் நடந்தது பகிடிவதை. இது, பாதக வதை. பாதகர்கள் மேலே வழக்குத் தொடர்ந்தாள். வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. நடந்து கொண்டேயிருக்கிறது.

*1983* தமிழினப் படுகொலை நடந்த பயங்கரமான காலகட்டத்தில், ஒரு தற்காப்பு நடவடிக்கையாக, இலங்கை வானொலியின் நிரந்தரத் தமிழ் ஒலிபரப்பாளர்களெல்லாம் கட்டாய விடுப்பில் வீட்டுக்கு அனுப்பப்பட்டு விட, இவள் அழகிய தமிழ் மகள் இல்லை, மலையாள மங்கை என்கிற "தகுதி"யில், இவளுக்குப் பணி வழங்கப் பட்டது.

தொடர்ந்து, மொட்டைக் கடிதங்கள், மிரட்டல் கடிதங்கள், முரட்டுத் தொலைபேசித் தொந்தரவுகள்.

இந்த ஹிம்சைகளெல்லாம் ஏற்கனவே இவள் எதிர்கொண்டவைதான். இவளுடைய கலப்புத் திருமணத்தையொட்டி, புது மணத்தம்பதிமேலே பொழியப்பட்ட வசைமாரிகளையெல்லாம் இருவரும் இணைந்து சமாளித்ததைப் போலவே இப்போதும் சமாளித்து வெற்றி கொண்டார்கள்.

வியாபாரத்திலும் வெற்றி கண்டார்கள். இரும்புக் கடை இவளுடைய பெயரில் தான் இருந்தது. வியாபாரம் தொடங்குவதற்கு எடுத்த கடனெல்லாம் ஒரு வருடத்திலேயே திருப்பிச் செலுத்திவிட முடிந்தது.

இவளுடைய ஆருயிர்க் கணவன், திறமைசாலியான வியாபாரியாயிருந்ததோடு, பிறருக்கு உதவுகிற பரோபகாரியாயுமிருந்ததால், வரவு, செலவு, சரியாய்ப் போய்க் கொண்டிருந்தது.

அப்படி சரியாய்ப் போய்க் கொண்டிருந்தது, தவறாய்ப் போய் விட்டதோ என்கிற சந்தேகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது, இனிமையான துணைவனுக்கு இதயநோய் வந்து அவன் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் படுத்த படுக்கையானபோது.

தனக்கு மிஞ்சித்தான் தானமும் தர்மமும் என்கிற கஞ்சத்தனத்தைக் கொஞ்சமும் மதிக்காதவனுக்கு, கடைசியில் இருதய சத்திர சிகிச்சைக்காகப் பணம் தேவைப்பட்ட போது, கடனாக உதவுவதற்கு ஒரு உறவினர் கூட முன்வரவில்லை. எல்லோரும் சென்னைக்கு வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள், பிரார்த்தனை செய்தார்கள், சிகிச்சை பலனளிக்கவில்லை. அவனது கடைசி விருப்பத்தின் படி, அவனது ஊரிலேயே, அவன் பிறந்த மண்ணிலேயே நல்லடக்கம் செய்துவிட்டு இவளும் பிள்ளைகளும் இலங்கைக்கு அனாதரவாய்த் திரும்பினார்கள்.

கடை மூடப்பட்டு, கடனுக்கு சரக்கு கொடுத்தவர்களுக்கெல்லாம் ஓரளவு கடன் தீர்க்கப் பட்டாலும், கடனாளிகள் இன்னும் இருந்தார்கள். வசூல் செய்ய வரிசையில் நின்றார்கள். இவள் அவகாசம் கேட்டது மூர்க்கமாய் மறுக்கப்பட்டது.

"வூடு ஒண்டு இருக்குது தானே நோனா, வூட்ட வித்து எங்களுக்கு சல்லி தாங்கோவன்."

சில நேரங்களில் பல மனிதர்கள் !

பத்தொன்பது பர்ச்சேஸ் வளாகத்தில், பிரமாண்டமான வீடு, வீட்டைச் சுற்றியும் பலப்பல மரங்கள். எல்லாம் இவள் நட்டு, நீர்ப் பாய்ச்சி, பராமரித்து வளர்த்த, இவளுடைய குழந்தைகள்.

தொட்டுக்கோ தொடச்சிக்கோ என்று இலங்கை வானொலியோடு உறவு தொடர்ந்து கொண்டிருக்கிறது. சனிக்கிழமை பின்னேரம், நான்கு மணிக்கு இன்னிசைச் சுவடுகள் என்கிற இனிமையான நிகழ்ச்சியை நெறிப்படுத்தி, 1950, 60, 70 களின் சுகமான பாடல்களை ஒலிபரப்புகிறாள். அந்தப் பொற்காலப் பாடகர்கள், நடிகர்கள், கவிஞர்கள், அனைவரையும் நினைவு கூர்ந்து, நேயர்களைப் பரவசப்படுத்திக் கொண்டிருக்கிறாள்.

பள்ளிப் பிராயத்தில் ரேடியோ நாடகங்களில் நடிக்க ஆரம்பித்து, பிறகு ஒலிபரப்புக் கலைஞராய் உயர்ந்து ஐம்பது வருடத்துக்கு மேலாகியும், இறுதி வரை, பகுதி நேர அறிவிப்பாளர்தான்.

இலங்கை வானொலியின் ஒரு நிரந்தர ஒலிபரப்பாளராய் உச்சத்துக்குப் போய் இவள் நிகழ்த்தக் கனவு கண்டிருந்த, அந்த ஆறாவது சாதனை, ஒரு நிறைவேறாத கனவாகவே கலைந்து போனது.

சரி, அதற்கென்ன?

குடும்பத் தலைவனை இழந்துவிட்ட குடும்ப மென்றாலும், இப்போது இந்தக் குடும்பம், நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம் என்று சிறப்புப் பெற்றிருக்கிறது என்கிற மனநிறைவு இவளுக்கிருக்கிறது. அந்த நிம்மதியே போதும்.

இரு வேறு மதங்களில் இணைந்த இந்தக் குடும்பம், இப்போது, நான்கு மதங்களாக விரிவடைந்து, கிளைவிட்டு நிற்கிறது. இரு வேறு மொழிகளால் இணைந்த குடும்பம், இப்போது நான்கு மொழிகளாக வேர்கள் விட்டு கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறது. இலங்கை, இந்தியா, மலேசியா, அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளையும், இஸ்லாம், இந்து, கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய நான்கு மதங்களையும் இணைத்து, ஒரு பாரத விலாஸாக, இல்லை, அதையும் மீறி ஒரு சர்வதேசக் குடும்பமாக விளங்குகிறது இவளுடைய அழகிய, வடிவான குடும்பம்.

மணி, மூண்டை நெருங்கி விட்டது. மார்பில் விரிந்து கிடந்த புத்தகத்தை மடித்து வைத்தாள். விழியோரத்து ஈரத்தைப் புடவைத் தலைப்பால் ஒற்றியயடுத்தாள்.

முச்சக்கர வண்டி மூண்டு மணிக்கு வரும். அதில் ஏறிக்கொண்டு எஸ்.எல்.பி.ஸிக்குப் போக வேண்டும். ஏற முயல்கிறபோது, கால் வருத்தம் தெரிகிறதோ? ஆட்டோவுக்குள்ளே காலைத் தூக்கி வைப்பதற்கே சிரமப்பட வேண்டியிருக்கிறதோ?

அல்லா, ஆர் அப்படிக் கதைத்தது!

"இன்னும் எத்தனை நாளைக்கு?" என்று ஆரம்பத்தில் எழுதியிருந்ததெல்லாம் பிழை. அந்த அவநம்பிக்கை வாக்கியமெல்லாம் டிலிட்.

உடம்பில் தெம்பு இருக்கிறது, மனதில் உறுதி இருக்கிறது, இறைவன் அருள் பாலித்துக்கொண்டிருக்கிறான், மேலேயிருந்து இவளுடைய அவன் ஆசீர்வாதம் வழங்கிக் கொண்டிருக்கிறான்.


இதோ, இவள் கிளம்பி விட்டாள்.

ஜெயந்தி ஜெய்சங்கர் காத்துக் கொண்டிருப்பாள்.

ooo


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்காநகர் ஷஹ்னா ஸப்வானின் 'எரியும் நட்சத்திரம்' - கவிதை நூல் விமர்சனம்




சங்க காலத்தில் தமிழ் இலக்கிய மரபானது செய்யுள் இலக்கியமாகப் படைக்கப்பட்டு வந்துள்ளன. அக்காலப் புலவர்களின் கவிதைகள் கருத்துச் செறிவும் சொற் செறிவும் மிக்கனவாகக் காணப்பட்டன. அதன்பின்னரான காலப்பகுதிகளில் மரபுக் கவிதை, வசன கவிதை, புதுக் கவிதை, நவீன கவிதை, பின் நவீனத்துவக் கவிதை, தன்முனைக் கவிதை, ஹைக்கூ கவிதை என படித்தரங்கள் மாற்றமடைந்து வந்துள்ளன.

செய்யுள் இலக்கியங்கள் கற்றோருக்கு மாத்திரமே புரிந்த காலம் மாறி பாரதியாரின் காலத்தில் எழுதப்பட்ட உரைநடைக் கவிதைகள், பெரும்பாலான மக்களிடத்தில் நல்ல வரவேற்பைப் பெற்றன. பிற்காலத்தில் பிரதேச மொழி நடையில் எழுதப்படும் படைப்புகள், வாசிப்பின் மீதுள்ள ஆர்வத்தைத் தூண்டியது எனலாம்.

தென் மாகாணத்தைப் பொறுத்தளவில் எழுத்து மொழிக்கும், பேச்சு மொழிக்கும் பாரியளவு வித்தியாசங்கள் காணப்படுகின்றது. சில சமயங்களில் பேச்சினிடையே சிங்களச் சொற்களும் ஊடுருவிக் காணப்படுகிறது. படைப்பாக்கத்தின் போது பிரதேச மொழி வழக்கை வாசகர்கள் விரும்புவதால் படைப்பாளர்கள் அதில் அதிக கவனம் செலுத்தலாயினர். அதேபோல தென்னிலங்கைப் படைப்பாளிகள் கவிதைகள் மீது அதிக முனைப்புக்காட்டி வந்துள்ளனர். இதில் ஆன்மீகம் சார்ந்த அதாவது பக்தி இலக்கியங்களே மிகவும் முக்கியத்துவம் பெற்றுக் காணப்பட்டன.

தென்னிலங்கை என்ற வரையறைக்குள் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களே உள்ளடங்குகின்றன. எனினும் மறைந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் "ஈழத்து தமிழ் இலக்கியத் தடம்" என்ற தனது நூலில் தென்னிலங்கை என்பது இலக்கிய ரீதியாக பாணந்துறை முதல் திக்குவல்லை வரையான பிரதேசம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தென்னிலங்கையின் முன்னோடிக் கவிஞர்கள் என்று நோக்கும் போது அதில் மிக முக்கியமான கவிஞர்களாக கவிஞர் ஏ. இக்பால் மற்றும் திக்குவல்லைக் கமால் ஆகியோர்களைப் பிரதானமாகக் குறிப்பிடலாம்.

ஆக்க இலக்கியங்களைப் படைப்பதிலும் அதனை இரசிப்பதிலும் மிகவும் சுருங்கிப்போன வாசிப்பு வட்டத்தைக் கொண்டுள்ள இன்றைய காலகட்டங்களில் அதிலும் பல்வேறு வகையான வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் பெண்களின் ஈடுபாடு இத்துறையில் மிகவும் குறைவாகவே இருந்து வருகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் இலக்கியத் துறையில் சிறப்பாகத் தடம் பதித்து தனக்கென்று ஒரு தனியான இடத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்கு பாரிய அர்ப்பணிப்புகள் தேவைப்படுகின்றது. இத்துறையில் தொடர்ந்து இயங்குவதாலேயே நிலைத்து நிற்க முடியும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இன்று வெளியிடப்படுகின்ற "எரியும் நட்சத்திரம்" கவிதை நூலாசிரியர் தர்காநகர் ஷஹ்னா ஸப்வானும் தென்னிலங்கையைச் சேர்ந்தவராகின்றார். இவர் சிறுவயதிலிருந்தே இலக்கியத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர் என்பதை அவருடைய "எரியும் நட்சத்திரம்"



**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**
**(பன்னூலாசிரியர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைத் தொகுதி மூலம் தெரிந்து கொண்டேன். பாடசாலைக் காலத்திலிருந்தும் அதற்குப் பின்னரான காலப் பகுதியிலிருந்தும் இவருக்கு கவிதைத் துறை மீது ஒரு அலாதியான ஈடுபாடு இருந்திருக்கிறது. அத்துடன் இத்துறையில் தனது பெயரையும் பதிக்க வேண்டும் என்பதுவும் ஷஹ்னா ஸப்வானின் ஆசையாக இருந்திருக்கிறது. இவருடைய இந்த விருப்பத்தின் வெளிப்பாடாகவே "எரியும் நட்சத்திரம்" என்ற இந்தக் கவிதைத் தொகுதி 113 பக்கங்களை உள்ளடக்கியதாக இன்று வெளிவருகிறது.

இந்தப் பெண் கவிஞர் எங்கள் எல்லோரையும் விட்டு மறைந்துவிட்டார். இனி எங்களுக்கென்ன என்று நினைக்காமல் இவருடைய கவிதைகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்தெடுத்து, இவருடைய விருப்பத்தை நிறைவேற்றி வைக்கும் வகையில் "இளம் தாரகையின் தூரிகை'' என்ற குழும உறுப்பினர்களான இவருடைய நண்பர் குழாம் இந்தக் கவிதை நூலை வெளியிட்டு வைப்பது பெரும் மகிழ்வுக்குரியது, பாராட்டுக்குரியது. இந்தப் பணிக்கு மிகவும் உறுதுணையாக இருந்த களு/ ஸாஹிரா கல்லூரியின் பிரதி அதிபரான, நூலாசிரியரின் தந்தை ஏ.எச்.எம். ஸப்வான் அவர்களும் பாராட்டுக்குரியவர்.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள வலம்புரி கவிதா வட்டத் தலைவர் கவிஞர் என். நஜ்முல் ஹுசைன் அவர்கள் நூலாசிரியர் ஷஹ்னா ஸப்வான் பற்றிக் குறிப்பிடும் போது,

விடை கொடுத்துச் சிறகடித்தாள் ஷஹ்னா ஸப்வான்..

கவிதை நடைக்குள்ளே சிறைப்பிடித்துத் தொட்டாள் தொடுவான்..

என்று குறிப்பிட்டு நூலாசிரியரின் சில கவிதைகளை நயந்து தனது கருத்துகளைப் பதிவு செய்துள்ளார். நஜ்முல் ஹுசைன் அவர்களின் அணிந்துரையில் குறிப்பிட்டிருப்பது போல எம்மை விட்டும் பிரிந்து சென்ற, அதுவும் இளமையில், அதுவும் திருமணம் முடித்து ஆறே மாதங்களில் இந்த உலகிற்கு விடை கொடுத்த இந்தப் பெண் கவிஞர் ஷஹ்னா ஸப்வான் அவர்களை நினைக்கும் போது உண்மையில் எனது மனதும் கனத்தே போகின்றது மட்டுமல்லாமல் இந்தக் கவிதை நூலினூடாக கவிதை உலகில் நிறையச் சாதிக்க வேண்டும் என்ற தனது ஆசையைப் பதிவு செய்து ஷஹ்னா ஸப்வான் எனது விழிகளிலும் கண்ணீரைத் தேங்க வைத்துவிட்டார்.

"எரியும் நட்சத்திரம்" கவிதைத் தொகுதியின் உள்ளடக்கமானது - எழுத்துலகம், மனதோடு கொஞ்சம், நேசம், குடும்பம் ஆகிய நான்கு உப தலைப்புக்களில் முன்வைக்கப்பட்டுள்ளன. நூலில் இடம்பிடித்துள்ள இவருடைய கவிதைத் தலைப்புகளைப் பொதுவாக நோக்கும்போது காலத்துக்குத் தேவையான, யதார்த்தமான பாடுபொருள்களைப் பிரதிபலிக்கின்ற பல்வேறு வகையான தலைப்புகளில் அமைந்துள்ளது.

"எரியும் நட்சத்திரம்'' ஷஹ்னா ஸப்வானின் கன்னிக் கவிதைத் தொகுதியாகும். இந்த நூலிலுள்ள பல கவிதைகள் இது கன்னிக் கவிதைத் தொகுதி என்பதைப் பறை சாற்றி நின்றாலும்கூட சில கவிதைகள் கவிதைக்கேயுரிய இலக்கணங்களைப் பின்பற்றி கனதியான முறையில் சிறப்பாக அமைந்துள்ளது என்று உறுதியாகக் கூறலாம். அகம் சார்ந்த மன உணர்வுகளைப் பிரதி பலிக்கின்ற கவிதைகளைத் தேடி வாசிப்போர் நிச்சயமாக தர்காநகர் ஷஹ்னா ஸப்வானின் கவிதைகளையும் வாசிக்க முடியும்.

இவர் சில கவிதைகளினூடாகத் தனது மனப்பாரங்களை மொழிபெயர்க்கிறார்.. தனது எதிர்பார்ப்புகள் மற்றும் ஆசைகளையெல்லாம் வெளிப்படுத்தி இருக்கின்றார். அத்துடன் சக மனிதர்கள் மூலமாக தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் பகிர்ந்து கொள்கின்றார். இயற்கை வனப்பையும் கவிதைக் கண்களால் பார்த்து இரசிக்கிறார். சிலவற்றில் வாழ்க்கைத் தத்துவங்களையும் முன்வைக்கிறார். மறுபக்கம் தனது தாயாருக்காக கண்ணீரும் வடிக்கின்றார்.

மொத்தத்தில் தமிழின் சிறப்பு, மானிட அவலம், நாட்டு நடப்பு, அனுபவப் பாடம், இயற்கையின் வனப்பு, போலி முகம், வாழ்வின் யதார்த்தம், ஆன்மீகம், துரோகம், நட்பின் தூய்மை, பெண்மையின் கண்ணியம், உணர்வுகளின் வெளிப்பாடு, தாய்ப் பாசம் போன்ற கருப்பொருட்கள் இவருடைய கவிதைவெளியை வியாபித்து நிற்கின்றன.

இனி இவருடைய கவிதை நூல்களில் விரிந்து கிடக்கும் கவிதைகள் பலவற்றில் சில கவிதைகளை எடுத்து நோக்குவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

பக்கம் 28 இலுள்ள "அடையாளங்கள்" என்ற கவிதை மிகவும் எளிமையான சொற்களால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிப் பிணையப்பட்டுள்ளது. பாமர மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் வாழ்வியல் தத்துவங்களைப் பிரதிபலிப்பதாக இந்தக் கவிதை அமைந்திருக்கிறது.

**வியர்வைத் துளிகள் உழைப்பிற்கான அடையாளங்கள்..**
**பசியும் தாகமும் கஷ்டத்தின் அடையாளங்கள்.**
**நண்பர்கள் நேசத்திற்கான அடையாளங்கள்.**
**காத்திருப்புகள் பொறுமையின் அடையாளங்கள்.**

என்று குறிப்பிட்டு இறுதியாக முகத்தின் சுருக்கங்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் என்று தனது கவிதையை நிறைவு செய்கின்றார்.

பக்கம் 38 இல் அமைந்துள்ள "முகமூடி உலகம்" என்ற கவிதையானது சிலர் அணிந்துள்ள முகமூடிகளைக் கழற்றுவதாகவே அமைந்துள்ளது. மேலும் சுயநலமிகளாக வாழ்கின்ற சிலரின் போலி முகங்களை தோலுரித்துக் காட்டுவதாகவும் இக்கவிதை அமைந்துள்ளது. அத்துடன் மாய உலகின் அற்ப ஆசைகளில் மூழ்கி மனிதத் தன்மைய இழந்து வாழ்பவர்களுக்கு ஒரு சாட்டையடியாக இக்கவிதை அமைந்துள்ளது. கவிதையின் சில வரிகள் இதோ:-

**உண்மையாக சிலரோடு உயிராகப் பழகினாலும்**
**மென்மையாய் சில நேரம் மெதுவாக அணுகினாலும்**
**தன்மையே இல்லாமல் தரமாக மதிப்பதில்லை..**
**வசந்தத்தின் வாசலில் வழிமூட முனிக்கின்றார்..**
**அசைந்திடும் தென்றலுக்கும் அணை போட**
**முயல்கின்றார்..**

பக்கம் 55 இல் அமைந்துள்ள "புன்னகை" என்ற கவிதை மனிதர்களைப் பார்த்துப் புன்னகைக்கவேண்டும் என்பதை மீண்டும் ஒருமுறை நினைவு படுத்துவதாய் அமைந்துள்ளது. புன்னகைக்கக்கூட மறந்து போன அவசரமான ஒரு உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். புன்னகை பற்றிய கவிதையின் சில வரிகள் இவ்வாறு அமைந்துள்ளது.

**மொழிகளால் நொறுக்கப்படாத பொதுமொழி**
**புன்னகை..**
**வார்த்தைகளால் இறுக்கப்படாத வாய்மொழி**
**புன்னகை..**
**உள்ளத்தின் விதைகளை உதட்டில் விரிக்கும்**
**உன்னத மொழி புன்னகை..**
**பல் இல்லாக் குழந்தைக்கும் அழகு புன்னகை..**
**உதடுகளை விரியுங்கள்.. புன்னகை புரியுங்கள்..**

இக் கவிதை புன்னகையின் பரிணாமங்களை எடுத்துச் சொல்வதாகவே அமைந்துள்ளது. புன்னகையே ஒரு மனிதனின் அழகுக்கு இன்னும் அழகு சேர்க்கிறது. இறுக்கமான சூழ்நிலைகளை இலகுவாக்குகிறது.

ஹிஜாப் எனது கண்ணியம், விடைபெறும் ரமழான், தியாகத் திருநாள், வருடத்திற்கொரு முறை பூக்கும் ரமழானே போன்ற ஆன்மீகம் சார்ந்த கவிதைகளையும் இந்த "எரியும் நட்சத்திரம்" கவிதை நூலில் காணலாம்.

பக்கம் 69 இல் அமைந்துள்ள "தியாகத் திருநாள்" என்ற கவிதை நபி இப்றாஹீம் (அலை) அவர்களது தியாகத்தை நினைவுபடுத்துவதாய் அமைந்துள்ளது.

தியாகத்தின் மகத்துவத்தை உணர்த்தும் இப் பெருநாள்..

**நம் தியாகத் திருநாள் ஹஜ்ஜுப் பெருநாள்..**
**உலகெங்கும் ஒளியேற்றும் தியாகத் திருநாள்..**
**குர்பானி கொடுத்திடும் சங்கைமிகுத் திருநாளாம்..**
**இப்ராஹிம் நபியின் மகத்தான தியாகத்தை**
**உலகெங்கும் நினைவூட்டும் பெருநாள் இதுவாம்..**

பக்கம் 75 இல் அமைந்துள்ள "மழை நாள்" என்ற கவிதையானது மழையை இரசிக்கும் கவிஞரின் மனதைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. மழையை இரசிக்காத கவிதையுள்ளம் இருக்க முடியாது. மழை தரும் இன்பத்தையும், அழகியலையும் வார்த்தைக்குள் உள்ளடக்கும் திறமை கவிஞர்களுக்கே உரியது. "மழை நாள்" என்ற கவிதையின் சில வரிகள் இதோ:-

**மழை வரும் நேரம்**
**மனதில் இன்பம் ஊறும்**
**சாலை எங்கும் நீரும்**
**சாகசம் காட்டி ஓடும்..**

**மழையை இரசித்தே எனக்கும்**
**கவி கோர்க்கத் தோனும்..**
**நித்திரா தேவி என்னை அழைக்க**
**மை கக்கி, எழுத்துச் சிக்கி,**
**அடிக்கும் காற்றில்**
**என் வெள்ளைக் காகிதம்**
**சிறகு முளைத்துப் பறக்கும்..**

பக்கம் 92 இல் உள்ள "நம்பிக்கையுடன் இவள்" என்ற கவிதையில் உள்ள இரண்டு வரிகள் கவிஞர் என்னுடன் பேசுவதாகவே என் மனதுக்குத் தோன்றுகின்றது. அதாவது அந்தக் கவிதையில் வருகின்ற இரண்டு வரியான "தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்" என்ற வரி கருத்தொன்றைத் தொக்கி நிற்பதாக எனக்கு நினைக்கத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றுகின்றது. அதாவது "தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். எனது கவிதைகள் பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் சுதந்திரமாகச் சொல்லுங்கள். அது உங்கள் சுதந்திரம்" என்று ஷஹ்னா ஸப்வான் எம் அனைவருக்கும் சொல்வ தாகவே நினைக்கத் தோன்றுகின்றது.

இந்த நூலின் கடைசிப் பகுதியில் தனது தாயாருக்காகவும் "தாய் மடியைத் தேடுகிறேன்", "நீ இல்லாத என் உலகம்", "நான் தவிக்கின்றேன் தாயே" ஆகிய மூன்று கவிதைகளை இவர் எழுதியுள்ளார்.

97 இல் அமைந்துள்ள "நீ இல்லாத என் உலகம்" என்ற கவிதை என் மனதை மிகவும் பாதித்த ஒரு கவிதையாகவே இருக்கின்றது. அதற்குக் காரணம் எனது இருபது வயதுகளில் எனது தாயாரை இழந்த, அந்தத் துயரம் என் மனதை இன்றும் வதைத்துக் கொண்டே இருக்கின்றது. ஷஹ்னாவின் இந்தக் கவிதை என்னை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் எனது தாயாரின் நினைவுகள் மற்றும் எனது தாயாரைப் பிரிந்த மனத் துயரங்களை மொழிபெயர்ப்பதாகவே அமைந்துள்ளது. இக்கவிதையின் சில வரிகளைப் பார்ப்போம்.

**பாசமுடன் நீ அளித்த உந்தன்**
**ஒற்றைப் பிடிச் சோற்றுகாக**
**இப்பொழுதும் நான் ஏங்குகிறேன் உம்மா..**
**நெற்றி வியர்வை சிந்திப் பரிமாறும்**
**உந்தன் கைப்பக்குவ உணவு**
**நானறிந்த அமுதத்தின் அசல்தான்**
**இருந்தும் தவறவிட்டேன் பல நாட்கள்..**

இப்படி எத்தனையோ தொலைத்துவிட்ட மனக் கவலைகள் எனக்கும் உண்டு. இங்கே இந்தக் கவிதையோடு என் மனம் மிகவும் ஒன்றித்துப் போய்விட்டது.

இந்தக் கவிதை நூலை வாசிக்கும் அனைவரும் மறைந்த கவியாளுமை ஷஹ்னா ஸப்வானுக்காக கரமேந்திப் பிரார்த்திப்பார்கள் என்பது உறுதி. எல்லாம் வல்ல அல்லாஹ் இவருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் என்ற மேலான சுவனத்தை வழங்குவானாக என்று நானும் இரு கரமேந்திப் பிரார்த்திக்கின்றேன்!!!

○○○

# பனியின் கீழ் தோனி

**இதற்கு முதல் இங்கு வந்திருக்கிறோம்**
**ஆனால் அடிக்கடியல்ல சில நேரங்களில்**
**நிலத்தில் நீல நிற பனி விழுகிறது**
**நகரமோ தொலைவில் உள்ளது**
**மனிதர்களைக் காணவில்லை.**

தோட்டத்தில் தரையில்
யாரும் நடக்கவில்லை
காலடியில் உலர்ந்த பனிச் சிலை
ஒரு அநாமதேய மயக்கமான
கல் பெஞ்ச்
ஓடும் நதி கருப்புப் பனி
பனிக்கடியில் ஒரு குரல்
எங்கோ பாடுவதற்கு
போராடும் பறவையா?
மீண்டும் மீண்டும் கண்ணின்
ஒரு தொனி.

நாம் இதுவரையில் தவறான
இடத்தில் வாழ்ந்தோம் ஆனால்
இப்போது மீண்டும்
வாழ்க்கையைப் பார்க்கிறோம்
வெளியில் நீல நிறப் பனியினால்
மூடப்பட்டிருக்கும்
பாழடைந்த வில்லோ?
பனிக்காடுகளின் கீழ் ஒரு
பறவையின் வரலாற்றைக்
குறிப்பு ஒரு செயல்திறன்.

**- சீன் ஒப்ரியன்**
**இங்கிலாந்தின் பிரபல தற்கால கவிஞன்**

**தமிழில்**
**கலாபூஷணம் மானவல்லை**
**எம்.எம்.மன்ஸூர்**

**(புராக்கிரம கொடிதுவக்குவின் சிங்கள மொழிபெயர்ப்பில் இருந்து...)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# கடைசிப் பிறவி

## சுந்தரிமணியன்



அந்திவானச் சிவப்பில் சூரியனின் வடிவம் நெருப்புப் பந்து போல தகித்துக்கொண்டிருந்தது. பறவைகள் எல்லாம் தங்கள் கூடுதேடிப் பறந்து கொண்டிருக்க தமிழ்நதி மட்டும் நிம்மதியின்றித் தவித்துக்கொண்டிருந்தாள். தனது கணவன் மலரன்பன் கட்டிலில் படுத்துக்கிடக்க மெலிந்து போன அவனது உருவத்தைப் பார்த்தபோது கண்க ளிலிருந்து தன்னையும் அறியாமல் பீறிட்ட கண்ணீரை அடக்க வெகுபிரயத்தனம் செய்ய வேண்டியிருந்தது.

தமிழ்நதி திருமணத்தின்போதே இருபத்தாறு வயதை எட்டிவிட்டாள். திருமணத்திற்கே ஏகப்பட்ட தடைகள் ஏற்பட்டு, கடைசியில் ஒரு வழியாக மலரன்பனைக் கரம்பிடித்தாள். மலரன்பன் பெயருக்கேற்ப மென்மையானவன். நல்ல பண்புகளை உடையவன். கெட்ட பழக்க வழக்கங்கள் இல்லாதவன். அன்பில் தமிழ் நதியை வீழ்த்தியவன்.

திருமணமான சிறிது நாட்களிலேயே சோர்வுடன் காணப்பட்ட அவன் எதிலுமே பற்றின்றி காணப்பட்டான். சரியான உணவு உண்ணாமல் வயிற்றுவலியுடன் துடித்தவனுக்கு நோய் சரியாக அவளது மாமியார் பக்கத்தில் உள்ள அம்மன் கோவிலுக்குச் சென்று மந்திரிக்கச் சொன்னாள். தமிழ்நதிக்கு இறைப்பற்று உண்டே தவிர இந்த மாதிரி மூடநம்பிக்கைகளில் நம்பிக்கையில்லாவிட்டாலும் பெரியவர்கள் பேச்சைத் தட்டமுடியாது என்பதால் மலரன்பனைக் கோவிலுக்குக் கூட்டிச் சென்றாள். மந்திரித்த மறுநாள் நன்றாக இருந்த மலரன்பன், அடுத்த நாள் சுணங்கிப் போனான்.

அடுத்த வாரம் மாமியார் மலரன்பனுக்குச் சொந்தக்காரர்கள் செய்வினை வைத்து விட்டார்கள் என ஜோசியர் சொன்னதாகச் சொல்லி வயிற்றுவலிக்குத் தொக்கம் எடுத்துவா என்று அனுப்பினார். தொக்கம் எடுக்கச் சென்ற விடத்தில் அவன் வாயிலிருந்து மருந்து உருண்டையாக வெளிவர, தமிழ்நதி மாமியார் சொன்னதுதான் உண்மையாக இருக்குமோ என்று நம்பலானாள். தொடர்ந்து வந்த நாள்களில் மலரன்பன் சரியாகச் சாப்பிடமுடியாமல் திண்டாடினான். வயிற்றுவலியும் சோர்வும் மிகுந்திருந்தது.

கொஞ்சநாள்களில் தமிழ்நதி கர்ப்பமானாள். மாதமாதம் சரியாகக் காண்பித்தும் குழந்தை உண்டாகி 3 மாதங்களில் குழந்தைக்கு இதயத்துடிப்புக் குறைவாக இருந்த காரணத்தால் அபார்ஷன் ஆனது. முதல் குழந்தை என்ற காரணத்தால் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்த தம்பதியர் இருவரும் சோர்ந்துபோனார்கள். இதற்கும் அவளது மாமியார் தமிழ்நதி சரியாக மருத்துவமனையில் செக்கப் செய்யாத காரணத்தால்தான் குழந்தை இறந்துவிட்டது எனப் பழி சொன்னாள்.

தமிழ்நதிக்கு மாமியாரின் பேச்சு கோபத்தை ஏற்படுத்தவே,

"வீட்டில் அடுப்பு எரியாவிட்டாலும் நான்தான் காரணமா? ஆண்கள் எதற்குமே காரணம் ஆகமாட்டீர்களா? தொட்டதற்கெல்லாம் பெண்ணைத்தான் இந்தச் சமுதாயம் குறை சொல்லுமா?" என்று கேட்டாள் தனது கணவனிடம்.

"சரி விடு. அவர்கள் குணம் அப்படித்தான். என்றைக்காவது ஒரு நாள் நம்மைப் புரிந்து கொள்வார்கள்" என்றான்.

வீட்டின் புழக்கடையில் உள்ள புங்கமர நிழலில் அமர்ந்து அங்கிருக்கும் செடிகொடி களையும் பறவைகளின் சத்தங்களையும் கேட்டுக்கொண்டு அமைதியாக இருப்பதன் மூலமே பிரச்சினைகளின் வீரியத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது குறைத்துக்கொள்வாள். அது அவளுக்கான கொஞ்ச நேர ஆசுவாசம் மட்டுமே. மீண்டும் புதுப்பொலிவோடு வீட்டுக்குள் நுழைபவளுக்குப் பிரச்சினைகள் துரத்திப் பிடிக்கும்.

திருமணமாகி ஒன்றரை வருடத்தில் புதுமணத் தம்பதிகள் மகிழ்ச்சியாக இருந்த நாட்களை விட நிம்மதியிழந்து தவித்த நாட்கள்தான் மிகுதியாகவிருந்தது. தமிழ்நதிக்குத் திருமணம் செய்யாமலே இருந்திருக்கலாமோ இது என்னடா வாழ்க்கை என்று எண்ணத்தோன்றும். தான் பிறந்த வீட்டிலும் நாம்தான் உழைத்துப் போட்டுப் பார்க்கவேண்டியிருந்தது. புகுந்த வீட்டிலும் கணவனின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவளே வேலை பார்த்துக் கணவனைக் கவனித்துக் கொள்ள வேண்டிய தாயிற்று.


மாமியாரின் பேச்சைக் கேட்டு கணவனைச் சரிசெய்ய நினைத்தவள், ஒரு கட்டத்தில் பொறுமை யிழந்து தனது கணவனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றாள். மருத்துவமனையில் டாக்டர் செக்கப் செய்து கல்லீரலில் ஏதோ பிரச்சினையிருப்பதாகக் கூறி பயாப்சி செய்ய எழுதிக் கொடுத்தாள். பணப்பிரச்சினையினால் ஜிஹெச்சில் பயாப்சி எடுத்துப் பார்த்ததில் கல்லீரலில் மலரன்பனுக்குக் கேன்சர் வந்திருப்பதாகச் சொன்ன தகவலில் நொறுங்கிப் போனாள் தமிழ்நதி.

அவளுக்கு ஆறுதல் கூறி தாங்கவேண்டிய புகுந்தகம் அவள் கணவன் சரியான வேலையில் இல்லாததால் புறக்கணித்தது. மேலும் தமிழ்நதியின் ஜாதகம் சரியில்லாத காரணத்தால்தான் மலரன்பன் உயிருக்கு ஆபத்து வந்துவிட்டது என்றாள் நாத்தனார் ஜெயா. ஆனால் உண்மையில் திருமணத்திற்கு முன்பே மலரன்பனுக்குக் கல்லீரல் பிரச்சினை தொடங்கிவிட்டது. அவனது தாயின் மூடநம்பிக்கை யாலும் சரியாக வைத்தியம் பார்க்காமலிருந்த காரணத்தாலும் நோய் தீவிரமானது. இதில் அகப்பட்டதென்னவோ தமிழ்நதியின் வாழ்வுதான். மலரன்பனுக்கு ஏற்பட்ட துன்பத்தின் வேதனை ஒருபுறம் என்றால் சொந்த பந்தங்களின் அவச்சொல் மறுபுறம் என எல்லாம் சேர்ந்து தமிழ்நதியின் மனதை உலுக்கின. ஜிஹெச்சிலேயே சிகிச்சையை ஆரம்பித்தவள் கணவனின் உயிருக்காகப் போராடினாள்.

இயல்பிலேயே முரட்டுத்தனமான சுபாவம் கொண்ட தமிழ்நதி, எளிதில் உடைந்து விடும் மனமுடையவள். வெளியில் தன்னைத் தைரியம் உடையவளாகக் காட்டிக் கொள்வாள். எட்டாக்கனியாக இருந்த திருமணம் நடந்தும் வாழ்க்கை எட்டிக்காயாகக் கசந்துபோனது. இப்பொழுதெல்லாம் மருத்துவமனையின் பினாயில் வாசம் வந்தாலே மனது வலிக்கத் தொடங்குகிறது.

தமிழ்நதிக்கு தன்னையும் அறியாமல் மனது திருமணத்திற்கு முந்தைய நினைவுகளில் மூழ்கிப்போனது. ஜோசியர் மணிகண்டன் சொன்னசொல் காதுகளில் ரீங்காரமிட்டது.

"இதுதான் உனக்குக் கடைசிப் பிறப்பு. நீ திருமணம் ஆனாலும் உன் புகுந்தகத்தையும் நீதான்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கணும். மாங்கல்ய பலம் பெருகணும்னா கும்பகோணம் பக்கத்தில் உள்ள கோவிலுக்குப் போய்ட்டு வாங்க" என்றார்.

தனக்கு மாங்கல்ய பாக்யம் தங்காதோ என்ற பயம் அப்பொழுதே ஆரம்பித்து விட்டது. ரெண்டு மூன்று இடங்களில் பார்த்தும் எல்லோரும் பூடகமாக இதையே சொல்ல தமிழ் நதியின் அம்மா அழலானாள். தனக்குத்தான் கணவன் சரியில்லை என்றால் தன் மகளுக்கும் இப்படி ஒரு கஷ்டமா என்று நொந்து போனாள். இறுதியில் ஜோசியர் சொன்ன பரிகாரங்களைச் செய்து திருமணம் முடித்துவைத்தாள்.

இப்பொழுதெல்லாம் தமிழ்நதிக்கு அந்த ஜோசியர் சொன்னது உண்மைதானோ தான் ஏன் இவ்வளவு துன்பப்படுகிறோம்? தனக்கு இதுதான் கடைசிப்பிறப்போ, நோயிலிருந்து இவரை மீட்டெடுத்து விட முடியுமா? எனப் பலவாறு சிந்தனைகள் ஓடலாயின. திருமணத்திற்கு முன்பே அவருக்கு நோய் இருந்திருக்கிறது. இதற்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்? என எண்ணவோட்டங்கள் மனதிற்குள் கும்மாளமிட்டன.

தன்னை மனதளவில் தேற்றியவள் எது நடந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவத்தை வளர்த்துக்கொண்டாள். கிட்டத்தட்ட ஆறுமாதங்கள் உருண்டோடின. ஒரு கால கட்டத்திற்கு மேல் மருத்துவமனையில் நோயாளிகள் முனகும் சத்தம் அவளுக்குப் பழக்கமாகி விட்டது. முன்னெல்லாம் மலரன்பனைப் பார்த்தாலே கண்களில் எட்டிப்பார்க்கும் கண்ணீர் இப்பொழுது வருவதில்லை. உதட்டில் புன்னகையை அணிந்து வலம்வரத் தொடங்குகிறாள்.


கிட்டத்தட்ட ஓராண்டுகள் கடந்த நிலையில் மலரன்பன் மெல்ல மெல்ல குணமடைந்து பழைய வாழ்க்கைக்குத் திரும்பினான். தமிழ் நதியும் மலரன்பனும் மகிழ்ச்சியாகத் தங்கள் வாழ்க்கையை, இளமையை மீட்டெடுக்கத் தொடங்கினர். இருந்தாலும் மலரன்பன் உடல் நிலை சரியில்லாமல் இருந்தபோது ஆதரவு கொடுக்காத புகுந்தவீட்டினரின் பண்புகள் மலரன்பனுக்கும் தமிழ்நதிக்கும் உறுத்தலைத்தர வீட்டைவிட்டுத் தனிக்குடித்தனம் செல்ல முடிவு செய்தனர்.

தனது கணவருடன் தனிக்குடித்தனம் சென்றவள் அவன் உடல்வலிமைபெற ஏற்ற உணவுகளோடு அன்பையும் கலந்து கொடுத்தாள். மலரன்பன் புத்துணர்ச்சியோடு புதுவேலையிலும் அமர்ந்தான். இவர்களை வெறுத்த மாமியாரும் தமிழ்நதியிடம் வந்து ஒட்டிக்கொண்டாள். முல்லைமலர்ப் பற்கள் புன்னகையோடு முகிழ்க்க தமிழ்நதி ஒரு நாள் நல்லசேதி சொன்னாள். மலரன்பன் முகத்திலும் மலர்ந்து அரும்பியது நகைப்பு. குழந்தைக் கனியைப் பெறப்போகும் நிம்மதியில் இருவரும் மகிழ்ந்தனர்.

○○○

## கண்ணீர் அஞ்சலி

### கவிஞர் வி.கந்தவனம் அவர்களின் மறைவு



"கவியரங்கத்திற்கு ஒரு கந்தவனம்" என்று அடைமொழி கொடுக்கப்பட்டு அழைக்கப்பட்ட கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் தனது 90ஆவது வயதில் மார்ச் 11ம் நாள் ரொறான்ரோவில் காலமானார்.

இவர் சாவகச்சேரி நுணாவில் விநாயகர் மற்றம் சின்னம்மா தம்பதியினரின் இளைய மகனாவார். மாத்தளை சென். தோமஸ் கல்லூரி, வசவளான் மத்திய மகாவித்தியாலயத்திலும் ஆசிரியராகவும், முல்லைத்தீவு யோகபுரம் மகா வித்தியாலயம் மற்றும் அளவெட்டி அருணோதயக் கல்லூரி, வசவளான் மத்திய கல்லூரியிலும் அதிபராகக் கடமையாற்றியவர். பின்னர் சில ஆண்டுகள் நைஜீரியாவில் ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். கனடாவின் தேசிய கீதத்தை தமிழாக்கம் செய்து தமிழ் மாணவர்களால் தமிழில் இசைக்க வழி செய்தவர் இவரே.

கவிஞர் வி. கந்தவனம் அவர்களுக்கு ஞானம் தனது கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றது.

ஞானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

**அநாகரிகத்தின் உச்சக்கட்டம்**

இந்நாட்டின் விதி என்பது, பேரின வாதத்தினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது என்பதைப் பல தடவைகள் கண்டிருக்கிறோம். நாட்டின் பேரினவாதிகள், தமது முட்டாள்தனமான பேரினவாதத்துக்கு, அகிம்சை நெறியாக அறிமுகப்படுத்தப்பட்ட பௌத்தத்தையும் துணை யாகக் கொண்டுள்ளமை வெட்கக் கேடானது. நமது பேரினவாதிகளின் அறியாமை கலந்த முட்டாள்தனமே நாட்டின் இன்றைய நிலை முழு வதற்கும் காரணம். மதம், அரசியல், அதிகாரம், சமூகம் முதலான அனைத்து மட்டங்களிலும் பேரினவாதம் ஆழ வேரூன்றித் தழைத்துச் செழித்து வளர்ந்து வந்துள்ளது.

இத்தகைய பேரினவாதச் செயல்முறையில், தொல்பொருள் திணைக்களமும், வனஜீவராசிகள் திணைக்களமும் தமது பெரும்பான்மை நேரத்தைச் செலவிட்டு வருகின்றன. இவை இரண்டும் நாட்டுக்கு அவசியமான தமது துறைசார் முயற்சிகளை விட்டுவிட்டு, தமிழர் பாரம்பரிய இடங்களை எல்லாம் தேடித்தேடி அபகரிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகின்றன. மிகவும் தான்தோன்றித்தனமான, கேவலமான, அருவருக்கத்தக்கதான முறை களில் இவை செயல்பட்டுவருகின்றன. இவற் றுக்கு, இயல்பாகவே பேரினவாதத்தில் ஊறித் திளைத்திருக்கும் காவல்துறை எப்போதும் பக்கபலமாக இருந்துவருகிறது. பேரினவாதச் சிந்தனையோடு ஒவ்வொரு அரசிலும் அங்கம் வகிக்கும் சில கேடுகெட்ட மந்திரி பிரதானி களும், அரசியல்வாதிகளும், அதிகாரத் துர்ப் பிரயோகத்தை அவசியமாகக் கருதும் அதிகாரி களும், இவர்கள் சொல்வதையே வேதம் எனக் கருதிப்பழகி, அறியாமையில் மிதக்கும் மக்களும், இவர்கள் அனைவருக்கும் தர்மத்தை உபதேசித்து, நல்வழி காட்டவேண்டிய மதகுருமார்களில் ஒருசாராரும் பேரினவாதப் பெரும் தீயை நாட்டில் உற்பத்தி செய்து, தமது வயிற்றை வளர்த்துவருகின்றனர். அநியாயத்தையே நியாயம் என வாதிக்கும் மிக மோசமான அராஜகர்கள், இவர்கள்.

இந்நாட்டின் பேரினவாதக் கொடும் செயலுக்கு அண்மைய சாட்சியாக விளங்குவது, வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயச் சிவராத்திரி நிகழ்ச்சியாகும். இந்துக்களின் முக்கிய இறைவழிபாட்டு நாளாகிய சிவராத்திரி தினத்தில் அக்கோயிலில் வழிபாடு இயற்றிக் கொண்டிருந்த தமிழ்மக்கள் மீது, தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையுடன் காவல் துறை நடந்துகொண்ட முறை, காட்டு மிராண்டித் தனத்தின் உச்ச எல்லையாக விளங்கியது. மனித நாகரிகத்துக்கே முழு இழுக்குத் தேடும் முறையில், மிகமிகக் கேவலமாக, அருவருப்பாக அது நடந்துகொண்டது. அத்தோடு, இறைவழிபாடு செய்யவந்த பக்தர்கள்மீது பொய்வழக்கும் போட்டு, காவல்துறை தன்னைத் தானே அவமானப்படுத்திக்கொண்டது. இலங்கையில் நீதி இன்னமும் நிலைத்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக, காவல்துறை தொடுத்த, வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

இலங்கைப் பேரினவாதம் எதிர்காலத்திலும் இதுபோன்ற அடாவடிச் செயல்களில் ஈடுபடு வதற்குத் தயங்காது. எனவே, வெடுக்கு நாறிமலை சிவராத்திரி தினத்தன்று காவல்துறை நடந்து கொண்ட அநாகரிக விடயம் தொடர்பாக விசாரணைக்குழு அமைத்து, சம்பந்தப் பட்டவர்கள் மீது தேவையான நடவடிக்கை கள் எடுக்கப் படவேண்டும். எதிர்காலத்தில் தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் போன்றனவற்றின் அனுசரணை யுடன் காவல்துறை காட்டு மிராண்டித் தனமாகச் செயல்படாதவாறு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக நாட்டின் முக்கிய சபையில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த வடக்கு, கிழக்கு, மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகள் தமது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். அவர்களோடு எதிர்க்கட்சி முக்கியஸ்தரும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த பிறிதொரு பெரும் பான்மை இனப் பிரதிநிதியும் கலந்துகொண்டு, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியமை வரவேற்கத்தக்கது. வழக்கம் போல அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் சபையில் பேரினவாத உளறுவாயர்கள் உரத்த குரல்களில் குரைத்துக்கொள்ளவும் தவறவில்லை. நாடு இவர்களை எல்லாம் கண்டுகொள்ளாமல் விட்டால், காலப்போக்கில் இவர்கள் வாலைச் சுருட்டிக்கொண்டு படுத்து விடுவார்கள்.

### தமிழுக்கு ஒரு சிறந்த பங்களிப்பு

ஈழத்து இலக்கியவாதிகளில் மலரன்பனுக்கும் (பெருமாள் ஆறுமுகம்) தனித்துவமான ஓர் இடமுண்டு. இவர், இலங்கையின் இன்னொரு சிறந்த சிறுகதை எழுத்தாளரான மாத்தளை வடிவேலனின் மூத்த சகோதரர். மலரன்பன் சிறுகதை, நாவல், மெல்லிசை, வானொலி நாடகம், மொழிபெயர்ப்பு எனப் பலதுறைகளிலும் ஈடுபாடு கொண்ட ஒருவர். கண்டியில் நடைபெற்ற அவரது கோடிச்சேலை சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவிலும், மாத்தளையில் இடம்பெற்ற அவரின் மகாவலியே மாநதியே என்ற மெல்லிசை நூல் வெளியீட்டு விழாவிலும் நான் கலந்துகொண்டிருக்கிறேன். மலரன்பனின் மகாவலியே மாநதியே என்ற நூலுக்கும், சிங்கள நாவலொன்றின் மொழிபெயர்ப்பாகிய மாத்தளைப் போராட்டத்தின் ஓர் உபகதை என்ற நூலுக்கும் நான் அணிந்துரைகள் வழங்கியிருக்கிறேன்.

இவரது சிறுகதைகள் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு, நூல்களாக வெளிவந்துள்ளன. அவ்வகையில், மலரன்பன் சிங்கள வாசகர் மத்தியிலும், ஆங்கில வாசகர் மத்தியிலும் கூடப் பிரபலமானவராக விளங்குகிறார். இவரது மொழிபெயர்ப்புத் திறனும் விதந்து குறிப்பிடத்தக்கது. சிங்களத்தில் வெளிவந்த பியதாச வெலிகன்னகேயின் நாவலொன்றை அவன் ஓர் அபூர்வச் சிறுவன் என்ற பெயரிலும், விமலா ஆரியரட்னவின் நாவலொன்றை மாத்தளைப் போராட்டத்தின் ஓர் உபகதை என்னும் தலைப்பிலும் மலரன்பன் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இந்த இரண்டு மொழிபெயர்ப்பு நூல்களும் அரச தேசிய சாகித்திய விருது உட்படப் பல விருதுகளையும் பெற்றுள்ளன.

மலரன்பனின் அண்மையில் வெளிவந்த மொழிபெயர்ப்பு நூலான கொலுஷா என்ற பிறமொழிச் சிறுகதைகளின் தொகுப்பு நூல், தமிழுக்குச் சிறந்ததொரு பங்களிப்பாக விளங்குகிறது. ஆங்கிலத்தில் இருந்து சிங்களத்தில் சாலிய குணவர்தன மொழிபெயர்த்த சிறுகதைகளில் பத்துக் கதைகளையும், தாமே சிங்களத்தில் இருந்து மொழிபெயர்த்த நான்கு சிறுகதைகளையும் உள்ளடக்கி, அவர் இந்தத் தொகுப்பை வெளிக்கொணர்ந்துள்ளார். ரஷ்ய எழுத்தாளர்களான மக்சிம் கோர்க்கி, லியோ ரோல்ஸ்ரோய், அன்ரன் செக்கோவ் ஆகியோரின் மூன்று கதைகள் இடம்பெற்றுள்ளன. துருக்கி எழுத்தாளர் சிவ்தெத் குத்ரெத், நைஜீரிய எழுத்தாளர் சினுவா ஆச்சுபே, பிரெஞ்சு எழுத்தாளர் மொப்பசான், உருது எழுத்தாளர் பிரேம்சந்த், வங்காள எழுத்தாளர் சத்திய ஜித்ரே, ஹிந்தி எழுத்தாளர் சம்புநாத் வர்மா, மலையாள எழுத்தாளர் கமலாதாஸ் ஆகியோரின் வெளிநாட்டுச் சிறுகதைகள் இத்தொகுதியில் உள்ளடங்குகின்றன. இவற்றோடு பிரபல சிங்கள எழுத்தாளர்களான ஜி.பி. சேனநாயக்க, தெனகம சிறிவர்தன, கபிலகுமார காலிங்க, காமினி நிஸ ாந்த கருணாரத்ன ஆகியோரின் சிறுகதைகளும் இந்நூலை அணிசெய்கின்றன. ஒவ்வொரு படைப்புமே தன்னளவில் நிறைவு பெற்றதாக விளங்குகின்றது. மலரன்பனின் எழுத்தாற்றல், அவை மொழிபெயர்ப்புக் கதைகள் என்று தோன்றாதவாறு வாசகரை நகர்த்திச் செல்கிறது.

பிறமொழிப் படைப்புகளைச் சிங்கள மொழியில் கொண்டுவரவேண்டும் என்ற ஆர்வம், காரணமாக, உலகின் நவீன இலக்கியப் படைப்புகள் பல சிங்களத்தில் மொழிமாற்றம் பெற்று வந்துள்ளன. தமிழில் அந்த அளவுக்கு முயற்சிகள் குறைவாகவே இருக்கின்றன என்ற விடயத்தை, இந்நூலுக்குச் சிறப்பானதோர் அணிந்துரை வழங்கிய மு. நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். அவ்வகையில், மலரன்பனின் இந்த முயற்சி முன்விழுந்து பாராட்டத்தக்கது. இத்தகைய நூலை வெளிக்கொணர்வதில் ஆர்வம் காட்டிய எச். எச். விக்கிரமசிங்கவும் நமது பாராட்டுக்கும், நன்றிக்கும் உரியவர். நூல்கள் பொதுவாக அச்சுப் பிழைகள், எழுத்துப்பிழைகளுடன் வெளிவரும் இக்காலத்தில், அவ்வாறான குறைகள் இன்றி இந்நூல் வெளிவந்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகிறது.

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் மறக்கமுடியாத, மறைக்கமுடியாத பேராளுமைகளுள் ஒருவராக விளங்கும் மலரன்பனிடம் இருந்து இன்னமும் நிறைய நாம் எதிர்பார்க்கின்றோம். அவரது சொந்த ஆக்க இலக்கிய முயற்சிகளும், மொழிபெயர்ப்பு முயற்சிகளும் தமிழை மேலும் செழுமைப்படுத்தட்டும்.

○○○


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாபூஷணம் கே.பொன்னுத்துரை**

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்



## தமிழியல் ஆய்வகம் மாதந்தோறும் நடாத்தும் கருத்தரங்கு




கொழும்பில் இயங்கி வரும் தமிழியல் ஆய்வகம் மாதந்தோறும் கடைசி சனிக்கிழமைகளில் பல்வேறு தலைப்பிகளில் கருத்தரங்களை நடைத்தி வருகிறது.

கடந்த 23.03.2024 அன்று கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் "சமூக மேம்பாடும் பெண்களும்" என்றத்தலைப்பில் ஆய்வாளர் தெ. மதுசூதனன் நெறிப்படுத்தில் நடைபெற்றது.

ஊடகவியலாளர் சூரியகுமாரி ஸ்ரீதரன் அச்சு ஊடகத்தினை மையமாகக் கொண்டு ஈழத்துப் பெண்களின் வகிபாகத்தினைக் கண்டறிதல். என்றத் தலைப்பிலும், சட்டத்தரணி சபான குல் பேகம் இலங்கையின் முஸ்லிம் திருமணச் சட்டம் பெண்களின் மீது செலுத்தும் தாக்கம். என்ற தலைப்பிலும், ஆய்வாளர் பூங்கோதை தங்கமயில் ஈழத்துத்தமிழ்ச் சூழலில் பெண்நிலை இயக்கம்,சிந்தனை- கல்வி-செயற்பாடுகள் என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

●●●

---

# வசந்தம் பெருகும் ஞானமே!

முந்நூறு என்ற இலக்கை
தொட இருக்கும்
முத்தமிழ் இதழ், ஞானமே!
மூத்தோர் வளர்த்த தமிழை
முனைப்போடு வளர்க்கின்றாய்,
அகநானூறுக்கு பிற்பாடு அகத்தமிழரின்
வீரத்தை பறை சாற்றி இருக்கின்றாய்
மலை முகடுகளிலே சிறு ஊற்றாய்
ஊற்றெடுத்த நீர்க்குமிழி,
காட்டாறு போல கடந்து
இந்து சமுத்திரத்தை அடைந்த ஞானமே!
திரைகடல் ஓடி தமிழினத்தின்
மகத்துவத்தை கூறும் சான்றாய்
திகழ்கின்றாய், ஞானமே!
நீ சிசுவாக பிரசவிக்கும் போது
உன்னருகே நானிருந்தேன்.
உனக்கு ஞாபகம் இருக்கிறதா?
தெரியவில்லை - இன்று
உன் வளர்ச்சியை கண்டு
வியக்கின்றேன்.
வானத்தை தொட்டு உன்னை
வாஞ்சையோடு பற்ற
நினைக்கின்றேன்.
வளர்க... வசந்தம் பெறுக!......

**– இரட்டைப்பாதை**
**ஆறுமுகம் சந்திரமோகன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் பேசுகிறார்

ஞானம் நான் தொடர்ந்து வாசிக்கும் சஞ்சிகை. கலை இலக்கியச் சஞ்சிகை என்றாலும் எனக்கு வாசிப்பதற்கான சமூக, உளவியல் விடயங்களும் தொடரந்து வரும்.

விசேடமாக ஒவ்வொரு இதழிலும் பேராசான் சபா.ஜெயராசாவின் கட்டுரை முதலில் என்னை வாசிக்கத் தூண்டும். அடுத்து ஆசிரியர்பக்கம் தொடர்ந்து ஏனையவை என் வாசிப்பு தாகத்தினைத் தீர்க்கும்.

284 இதழில் ஆய்வு முன் மொழிவு எழுதுதல் தொடர்பான சண்முகலிங்கம் அவர்களின் ஆராய்ச்சி நெறிமுறைகள் தொடர்பான அருமையான கட்டுரையை முதலில் வாசித்தேன்.

பின்னர் **தலைமழிப்பான் ஃபெங்** என்ற மொழிப்பெயர்ப்பு கதையை வாசித்தேன். திரும்பத் திரும்ப வாசித்தேன் உடனே சுமார் 70 பேருக்கு அதனை படமெடுத்து அனுப்பி வைத்தேன்.

அனுப்பிவிட்டு இக்கதையை மொழிபெயர்த்தவரை தேடினேன். என்ன ஆச்சரியம் அவர் எனக்கு அருகில் அமர்ந்திருந்தார்.

என்ன அற்புதமான தருணம்.

மொழிபெயர்த்த சு.முரளிதரன் அவர்கள் எனக்கு முன்னரே அறிமுகமானவர். ஆனால் அவரது மொழிபெயர்ப்புக்கான தேடல் என்னை பெரிதும் கவர்ந்தது.

திரும்ப திரும்ப வாசிக்கத்தூண்டும் இப்படைப்பினை வெளிட்டமைக்காக ஞானம் ஆசிரியரக்கு என் பணிவு.

**– க.சுவர்ணராஜா, வவுனியா.**

●●●

ஞானம் 285 கிடைத்த மகிழ்ச்சி. படைப்புகள் அனைத்தும் பாராட்டத்தக்கன.

ஞா.பாவின் அட்டை “பேசும் நாயணங்கள்“ அபாரம். தரமாக தகவல்கள் - வரலாற்றுப் பதிவுகள்.

ஆசிரியர் பக்கம், மலைநாட்டு தலைவர்கட்கு ஒரு உள்ளார்ந்த வேண்டுகோள்,

“சயந்தனின் ஐமிச்சங்கள்” இதுவரை எமக்கு விளங்காத எம்முடன் உள்ள தாவர இயல்கள். எப்போதும் புதுமைகளைப் புரிய வைக்கும் ஆசி. கந்தராஜா அவர்கட்கு நன்றி. “மானிடரிலிருந்து விலகி” செல்வி அவர்கள் சொல்லும் செய்திகள், இப்போதுதான் இதயத்தை தொடுகின்றன. தீபச்செல்வன் தமிழ்த்தேசியத்தின் தரமிக்க முத்து. தம்பி அலெக்ஷன் அழகாக விபரித்திருக்கிறார். நன்றி.

“வளரி“ மனதை அள்ளிக் கொண்டது. மனித உடலுள் உள்ள மனம், அறிவு என்ற இருவேறு துறைகளில் அறிவு மயக்கமடையும்போது மனம் உணர்ச்சியால் உந்தப்படுகிறது. தவறுகள் தாமதமாகவே நடக்கின்றன. கட்டுப்பாட்டை இழந்த மனத்தினை காமம் காவு கொண்டு விடுகிறது. சுதாகர் அவர்கள் அற்புதமாக வடித்திருக்கிறாளர். பாராட்:டுக்கள். வசந்தியின் ரசனைக்குறிப்பு மூலநூலை மூச்சுவிடாமல் படித்தது போன்றிருந்தது.

அடுத்து வந்த கோகிலா மகேந்திரனின் நூல் பற்றிய பார்வை பாராட்ட வைக்கிறது.

“வீடு அல்லது விட்டிருத்தல்“ தலைப்பு தலையை சுற்ற வைத்தது. படித்து முடித்தபோது..... பாராட்டாக மலர்ந்தது. போதைப்பொருள் வைத்திருப்பது தண்டனைக் குற்றமெனின் சமூகத்தைப் பாதுகாக்கும் இந்த தற்குறிச் செயல்கள் எப்படி விட்டு வைக்கப்படுகின்றன.!

நாவலரின் சமூகப்பணி ஒரு தனி மனிதப் போராட்டத்தின் ஆளுமை, ஆதீனங்கள் அவரை விலைக்கு வாங்க முனைந்தன என்ற கட்டுரையாளரின் குறிப்பு வரவேற்கத்தக்கது. அந்த எண்ணங்களோ அவரை, களங்கப்படுத்தப் பார்த்தன. அதிலிருந்து அவர் தப்பியது ஈழத்தமிழரின் பெரும்பேறு எனலாம்.

**– மா. குலமணி, நயினாதீவு.**

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1903ஆம் ஆண்டு விவேகபாநு என்கிற தமிழ்நாட்டு மாதாந்த பத்திரிகையிலே 'கள்ள நாணயங்கள்' என்னும் தலைப்பிலே திகைப்புத்தரும் சில செய்திகளைக் காணமுடிகின்றது. அச்செய்தியின்படி, மூன்று மணித்தியாலங்களில் நான்கு கள்ள நாணயங்களை உருவாக்கும் திறமையுள்ள ஏறத்தாழ 2000 நபர்கள் தமிழ்நாட்டிலே இருந்துள்ளதாக 1903ஆம் ஆண்டு அடையாளம் கண்டுள்ளார்கள். இவர்கள் தாங்கள் உருவாக்கிய 'கள்ள நாணயங்களை' தங்களைச்சார்ந்த சிறுவர்களின் மூலமாக மாற்றுப் பணக் கைமாறல்களை மேற்கொண்டு மக்களிடம் சேர்த்துவிடுவார்களாம். அத்துடன் திருவிழாக் காலங்களில் இந்தச் செயற்பாடு மிகுந்த அளவிலே நடைபெறுமாம். இவர்கள் எப்போதும் தங்களுடன் கள்ள நாணயங்கள் செய்யப் பயன்படும் உபகரணங்களைக் கொண்டு செல்வார்களாம்.


## கள்ள நாணயங்கள்.

கள்ளநாணயங்கள் நமது நாட்டில் இப்போது அதிகமாய் வ
ழங்குகின்றதென்பது தெரிந்தவிஷயமே. அந்நாணயங்கள் எவ்வே
மாகாணத்திலிருந்து நமது நாட்டுக்கு எப்படியோ வந்து
சேர்ந்துவிடுவதாகச் சொல்லிக்கொள்ளப்பட்டாலும் அந்நாணயங்கள்
நமது நாட்டிலேயே அத்தொழிலைச் சாமர்த்தியமாய்ச்செய்யக் கற்றி
ருக்கும் சிலரால் செய்யப்பட்டும் வழங்குகின்றன.

1903ஆம் ஆண்டு மார்ச் மாதம் விவேகபாநு பத்திரிகை - 'கள்ள நாணயங்கள்' கட்டுரையின் ஒரு பகுதி - சுதேசமித்திரன்

ஒல்லாந்தர்களுடன் இரண்டாம் விக்கிரமராஜசிங்கன் செய்த கண்டி ஒப்பந்தத்திலே (கி.பி. 1638) கள்ள நாணயங்கள் பற்றிய ஒரு ஒப்பந்தப் பகுதி இருப்பதை இவ்விடத்திலே ஞாபகப்படுத்தவேண்டும். ஒப்பந்தத்தின் 14ஆவது பிரிவின்படி 'ஒல்லாந்த அரசின் அனுமதி இல்லாமல் நாணயங்களை உருவாக்குதலோ, நாணயங்களை பயன்பாட்டில் விடுதலோ, கள்ள நாணயங்களை உருவாக்குதலோ சட்டப்படி குற்றம்' என்று காணப்படுகின்றது. (Section 14 of the treaty contains a multitude of rules regarding the use of money. According to the agreement, unless sanctioned by the King or the Dutch government, the acts of printing, producing publicizing, minting counterfeit coins or circulation was deemed illegal)

இந்த 'கள்ள நாணய' செய்திகள் ஒருபுறம் இருக்க, பண்டைய நாணயங்களுக்குக் காணப்பெறும் 'மவுசு' காரணமாக, 'போலி பண்டைய நாணயங்களை' உருவாக்கும் 'தொழில்' இலங்கை உட்பட பல நாடுகளில் பரவலாக நடைபெற்று வருகின்றது.





இங்கு காட்டப்பட்ட படங்கள் இணையத்திலிருந்து பெறப்பட்டவையாகும். இலங்கையின் காலிக் கோட்டைப் பகுதியிலே ஒருவர் இலங்கையின் 'பண்டைய நாணயங்களை' விற்பனை செய்வதைக் காணலாம். அதிலே காட்டப்பட்டுள்ள நீள்சதுர நாணயமானது மிகமிக அரியதாகும். இந்த அரிய VOC நாணயத்தைச் சில லட்சம் ரூபாய் கொடுத்து வாங்குபவர்களும் இருக்கின்றார்கள். அத்தகைய அரிய, சில லட்சம் பெறுமதியான நாணயங்கள் சிலவற்றை ஒருவர், காலிக் கோட்டை தெருவோரத்தில் கையிலேந்தி விற்பனை செய்கின்றார். பாரியளவில் வெளிநாட்டவர்கள் வரும் காலிக் கோட்டைப் பகுதியில் பரவலாக இந்த 'போலி பண்டைய நாணய விற்பனை' நடைபெறுகின்றது. பல வெளிநாட்டவர்கள் இலகுவாக ஏமாற்றப்படுகின்றார்கள். மேலும் இலங்கையிலே கண்டிப் பிரதேசம் உட்பட இன்னும் சில பகுதிகளில் 'போலி பண்டைய தங்க நாணயங்களை' உருவாக்கும் 'தொழில்' நடைபெறுவதாகக் குறிப்புகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/29/2024

## இராஜராஜனின் இலங்கை தங்க நாணயங்கள்



இங்கு காட்டப்பட்டுள்ள இரண்டு தங்க நாணயங்களும் இராஜராஜ சோழனால் வெளியிடப்பட்ட இலங்கைக்குரிய நாணயங்களாகும். இவற்றிலே மேலுள்ள நாணயத்துடன் ஒப்பிடும்போது கீழுள்ள தங்க நாணயத்தின் உண்மைத்தன்மையிலே சில கேள்விகள் எழும்புவது தவிர்க்க முடியாதுள்ளது. மேலுள்ள நாணயத்திலே கைவிரல்கள் ஐந்தும் தெளிவாக உள்ளபோதும் கீழுள்ள நாணயத்திலே கைவிரல்கள் ஒழுங்கில்லாமலும் எண்ணிக்கையில் குறைந்தும் காணப்படுகின்றன. மேலுள்ள நாணய உருவத்தின் பின்னங்கால் முட்டியின் வடிவத்துக்கும் கீழுள்ள நாணய உருவத்தின் பின்னங்கால் முட்டியின் வடிவத்துக்கும் வேறுபாடுகள் தெரிகின்றன. இவ்வாறு வித்தியாசங்களை நிரற்படுத்தலாம். இவற்றைவிட முக்கியமாக இரண்டு நாணயங்களினதும் வெட்டுமுகத் தோற்றத்தை நோக்கினால் கீழுள்ள நாணயத்தின் தடிப்பமானது சீரற்றதாகவும், பல வெட்டுக்கள் கொண்டும், பல இடங்களில் செப்பனிடப்பட்ட அடையாளங்களுடனும் உள்ளதை இலகுவில் கண்டுகொள்ளலாம். இவ்வாறான வித்தியாசங்களை ஒன்றுக்கு மேற்பட்ட ஒரே நாணயங்களை வைத்து ஒப்பிடும்போது மாத்திரமே கண்டுகொள்ளலாம்.







இவ்வாறு ஒப்பிடுவதன் வாயிலாக இந்த இரு நாணயங்கள் பற்றி பின்வரும் ஒரு முடிவுக்கு நாம் வரலாம் :
இரண்டு நாணயங்களில் ஒரு நாணயமானது (அனேகமாக கீழுள்ள நாணயமானது),

1) இராஜராஜ சோழன் காலத்திலேயே உருவாக்கப்பட்ட போலி தங்க நாணயமாக இருத்தல்வேண்டும்.

2) பண்டைய கால நாணயங்களுக்குக் காணப்பெறும் மவுசு காரணமாக, பிற்காலத்திலே உருவாக்கப்பெற்ற போலி தங்க நாணயமாக இருத்தல்வேண்டும்.

3) பண்டைய கால நாணயங்களுக்குக் காணப்பெறும் மவுசு காரணமாக, இராஜராஜன் காலத்திலே உருவாக்கப்பட்ட நாணயமொன்று சிறிது சேதமடைந்திருக்க, அந்த நாணயத்தை எடுத்து பிற்காலத்திலே உலோகம் சிறிது சேர்த்து, செப்பனிட்டு பண்டைய நாணயம் போன்றே உருவாக்க முயன்றிருக்கவேண்டும்.

இதிலிருந்து பண்டைய நாணயங்களை கொள்வனவு செய்வதிலும், போதியளவு ஒரே நாணயங்கள் இல்லாமல் ஆய்வு முடிவுகளை முன்வைப்பதிலும் உள்ள சிக்கல்கள் நன்கு புலனாகும்!

## ஞானம் 286 'பேசும் நாணயம்' போட்டி முடிவு

சென்ற இதழிலே கேட்கப்பட்ட கேள்விக்குச் சரியான விடை: 945 இறையால், 7 பணம், 0 துட்டு, 0 சல்லி என்பதாகும். சில போட்டியாளர்கள், தமிழ் எண் 9ஐ தவறாக 6ஆக கருதி, 915 இறையால், 4 பணம், 0 துட்டு, 0 சல்லி என்னும் விடையையும் அனுப்பியுள்ளார்கள். கூட்டல் சரியாக செய்யப்பட்டுள்ளதால் இரண்டு விடைகளும் சரியென்று ஏற்றுக்கொள்ளப்பட்டன.
குலுக்கல் முறையில் வெற்றிபெற்றவர் : **செ. கனகரெத்தினம்**, 975 – அன்புவழிபுரம், திருகோணமலை.
வெற்றியாளருக்கு ஆயிரம் வருட பழைய இராஜராஜ சோழனின் செப்பு நாணயம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**அடுத்த ஞானம் இதழ் (288ஆவது இதழ்), மே மாதம் 11ஆம் திகதி வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.**

தொடரும்

9 772478 034009
ISSN 2478-0340
PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 0112330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org